பழமொழித்தீபிகை.

443
[illegible]
SL/PR.

உ
சிவமயம்.

# பழமொழித்திபிகை.

இதில்

ஆய்ந்தெடுத்த பழமொழிகளும்

அவற்றிற்கு

## விளக்கவுரையும்

அடங்கியுள்ளன.

இது

பருத்தித்துறை

வே. ஆ. சிதம்பரப்பிள்ளை

இயற்றியது.

உ

அநாதைகள்,

தாழ்வகுப்பார், வலியோரால்

நைதலுறுவோர் முதலிய ஏழைமாக்களின்

மீதிரங்கி, அன்னோரை உத்தாரணஞ்செய்யுமாறு

உள்ளன்புடன் உழைத்து, தமது உடல் உயிர் பொருள்

மானமாதியவற்றைத் துறந்தோர் துறப்போராகிய

பரோபகாரிகள் பாதாரவிந்தங்களில்

இந்நூலைச் சமர்ப்பிக்கின்றேன்.

ஆக்கியோன்.

சிவமயம்.

# முகவுரை.

மூதறிவாளரின் யுத்தி அநுபவங்களினின்று திரண்டெழு
ந்து வழங்கிவரும் பழமொழிகள், கற்றோர்க்கும் மற்றோர்க்கும்
ஒருங்கே இலகுவாய் உள்ளத்திற் பதியும்வண்ணம் உண்மை
களை அறிவுறுத்துவதில் மற்றெவ்வகைப் பாவினங்களினுஞ் சிற
ந்து விளங்குகின்றன. இதுபற்றியேபோலும் சில அறிஞர் அப்
பழமொழிகளைத் திரட்டியும் விளக்கியும் நூல்கள் இயற்றிப்
பிரகடனமாக்கியுமுள்ளார். அந்நூல்களிற் சிலவற்றை நான் வா
சிக்கநேர்ந்துழி, அவற்றின்கணுள்ள சில பழமொழிகள் என்னு
ள்ளத்தில் அநேக அரிய உண்மைகளைக் கிளரச்செய்தன. ஆக
வே, அப்பழமொழிகளுக்கு விளக்கவுரை இயற்றி "பழமொழி
த்தீபிகை" எனப்பெயரிய ஒருநூல் பிரகடனஞ்செய்தல் லோ
கோபகாரமாகுமென்று ஓர் எண்ணம் என்மனத்தின்கண் எழு
ந்தது. அப்போது "மூடா! உன்னைக்காட்டிலும் மிகச் சிறந்த
அறிஞர் தமிழ்நாட்டின்கண்ணே அநேகரிருக்கவும், நீ இம்மு
யற்சியிற் பிரவேசித்தல் நகைப்பிற்கிடமாகுமே!" என மற்றோ
ரெண்ணம் எழுந்தது. இவ்வாறாகத் தடைவிடைகளாய்ப் பல
எண்ணங்களெழுந்து ஒன்றுடனொன்று போராடின. ஈற்றில்,
"எல்லாம் அறிந்தவரும் ஏதும்றியாதவருமில்லையெனும் இவ்வு
லக" த்தில் நீயும் உன்னால் "இயல்வதுகரவேல்"; ஒவ்வொருவ
ரும் சமட்டி சேவைக்காகத் தம்மாலியன்றதைச் செய்யா
தொழிதல் துரோகமாகும்" என உண்ணின்றோரெண்ணந்தோ
ன்றிற்று. ஆகவே, ஸ்ரீராமபிரான் இராவணன்மீது தொடுத்த
தருமயுத்தத்திற்காகச் சேனைகள் செல்லும்வண்ணம் அணை
கட்டப்பட்டபோது, அதனைப் பார்த்துக்கொண்டிருந்த அ
ற்ப பிராணியாகிய ஓர் அணிலும், தானும் அத்தருமகைங்கரிய
த்திற்குத் தன்னாலியன்றதைச் செய்யக்கருதிக்குதூகலத்துடன்
முற்பட்டமைபோல, நானும் இம்முயற்சியிற் புகுந்தேன். யான்
இம்முயற்சியிற் புகுந்தமைக்கு இதுவே காரணமன்றி, அதிக
ந்தெரிந்தோரின்மையன்று, நுண்ணறிவுடையேனெனும் அகம்
பாவமன்று, புகழ் அவாவுமன்று. இஃதிங்ஙனமிருக்க:

தமிழகத்தில் வழங்குகின்ற பழமொழிகளிற் பெரும்பாலன, திருவள்ளுவர் குறள் ஔவைமொழிகள் முதலியனபோலத் தம்பொருள்வளத்தில், பொருள்கொள்வோரது அறிவளவிற்கேற்பப் பொருளளவும் விரிந்து தருந்தன்மையுடையன. எனவே, ஒருவரது அறிவில் சிற்சத்தியினொளி எவ்வளவிற் பிரகாசமுற்றிருக்கின்றதோ அவ்வளவில் விசிட்டமும் நுண்மையுமுடையவுமான விளக்கவுரைகள் அமைத்தற்கு, அப்பழமொழிகள் இடந்தருவனவேயாம். இந்நூலுக்கு விஷயபீடிகைகளாக ஆய்ந்தெடுத்த பழமொழிகளுக்கு, நான் எனது சிற்றறிவிலெட்டியவாறே பொருள்கொண்டேன். அறிஞர் இதனினும் நுண்மையும் விரிவுமுடைய பொருள் கொள்வார்கள். இதுகிடக்க.

இந்நூலில் உபகதை சம்பந்தமாய் வழங்கிவரும் பழமொழிகளுஞ் சில உள்ளன. அவைகளின் சரித்திரச் சாராம்சங்களை எனது ஞாபகத்திலுள்ளவாறே யெழுதியுள்ளேன். ஆதலால், அச்சரித்திரங்கள், மூலநூல்களின்படி அல்லது கர்ணபாரம்பரியப்படி, தமது தாற்பரியத்தில் முரணுருவாயினும், வாக்கிய நடையில் சிறிது முரணுறவுங்கூடும். அதனை ஓர் குற்றமாக அறிஞர் எள்ளாரென்றே நம்புகின்றேன்.

இந்நூலின் வசனநடையும் பாங்கும் சிலருக்கு நூதனமாய்த் தோன்றல்கூடும். அவைகளை அவ்வாறு நவீனமாயமைக்க வேண்டுமென்று நானாகவே கருதி யமைத்தேனல்லேன். எனது சிந்தனையிலெழுந்த விஷயங்களை, அவற்றினர்த்தம் ஒருசிறிதும் பிறழாது உள்ளவாறே வெளியிடல் வேண்டுமென்னும் நோக்கமே என்மனத்தில் மேலிட்டுநின்றமையாலும், எனது தமிழ்ப் புலமைக்குறைவினாலுமே, இந்நூல் அவ்விதம் நவீனப்பாங்கிலமைந்திருக்கலாம். அதனைத் தமிழ்ப்புலவர்கள் பொறுப்பாராக.

"குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்."

நள ஹூ }
ஆடி மீ. }

வே. ஆ. சி.

"எப்பொருள்யார்யார்வாய்க்கேட்பினுமப்பொருண்
மெய்ப்பொருள்காண்பதறிவு." திருவள்ளுவர்.

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

பருத்தித்துறை; புலோலி

ஸ்ரீமத். வ. குமாரசுவாமிப்புலவரவர்கள்.

சொல்லியது.

## (நேரிசை ஆசிரியப்பா.)

சீர்சால் நித்தியப் பொருளறி தெளிவும்
பார்சா லநித்தியப் பண்பறி விவேகமு
முன்றவச் சார்பான் முதியோர் சார்பால்
ஒன்ற வுணருணர் வுதிக்குமே யாயினும்
யாந்தவம் புரிந்தோம் யாம்புரிந் திலமெனப்
போந்த சென்மத்தியல் புலப்படா வன்றியுந்
தாமே யுலகியல் தலைப்பட் டறிதற்
காமே பற்பல வாண்டுக ளவற்றுளும்
எய்திடு மவைசில வெய்தா தனபல
நொய்தினிற் பலவறி நுட்பமின் றாகுமே
ஆதலி னுலகிய லருகா தறிதற்
கோதிடத் தகும்வழி யொன்றுள தெதுவெனில்
நற்றமி ழறிஞர் நாடுக டோறுங்
குற்றமி லாதே கொளத்தகும் விடய
வித்தா ரங்களை மிகச்சுருங் கியமொழி
யுய்த்தா தரவி னுபயோ கித்து

வழங்கிய பழமொழி வழுவிலா வுத்திபோல்
விளங்கிய வொட்டணி போல்விதம் விதமா
வேறும் வகையா மிகவுண் டறிந்தாற்
பேறும் பலவாப் பெருகிய விவேகமுண்
டீதே யன்றியு மெவரொடும் பேசும்
போதே சுருக்கியும் புகலுதற் குதவும்
கச்சி யப்பருங் கம்பரு முதலாம்
உச்சியிற் கொளத்தகு முரவோர் பலருந்
தங்காப் பியங்களிற் சமயோ சிதமாய்
மங்கா தெடுத்து வழங்கினர் பழமொழி
ஆதலி னவைக ளறியத் தகுமென்
றோதலி னன்மை யுளதெனக் கருதிச்
சிறுவருங் கற்றுத் தெரிந்திடும் பொருட்டு
மறுவறு நூல்களில் வழங்கின திரட்டியுஞ்
சஞ்சரித் திடுதே யங்களிற் றக்கவர்
செஞ்சொற் பழமொழி சீர்பெறச் சேர்த்தும்
அவற்றின் பொருளு மமைத்துதா கரணமும்
கவற்சியின் றுணர்வகை காட்டு திட்டாந்தமும்
பரமார்த் திகமும் பலவா மிலௌகிகத்
திரமார் பாங்கு மொருங்கே தீட்டியும்
விடயா காரம் விளங்கிட விரித்துக்
கிடையா திதுவெனக் கேட்போர் வியந்திடத்
திருத்தகு பழமொழித் தீபிகை யியற்றிய
கருத்த னியாரெனிற் கழறுது மிலங்கை
வடபா கத்து மருங்கியாழ்ப் பாண
வடபா கத்து மகோததிக் கருகாம்
பருத்தித் துறையிற் பச்சிமத் துற்ற
வருத்தமி லல்வாய் வடக்கினில் வாசன்
வீறுடைச் சுகிர்தமும் வியன்செல் வமுமுறும்
ஆறு முகவேட் கருமைப் புதல்வன்
கல்விசெல் வங்களாற் கற்றோர் சார்பாற்
சொல்வித ரணங்களாற் சுருங்கா வியல்பினன்



வாய்மை யொழுக்கம் வழுவிலா நீதி
தூய்மை யாதியவுத் துங்கமு முள்ளோன்
நிதஞ் சிவசிந்தனை நிகழ்த்துஞ்
சிதம்பரப் பிள்ளைச் சீரோன் றனே.

---

## ஸ்ரீமத். ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள்

### கோடுத்த அபிப்பிராயம்.

பழமொழியாவது ஆன்றோர் அனுபவத்திற்கண்டு வெளியிட்ட வுண்மை வாக்கியங்களாம். அவை உலகத்தாருக்கு அறிவுவிளக்காயிருத்தலால் பழமொழித்தீபிகை யென்னும் பெயர் இந்நூலுக்கு ஏற்புடையதேயாம். பழமொழிகளோ கணக்கிறந்தன. அவற்றுள் ஒரொருவர்க்கு ஒரு சிலவே தெரிந்தனவாம். உண்மைப்பொருள் தெரியாது வழங்கப்படுவனவும்பல. பாடம் பிறழ்ந்து வழங்குவனவும் பல. ஆதலால் பழமொழிகளுள் முக்கியமானவற்றை யொருங்குதொகுத்துச் சுத்தபாடஞ்செய்து விரிவுரையும் மேற்கோளும் திருஷ்டாந்தமுமெழுதி அச்சிட்டு வெளிப்படுத்தியதற்குத் தமிழ்மக்கள் யாவரும் இந்நூலாசிரியருக்குப் பெரிதுங் கடப்பாடுடையராவ ரென்பது எனது கருத்து. இந்நூலாசிரியர் ஆங்கிலமுந் தமிழும் வல்லவர். நற்குடிப்பிறப்பும் நல்லொழுக்கமும் ஈசுவரபக்தியும் வாய்ந்த பெருந்தகை. லோகோபகாரமாக இன்னும் பலநூல்கள் இயற்றியும் இயற்றுவித்தும் வெளியிடுங் கருத்துடையவர்.

யாழ்ப்பாணம்
நாவலர்கோட்டம்.
1—9—1916.

இங்ஙனம்,
ஆ. மு.

---

ஓம்.

# பழமொழித்தீபிகை.

## ஆய்ந்தெடுத்த பழமொழிகளும்
அவற்றிற்கு
## விளக்கவுரையும்.

### 1. அக்கரை மாட்டுக் கிக்கரை பச்சை.

ஒரு துறையில் நின்று மேயும் பசுவுக்கு, தூரத்திலுள்ள துறைகள் செழிப்பான புல்லடர்த்தியுள்ள இடங்களாகத் தோன்றும்.

அதுபோல, சிலர், தாம் உற்றிருக்கும் நிலை உசிதமாயிருப்பினும் அதனை உபேட்சித்துப் புதிய புதிய நிலைகளையே ஆவலுடன் விரும்புவர். சிலர், தமதுதொழில் தமது தகைமைக்குப் பொருந்தியதாயிருப்பினும், அதனைவிட்டுப் புதியதோர் தொழிலையே நாடுவர்.

திருஷ்டாந்தமாக: கிருஷித்தொழிலாளன் சிலபோது தனதுதொழிலின் கஷ்டங்களை நினைந்து அத்தொழிலை வெறுத்து ஓர் பிரபுவின்கீழ் வேலைக்காரனாக அமருதலே தனக்குச் சௌகரியமாகுமென்று கருதுகின்றான். அவ்விதம் பிரபுவின்கீழ் வேலைக்காரனாக இருப்பவனோ, தனது அடிமைத்தனத்தையும், எஜமானன் முதலியோரின் கோபத்திற்கும் அதிகாரத்திற்கும், தானடங்கவேண்டியிருத்தலையும், சிலபோது நினைந்து வெறுப்புற்று, சுயாதீனத்தொழிலாகிய கிருஷித்தொழிலே சிறந்தது என்று! கருதுகின்றான்.

வர்த்தகனாயிருப்பவன், தனது தொழிலினும், இராசாங்க உத்தியோகமே சிறந்ததென்று கருதுகின்றான். அவ்விதம் இ

ராசாங்க உத்தியோகத்திலிருப்பவனோ, தான் மேலுத்தியோகத்தரின் தயவைப் பெறுதற்காக அஞ்சி அடங்கவேண்டியிருத்தலையும், அத்தொழிலிலுள்ள மற்றைய அசௌகரியங்களையும் நினைந்து, தனது உத்தியோகத்தினும வர்த்தகத்தொழிலே சுயாதீனமும் அதிகநயமுமுடையதென்று கருதுகின்றான்.

இங்ஙனமே பெரும்பாலர், தாம் உற்றிருக்கும் நிலையை விட்டுப் புதிய புதிய நிலைகளையே அடைதற்கு ஆவலுடன் ஆசிக்கின்றனர். இவ்வாறு ஒன்றைவிட்டொன்று பற்றியுழலுதல் மனத்திற்குச் சாந்தியை உண்டாக்காது. ஆதலால், ஒருவன், தனக்கு இயற்கையிலுள்ள ஜன்னியகுணத்திற்கும் செயற்கையாலுண்டான வினைச்சாதுரியத்திற்கும் பொருந்தியதொழிலையும் நிலையையுமே விரும்பித்தேடி, அந்நிலையிலிருந்து அபிவிருத்தியுற முயலுதலே விவேகமாகும்.

## 2. அடம்பங் கோடியுந் திரண்டால் மிடுக்கு.

அடம்பங்கொடி மிக நொய்மையான ஒரு கொடிப்பூண்டு. அக்கொடியை ஒருவன் மிக இலகுவாய் அறுக்கலாம். ஆனால் அக்கொடிகளில் பலவற்றைச் சேர்த்து ஒருமிக்க அறுப்பது அரிது.

அதுபோல, மனிதரிலும் ஒற்றுமையுடையோரைப் பிறர் ஜெயித்தல் அரிது. ஒருதேசத்தினர் தம்முள் ஒற்றுமையின்றிப் பலவேறுபட்ட சாரினராய்ப் பிரிவுற்றிருப்பாராயின், அவர்களைச் சொற்பதொகையினராகிய ஒருசிறிய தேசத்தினர்கூட மிக எளிதாய்ச் செயித்தல் கூடும். ஒருதேசம், கிருஷிகம் கைத்தொழில் வியாபாரம் அரசியல் முதலிய விஷயங்களில் க்ஷீணகதியடைதற்கு முக்கியகாரணம் ஒற்றுமையின்மையேயாம்.

எத்துறைகளிலும் ஒற்றுமையுடன் உழைப்போரே காரியசித்திபெறுவர். ஒருவன் தனித்து ஒரு தொழிலைச் செய்தலினும், பலருடன் கூடிச் செய்தல் அதிகநன்மையை விளைக்கும். இக்காலத்தில் கிருஷிகத் தொழிலிலாயினும் கைத்தொழிலிலாயினும் வியாபாரத்தொழிலிலாயினும், ஒருசங்க (Company)மாகப் பலர் சேர்ந்து முயற்சி செய்யின், தம் வாழ்க்கையில்



அதிக சாவகாசமும் ஊதியமும் சௌகரியமும் அடைவர். இவைகளெல்லாவற்றிற்கும் ஒற்றுமையே மூலகாரணமாகும்.

## 3. அடுத்தவீட்டுக்கூரை வேவுங்கால் தன் கூரைக்குமோசம்.

ஒருவீடு தீப்பற்றியெரியும்போது, அதனையடுத்துள்ள வீடுகளிலும் அத்தீ பற்றக்கூடும். எனவே, தன்வீட்டைப் பாதுகாக்கவிரும்பியவன், அயல்வீட்டையுந் தீப்பற்றியெரியாதபடி பாதுகாத்தல் வேண்டும்.

அதுபோல, பிரதிதேசத்தினரும் தமது தேசப்பொதுவிற்குண்டாகுந் தீங்குகளை, தமக்குமுற்ற தீங்கெனக்கருதி, அத்தீங்குகளை நிவிர்த்திக்க முயலல் வேண்டும். அவ்வாறின்றியொழுகுந் தேசத்தினர் நிச்சயமாக அதோகதி அடைவர்.

தேசப்பொதுவிற்கு விளையுந் தீங்குகள், சிலரையே பற்றும் ஏனையோரைப் பற்றா என்ற நியதியில்லை. அவை யாவரையும் பற்றக்கூடும்.

திருஷ்டாந்தமாக: ஒருதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் புடைவைகளுக்கு, அத்தேசத்தினர் ஒருபெருந்தொகை வரியிறுத்தல் வேண்டுமென்று ஓர் சட்டத்தை ஏற்படுத்தக் கருதியவர்களாய், ஒரு அரசினர் அத்தேசத்திலுள்ள ஒவ்வொருவரது சம்மதத்தையுந் தேடினார்களென்று பாவனைபண்ணிக்கொள்வோம். அத்தேசத்தில் யாவரேனும் அச்சட்டத்தை நிறைவேற்றும்படி, அதிகாரிகளின் முகத்தாட்சணியத்திற்காக அல்லது வேறுகாரணமாக உடன்படுவாராயின், அவர்களும் அச்சட்டத்தினாலேற்படும் நட்டங்களைப் பொறுக்கவேவேண்டி நேரிடும். இதுபோன்ற பிற திருஷ்டாந்தங்களையும் ஊகித்தறிக. இவற்றால், ஒருவன் தேசச்சமஷ்டி விஷயங்களுக்கு விளைக்குந் தீங்கை, தானும் தப்பாமல் அநுபவிக்கவே நேரிடுமென்பது புலப்படும். ஆதலால், தேசப்பொதுவிற்கேயாயினும், அல்லது அயலாருக்கேயாயினும் யாதேனுந் தீங்குண்டாகுமாயின், அத்தீங்கை நிவிர்த்திக்க ஒவ்வொருவருந் தம்தம்மாலியன்ற உதவி புரிதல் கடமையாம். அதுவே பரோபகாரமுமாம்.

## 4. அப்பனருமை அப்பன் மாண்டால் தெரியும் உப்பினருமை உப்பில்லாவிட்டால் தெரியும்.

தந்தையானவன் தன் மக்களை, ஊண் உடை முதலியவற்றால் குறைந்து வருந்தாவாறு பாதுகாக்கின்றான். மக்கள் தாமாகவே தமது வியவகாரங்களை நிருவகிக்குந் திறமையெய்தும் வரையில், தந்தையே குடும்பபரிபாலனத்திற்காக வேண்டிய வழிவகைகளைத் தேடுதலிலும், குடும்பப் பொதுவிற்கு நேருங் கஷ்ட நஷ்டங்களை நிவிர்த்தித்தலிலும், பொறுப்பை வகிக்கின்றான். எனவே, மக்கள் தந்தையின் ஆதரவின்கீழிருக்கும்வரையில், கஷ்ட நஷ்டங்களின்றிச் சௌகரியமாய்த் தங்கள் காலத்தைப் போக்குகின்றார்கள். ஆதலால் துன்பமே மலிந்துள்ள இவ்வுலகவாழ்க்கையில் நேருங் கஷ்டநஷ்டங்களையும் துயரங்களையும், தந்தையின் காலத்தில் மக்கள் பெரும்பாலும் உறைப்பாயுணரச் சந்தர்ப்பம் வாய்க்காது.

தந்தை இறந்தபின்னெனிலோ, மக்கள் தமது ஜீவியத்தைத் தாமே நடாத்தவேண்டிய பொறுப்பும், குடும்பப்பொதுவிற்குத் தற்செயலாய் நேருங் கஷ்ட நஷ்டங்களை நிவிர்த்திக்கும் பொறுப்பும் ஒருங்கே தம்மீதே சாரப்பெறுகின்றனர். அச்சந்தர்ப்பத்திலேதான், அவர்கள் தமது தந்தையின் அருமையை அநுபவமாயுணருகிறார்கள்.

இது பொதுவிதியான பழமொழிகளில் ஒன்றாகும். ஏனெனில், சில குடும்பங்களில் அரிதாய், தந்தையினும் மக்களே குடும்பவியவகாரங்களைத் திறமையாயும் அதிகமாயும் நிருவகித்தலுமுண்டாதலினென்க.

இனி, உப்பின் அருமையும் உப்பில்லாவிட்டாற்றான் தெரியும். உப்பு சர்வசாதாரணமாய்க் கிடைக்கக்கூடிய ஓர் வஸ்து. நாம் அருந்தும் உணவுகளில் பெரும்பான்மையானவைகட்கு உப்பே நல்லுருசியைத் தருகின்றது. அவ்வித உணவுகளை நாம் உப்பில்லாமல் புசிக்கும்போதுதான் உப்பின் அருமையை நன்கு அறிய நேரிடும்.



## 5 அம்மணதேசத்தில் கோவணங்கட்டியவன் பைத்தியகாரன்.

ஜனங்கள் நிருவாணமாய்த் திரிகின்ற தேசத்தில், கோவணங்கட்டியவன் பைத்தியகாரனென்று நூதனமாய்க் கருதப்படுவான் என்பது இதன் வாக்கியார்த்தம்.

இப்பழமொழி ஒவ்வொருதேசத்தினரின் மனோருசிகளும் நடையுடை பாவனைகளும் ஆசாரங்களும் பலவேறுபட்டேயிருக்குமென்னும் உண்மையை உணர்த்துதற்காகவே யெழுந்தது.

எவ்வாறெனில், இவ்வுலகத்தில் ஒரு ஜாதியார்க்கு நாகரிகமாயும் இலட்சணமாயுந் தோன்றுவது, மற்றொரு ஜாதியார்க்கு அநாகரிகமாயும் அவலட்சணமாயுந் தோன்றுகின்றது சகஜம். இதனால், மனிதர் தம் அகத்தே வளர்க்கும் மனோரதங்களுக்கும் மனோபாவங்களுக்கும் ஏற்றவிதமாகவே அன்னோரது அபிலாசைகளும் மனப்பாங்குகளும் ஒழுக்கங்களும் அமையுமென்பது புலப்படுகின்றது.

திருஷ்டாந்தமாக: சிலதேசத்தினர், பெண்கள் பட்சிகளின்இறகுகளைக் குடில்போன்ற தொப்பிகளிற் சொருகித் தலையில் அணிந்துகொள்ளலும், கூந்தல்களை விரிகோலமாய்ப் பரக்கவிட்டுக் குடுமி முடிதலும், அழகு என மதிக்கின்றனர். வேறுசிலதேசத்தினர், உடம்பின்கண்ணே எங்கெங்கெல்லாந் துவாரமிடல்கூடுமோ அங்கங்கெல்லாந் துவாரமிட்டுப் பலவிதரூபமானநகைகளைத் தொங்கவிடுதலே அழகு என மதிக்கினறனர். இனி, சிலர் மாரிகாலத்து மண்டூகங்கள் பற்பலவிதமாய்க் கத்துவதுபோன்ற சங்கீதவாத்தியங்களைத் திறமென்கின்றனர். வேறுசிலர் அவற்றை உவர்க்கின்றனர்.

சிலர் தமது அங்கங்களும் உடைகளும் தினப்படி சுத்தி செய்யப்படாதனவாயிருப்பினும், அவற்றை வெளிப்பார்வைக்கு அழகாகக் காட்டிக்கொண்டால், அதுவே சுத்தமாகுமென்று கருதுகின்றனர். வேறுசிலர் வெளிப்பார்வைக்கு அழகாயிராவிடினும், .அவைகளைத் தினப்படி நீரினாற் கழுவிச் சுத்திசெய்தால்தான், சுத்தமாகுமென்கின்றனர்.

சிலர், வாசஸ்தலங்கள் பொதுஸ்தலங்களாதியவற்றில்,சேறு அழுக்குப் பதனழிந்த வஸ்துக்கள் முதலியன மிகுந்துபுழுக்களும் ஈக்களுமுண்டாகியிருக்கும் இடங்களை அத்துணை அசுத்தமெனக் கருதுகின்றிலர். அல்லது, நாய் பூனை காகமாதியன புகுந்தாலும் அதிக குற்றம்பாராட்டுகின்றிலர். ஆனால், எத்துணைப் பரிசுத்தரேயாயினும், மனிதசாதியாரிற் சிலர் அவ்விடங்களிற் சென்றுவிடினோ பாரதூரமான அசுத்தமுங் குற்றமும் ஏற்பட்டுவிட்டனவென்று பதைபதைப்பர்.

இவ்வாறே, ஒவ்வொருதேசத்தவரும், ஒவ்வொரு ஜாதியினரும், தத்தம் பழக்கவாசனைகளுக்கும் மனோபாவங்களுக்கும் ஏற்றபடியே, நடையுடை பாவனை ஆசாரம் ஆதியவற்றில் ஆர்வங்கொள்ளுகின்றனர்.

ஆகவே, உலகமெல்லாம் கற்பனையினாலேயாகிப் பேதமுற்றுவிளங்குகின்றதென்பதையும், இதனால் ஒருவாறு அறியலாம்.

## 6. அரசனெவ்வழி அவ்வழிகுடிகள்.

அரசன் எவ்வழிபற்றி ஒழுகுகின்றானோ அவ்வழிபற்றியே குடிகளும் ஒழுகுவார்கள் என்பது இதன் தாற்பரியம்.

இவ்வுலகத்தில், வலியிலாதனவெல்லாம் வலியனவற்றிற்கு அடங்கியே தீருகின்றன. ஆகவே, யாவரினும் மேலான வலியவனாகிய அரசனுக்குக் குடிகள் அடங்கியே தீரவேண்டும்.

அரசன் கொடுங்கோலனாயிருப்பினுஞ்சரி, செங்கோலனாயிருப்பினுஞ்சரி அவன் தன் பிரஜைகள் எவ்வித சமயாசார மனோபாவங்களுடையராயிருக்கவேண்டுமென்று விரும்புகின்றானோ, அவ்விதமாகவே பிரஜைகளுங் காலாந்தரத்தில் ஆகிவிடுகின்றார்கள்.

ஆகவே, ஒருதேசத்தின் உயர்வு தாழ்வுகளுக்கு அரசனது மனோபாவமும் மூலகாரணமாயிருக்கின்றதென்பதை இதனால் அறியலாம்.

நீதிநெறிவிளக்கநூலாசிரியரும்,

“இகழினிகழ்ந்தாங்கிறைமகனென்று
புகழினுமொக்கப்புகழ்ப—இகன்மன்னன்



சீர்வழிப்பட்டதேமன்பதைமற்றென்செய்யும்
நீர்வழிப்பட்டபுணை.

என்று கூறியது, இப்பழமொழியை வலியுறுத்துகின்றது.

## 7. அரசன்குடுமியையும் பிடிக்கலாமென்று அம்பட்டவேலையைவிரும்புவதுபோல

ஒருவன் அரசனது குடுமியையும் பிடிக்கலாமென்று அம்பட்டவேலையைத் தேடுவானாயின், அவனை உலகத்தினர் கௌரவமாய் மதியார். எனவே, இவ்விஷயத்தில் அரசனது குடுமியைப் பிடித்தல் பெருமைக்குரியதன்று.

அதுபோல, சிலர் போலிப்பெருமைகளை, உண்மையான பெருமைகளென மயங்கிக் கருதி, தமது சுவதந்திரம் பெருமை சீர்மை முதலியவைகளை யிழந்து, பிறர்க்கு அடிமைகள்போலாகின்றனர். இன்னோரன்னர் இப்பழமொழிக்கு இலக்கியமாவர்.

## 8. அருமைமருமகன்தலைபோனாலும்போகட்டும் ஆதிகாலத்துஉரல்போகலாகாது.

அருமை மருமகனுடைய தலையைப் பேணினால் உரலுக்காயினும, உரலைப்பேணினால் தலைக்காயினும் சேதம்விளையக்கூடிய ஆபத்தான ஒரு தருவாயில், பழையகாலத்து உரலையே அவசியம் பேணவேண்டுமென்று கருதுதல் அதிமூடத்தனயான தீங்காகும்.

அதுபோல, சிலர் யாதேனும் ஒருவிஷயம் பழமைபற்றியதாய் மாத்திரமிருந்துவிடின், அதனை நல்லதோ தீயதோஎன்று சீர்தூக்கிப் பார்த்தற்குத்தானும் உடன்படாமல் கடைப்பிடித்து ஒழுகுவர். அவர்கள், நவீனவிஷயங்கள் எத்துணை நன்மை பயப்பனவாயினும் அவற்றை அங்கீகரியார். பழமைபற்றியவைகளைப் பேணவேண்டுமென்ற ஒரே நோக்கத்தினால், அவர்கள் அவசியம் பேணவேண்டியவற்றைப் பேணாமல் ஒழுகி அழிவுறுவர்.

ஒரு காரியசித்தியை அடைதற்கு நவீனசுலபசாதனங்கள் இருக்குமிடத்தும், பழமைபற்றியவைகளைக் கைவிடலாகாது

என்னும் பிடிவாதக் கொள்கையினால் அவற்றை அங்கீகரியாது ஒழுகுவோர், தமக்குத்தாமே இடர்தேடிக்கொள்பவராவர்.

திருஷ்டாந்தமாக: இக்காலத்தில், காசிக்குச்செல்ல விரும்பிய ஒருவன், றெயில் வண்டிகளையும் மோட்டர் இரதங்களையும் முன்னோர் வழங்கவில்லையே என்று கருதி, எருதுவண்டியிற் பயணஞ்செய்வானாயின், அவனை யாவரும் அதிமூடனெனவே மதிப்பர்.

யுத்தத்திற்குச் செல்வோன் ஒருவன், துப்பாக்கிகள் பீரங்கிகள் முதலிய நவீன ஆயுதங்களை ஆன்றோர் கையாளவில்லையே என்று கருதி, வில்லம்புடன் செல்வானாயின், அவன் மடையரெவரினுங் கடைத்தரமாவன். இவைபோன்ற திருஷ்டாந்தங்கள் இன்னம்பல உள.

இவ்வாறு ஜடவஸ்துக்களும் அவற்றின் உபயோகங்களும் காலகதிக்கியைய மாறுதலடையவேண்டியிருத்தல்போலவே, ஜனங்களின் ஆசாரமுதலியனவும் சீர்திருத்தமுறவேண்டியிருக்கும்.

காலத்திரயத்திலும் மாறுதலடையக்கூடாத தத்துவங்களும் ஆசாரங்களுஞ் சில உண்டு. அவைகளைத் தவிர்த்து ஏனையவைகளைப் பொதுவான தருமநெறிக்கு மாறின்றி, காலகதிக்கியையச் சீர்திருத்திக்கொண்டு போதலே அறிவாளிகள் செய்கையாம்.

ஒருசாரினர் பழையவழிகளினின்று மாறினும் மாறாவிடினும், உலகமும் காலமும் மாறிக்கொண்டேயிருக்கின்றன. ஆதலால், காலதேசவர்த்தமான சுற்றுச்சார்புகளுக்கியையத் தம்மையும் தமது நிலைமைகளையும் அமைத்துக்கொள்ளாதோர், ஈசுவரசங்கற்பத்தின்படி இயலும் காலகதியாகிய சண்டமாருதத்தின்முன் எதிர்நிற்க ஆற்றலின்றியவர்களாய் அதோகதிப்பட்டு அலமர நேரிடும்.

இக்கருத்துப்பற்றியே திருவள்ளுவநாயனார்,

"ஒத்ததறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்,
செத்தாருள் வைக்கப்படும்.

எனவும்,



"எவ்வதுறைவதுலகம் உலகத்தோ
டவ்வதுறைவதறிவு."

எனவும்,

"பருவத்தோடொட்டஒழுகல்திருவினைத்
தீராமையார்க்குங்கயிறு."

எனவும்,

"உலகத்தோடொட்டஒழுகல்பலகற்றுங்
கல்லாரறிவிலாதார்."

எனவுங் கூறியருளினார்.

மற்றோரறிஞர்,

"தொன்றுதோன்றியயாவவைதூயன
இன்றுதோன்றியயாவவைதீயன
என்றியம்பும்இயல்புணராமகன்
அன்றிமூதறிவாளரறைவரோ."

என்று கூறினார்.

## 9. அரைப்பணங்கொடுத்து அழச்சொல்லி ஒருபணங்கொடுத்து ஓயச்சொன்னதுபோல.

சிலர் தமக்குப் பொருட்செலவுண்டாக்கக்கூடிய அனாவசியகமான விஷயங்களில் தலையிட்டு, அதுகாரணமாய்ச் சங்கடம் நேர்ந்துழி அச்சங்கடத்தை நிவிர்த்திக்கவேண்டி, மறுபடியும் அதிகபொருள் செலவுசெய்யும்படியான இடருக்குள்ளாவர். இன்னோரன்னர் இப்பழமொழிக்கு இலக்கியமாவர்.

## 10. அலைகளடங்கியபின் ஸ்நானஞ்செய்வதுபோல.

ஒருவன் சமுத்திரத்தில் அலைகள் அடங்கியபின் ஸ்நானஞ்செய்யக் காத்துக்கொண்டிருப்பானாயின், முடிவில் அலைகள் அடங்குவதில்லையாக, ஸ்நானஞ்செய்யாதுபோக நேரிடும்.

அதுபோல, சிலர், ஒருகாலத்திலுஞ் சம்பவிக்காத காரியங்களைச் சம்பவிக்குமென்று காத்துக்கொண்டிருந்து, மு

டிவில் மோசம்போவர். இன்னோரன்னர் இப்பழமொழிக்கு இலக்கியமாவர்.

## 11. அல்லார்அஞ்சலிக்கு நல்லார்உதைமேல்.

தீயோரது வணக்கத்திலும், நல்லவர்களது வெறுப்பே மேலானதாகுமென்பது இதன் தாற்பரியம். நல்லார் உதை என்றது ஈண்டு நல்லவர்களது வெறுப்பைக் குறிக்கின்றது.

நல்லோர் தக்க காரணங்கொண்டே ஒருவனை உபேட்சிப்பார்கள், கண்டிப்பார்கள். ஆகவே, நல்லவரது உபேட்சை ஒருவனைச் சீர்ப்படுத்தற்கு ஏதுவாகும்.

நல்லாரல்லாப் பொல்லார் ஒருவனைப் போற்றி மதித்தல், தம் சுயநய நோக்கம்பற்றியேயிருக்கும். ஆகவே, அவர்கள்செய்யும் உபசார வணக்கங்களும் கபடநோக்கத்துடன் செய்யப்படுவனவேயாம்.

வில்லானது, தான் வளைவதற்குத் தக்கபடி அம்பை வேகமாய்ச் செலுத்தித் தீங்கு விளைத்தல்போல, மனக்கபடமுள்ள தீயோரின் வணக்கமும் பின்பு தீங்குவிளைத்தற்கு ஏதுவாகும்.

இக்கருத்துப்பற்றியே நாயனாரும்,

"சொல்வணக்கம் ஒன்னார்கட் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்."

என்றருளினார்.

## 12. அவன்கேட்டான்குடியன் எனக்கிரண்டுசுண்டுவோர்.

கள்விற்பவன், ஒரு குடிகாரனது குற்றத்தையெடுத்துக் கூறும்போது, அதனைக்கேட்ட மற்றோர் குடிகாரன், அவன்கிடக்கிறான் குடியன், நீ எனக்கு இரண்டு சுண்டு கள்வார், என்று கேட்பானாயின், அவன் முந்தியவனிலும் அதிக குற்றமுடையனாவன்.



அதுபோல, சிலர் பிறரது குற்றங்களை மிகச் சாதுரியமாய் எடுத்து முழக்கிக் கூறிக்கொண்டு, தாமே அவ்வித குற்றங்களுக்கு ஆளாகுவர். பிறருக்குச் சன்மார்க்க போதனை போதித்துக்கொண்டு, தாம் அவ்விதம் ஒழுகாதிருப்பர்.

ஈண்டு, சற்போதகர்களது அந்தரங்க ஒழுக்கங்கள் எவ்விதமிருப்பினும், அவர்களது பகிரங்கபோதனைகள் சிறந்தனவாயிருப்பின், அங்கீகரிக்கத் தடையென்னவென்று ஆசங்கை நிகழ்த்தலாம், எனின், அற்றன்று.

ஒருவன் சன்மார்க்க போதனைகளைப் போதிக்குனான்றே, தான் போதித்த போதனைகட்கு மாறாக ஒழுகுவோனாயிருப்பானாயின், அவனது போதனையைக் கேட்டல் உத்தமம் அன்று. ஆனால், முன்னர் ஒருகாலத்தில் குற்றமுடையோனாயிருந்து, பின்னர் அதனையுணர்ந்து திருந்தியவனது போதனை, பட்டுத்தெளிந்த அநுபவத்தைக்கொண்டுங் கூறப்படுவதால், அது கேட்பவர்க்கு அதிக அறிவையும் நன்மையையும் விளைக்கும். எனவே, அன்னோரது போதனைகள் உசிதமாய் அங்கீகரிக்கத்தக்கனவேயாம்.

## 13. அழுக்குக்குளிருக்கும் மாணிக்கம்.

வைரம் முதலிய இரத்தினங்களானவை, கரிச்சுரங்கம் மண் கல் முதலிய அற்பவஸ்துக்களிடத்தில் உற்பத்தியாகின்றன. இதனால், அவைகளின் மதிப்புக் குறைவுபடுதலில்லை.

அதுபோல, கீழ்க்குலங்களினின்றுஞ் சிலபோது, மகான்களும், சன்மார்க்க சற்குணசீலர்களும், இராஜரீக நிபுணர்களுந் தோன்றுகிறார்கள்.

துர்க்குணமுள்ள தந்தைதாயர்க்குச் சற்குணமுள்ள பிள்ளைகள் பிறக்கின்றார்கள். அழகில்லாத் தந்தைதாயர்க்கு அழகுள்ளபிள்ளைகள் பிறக்கின்றார்கள். இக்காரணங்களினால் அவர்களது மகிமை குறைவுபடுதற்குரியதன்று.

இக்கருத்துப்பற்றியே நீதிவெண்பா நூலாசிரியரும்,

"தாமரைபொன்முத்துச்சவரங்கோரோசனைபால்
பூமருதேன்பட்டுப்புனுகுசவ்வா— தாமழன்மற்
றெங்கேபிறந்தாலுமெள்ளாரேநல்லோர்கள்
எங்கேபிறந்தாலுமென்."

என்று கூறினர்.

### 14. அழுதபிள்ளை பால்குடிக்கும்.

பிள்ளைகள் பாலைவிரும்பி அழுதால் தாய் பாலூட்டுகின்றாள். இருபிள்ளைகளிருப்பின், அழுகிறபிள்ளைக்கே முதலில் ஊட்டுவாள்.

அதுபோல, எவரேனும் ஒருசலாக்கியத்தைத் தம்மின்மேம்பட்டோரிடத்தில் பெற விரும்பினால், அதனை முறையீடுசெய்துபெறல்வேண்டும்.

திருஷ்டாந்தமாக: ஒரு அரசனது ஆளுகையின்கீழிருக்கும்பற்பல சாகியத்தாரில் எவர்கள், தமக்கு வேண்டிய சலாக்கியங்களைப் (Privileges) பெறவிரும்பி முந்தி அதிக பிரயத்தனம் (Agitation) செய்துகொள்ளுகின்றார்களோ, அவர்களே முந்தி அச்சலாக்கியங்களைப் பெறுவார்கள்.

ஈசுவரனும், தன்னைநினைந்து கருணாமிர்தத்தைச் சுரந்தருளும்படி வேண்டுவோர்க்கே, கருணைபுரிந்து அருளுகின்றார்.

ஆதலால், யாவரேனும், தாம் விரும்புவன வலியவே கிடைக்குமென்று நினைத்துக்கொண்டிராமல், தமக்கு வேண்டியவற்றைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

### 15. அறிவுபெருத்தோன் அல்லல்பெருத்தோன்.

அறிவுபெருத்துள்ளவன் மிகு சங்கடமுடையவன் என்பது இதன் தாற்பரியம்.

ஏனெனில், அறிவுடையோன் கல்வியைக் கற்கக்கற்க, மேன்மேலும் அதில் அதிக ஆசைகொள்வான். ஆகவே அந்நூலைக்கற்கவேண்டும் இந்நூலை இயற்றவேண்டும் என்றபலவிதமான எண்ணங்களினாலும், தன்முன்னெதிர்ப்படும் விஷயங்களைக் காரணகாரிய முறையாய் ஆராய முயல்வதனாலும், மனோமுயற்சியதிகரிக்கப்பெற்றவனாகி, மனவமைதியடையான். அவன் சில சந்தர்ப்பங்களில் தானொழுகவேண்டிய நெறி இதுவோ அதுவோ என்று ஐயுறத்தக்க தருமசங்கடத்தின்பாற்பட்டுத் தடுமாறுவான். இவ்வாறான காரணங்களால் அறிவுடையவன் அல்லலுடையவன் என்று பழிப்பினாற் புகழ்ச்சி தோன்றப்பண்ணும் வஞ்சப்புகழ்ச்சியணிக்கு இலக்கியமாகப்புகழப்பட்டான்



இங்ஙனங் கூறினமையால், அறிவு அதிகரித்திருப்போரை இழித்துக் கூறினதல்லவென்பது புலப்படுகின்றது.

திருவள்ளுவநாயனார் "சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ் சுடச்சுடநோற்கிற்பவர்க்கு" என்று கூறியது இங்கும் பொருந்தியதேயாம். எங்ஙனமெனில், அறிவைநாடி, வருந்தவருந்த உழைப்போரெல்லாம் நோற்பவரினத்தைச் சார்ந்தவராவர். ஆகவே, அன்னோரது துன்பங்களெல்லாம் அஞ்ஞானத்தைத் தகிக்கும் அக்கினியாகி, அறிவானந்தத்தை விளைத்தற்கே ஏதுவாகும்.

### 16. அற்பர்சிநேகம் பிராணசங்கடம்.

அற்பராகிய தீயோருடன் நட்புக்கொண்டாடுவதால் கொடிய கஷ்ட நஷ்டங்களும் அவகீர்த்தியும் உண்டாகும். தீயவரது கூட்டுறவால் அவர்களது தீயகுணங்களும் தீயநடத்தைகளும் அண்டினவரையும் பற்றிக்கெடுக்கும். தீய சிநேகர் மனதில் ஒன்றுநினைத்து வெளியில் ஒன்றுபேசும் நீசக்கபடம் அவதந்தரம் நயவஞ்சகம் ஆதிய குணங்களுடையவராயிருப்பாராதலால், அன்னோரது சிநேகம் தீமையையே பயக்கும். இதுபற்றியே நாயனார், "மருவுகமாசற்றார்கேண்மை ஒன்றீய்ந்தும், ஒருவுக ஒப்பிலார்நட்பு" என்றருளினார்.

### 17. அன்பற்றமாமியாருக்குக் கும்பிடுவதுங்குற்றந்தான்.

தன்மருமகளிடத்தில் துவேஷங்கொண்ட மாமியார், மருமகள் நன்மையான செயல்களைச் செய்தாலும் தீமையாகவே கொள்வாள்.

அதுபோல, ஒருவன்மேல் குரோதமுளதாயின், அவன் செய்யும் நன்மையுந் தீமையாய்த் தோன்றும். விருப்புளதாயின் அவன்செய்யுந் தீமையும் நன்மையாய்த் தோன்றும்.

ஆதலால், மனத்தை நடுநிலைமையில்வைத்து விருப்பு வெறுப்பின்றி, விஷயங்களை ஆராயுமிடத்தே, அவற்றின் உண்மையான தன்மைகள் புலப்படும். இதுபற்றியே நீதிநெறிவிளக்கநூலாசிரியரும்,

"மனத்தகறுப்பெனினல்லசெயினும்
அனைத்தெவையுந்தீயவேயாகும்—எனைத்துணையும்
தீயவேசெய்யினுநல்லவாக்காண்பவே
மாசின்மனத்தினவர்." என்று கூறினர்.

## 18. ஆடுநனைகிறதென்று கோனாய்அழுகிறதாம்.

ஆடு நீரில் நனைகிறதேயென்று கோனாய் அழுமாயின், அது உண்மையான கருணையினாலுண்டான அழுகையாகாது.

அதுபோல, சிலர், ஒருவனை அல்லது பலரைக் கெடுத்துத் தாம் நன்மைபெறுதற்காக, தம்மால்கெடுக்கப்படுவோரிடத்தில் போலியநுதாபமும் கருணையுங்கொண்டு, பிறரால் அன்னாருக்குக் கேடுவராமல் பாதுகாப்பதுபோல நடிப்பர். இன்னோரன்னர் இப்பழமொழிக் கிலக்கியமாவர்.

## 19. ஆண்டிகள்கூடிமடங்கட்டுவதுபோல.

ஆண்டிகள் தமது இரத்தற்றொழில் ஓய்ந்தபின் ஒருங்கே கூடிச் சாவகாசமாயமர்ந்துகொண்டு, இன்னஇன்ன விதமாய்ப் பொருள் சேகரித்து இன்ன இன்னவிதமாய் ஒருமடங்கட்டி நிறைவேற்றவேண்டுமென்று தீர்மானிப்பார்களெனவும், மறுபடி அதனைப்பற்றிய சிந்தனை யாதுமின்றி, அவர்கள் தம்தம் இர



த்தற்றொழிலை நாடிச்சென்றுவிடுவார்களெனவும் ஓர் கற்பனைக் கொள்கையுண்டு.

அதுபோல, சிலர், பொதுநன்மைக்கு உழைக்கிறோமென்று அரங்கம்புகுந்து, இன்னஇன்ன விஷயங்களை நிறைவேற்றல் வேண்டுமென்று தீர்மானங்கள் செய்துவிட்டு, தம்வீடுசேர்ந்தபின் அத்தீர்மானங்களைப்பற்றிய சிந்தனை யாதுமின்றியிருப்பார்கள். இன்னோரன்னர் இப்பழமொழிக்கு இலக்கியமாவர்.

## 20. ஆண்டைகூலியைக்குறைத்தால் சாம்பான்வேலையைக்குறைப்பான்.

எசமானன், தன் வேலைக்காரனுக்குக் கொடுக்கவேண்டிய கூலியைக் குறைப்பானாயின், கூலிக்காரன் தான்செய்யும்வேலையை ஊக்கமாயும் கவனமாயும் செய்யாமல் தாழ்ச்சிப்படுத்துவான். எனவே, முதலாளியின் தொழிலுக்குக் குறைவுண்டாகும்.

ஆதலால், கூலியாளருக்குக் கொடுக்கவேண்டிய கூலியில் உலோபஞ்செய்தல் ஆகாது. கூலியைக் குறைத்தல் பாபமும் தன்தொழிலுக்கே நட்டமுமாய் முடியும்.

## 21. ஆயிரங்காக்கைக்கு ஒருகல்.

காகமானவை ஆயிரங்கூடினும் அவைகள் ஒருகல்லின்முன் எதிர்நிற்கமாட்டா. வலியது ஒன்றின்முன் மெலியனபல கூடினும் ஜெயங்கொள்ளமாட்டா.

அதுபோல, அறிவுடையானொருவன்முன் அறிவிலார் பலர்கூடினும் எதிர்நிற்கமாட்டார்கள். வித்தைத்திறம் அற்றோரின் விகாதங்கள் பல எதிர்ப்படினும், வித்வநிபுணர் அவைகளைச் சுலபமாய்த் தகைந்து ஜெயங்கொள்வர்.

ஒருசபையில் அறிவில் மேம்பட்டானொருவன் ஒருசாரிலும், மற்றையோரெல்லாம் ஒருசாரிலும் நின்று விவாதம் புரியினும், அறிவில்மேம்பட்ட அவ்வொருவனே ஜெயம் அடைவன்.

இக்கருத்துப்பற்றியே ஆன்றோரொருவர், "ஆயிரவராயினும் அறிவிலார் தொக்கக்கால், மாயிருஞாலத்து மாண்பொருவன் போல்கலார், பாயிருள்நீக்கும் மதியம்போற்பன்மீனும், காய்கலாவாகும்நிலா" என்று கூறினர்.

ஸ்ரீ தாயுமானசுவாமிகளும், "காகமானவைகோடி கூடினுமொருகல்லின்முன்னெதிர்நிற்குமோ கர்மமானவைகோடிமுன்னேசெய்தாலுநின் கருணைப்ரவாகவருளைத், தாகமாய் நாடினரைவாதிக்கவல்லவோ........" என்றருளினர்.

## 22. ஆல்பழுத்தால்அங்கே அரசுபழுத்தால்இங்கே.

பட்சிகள் எங்கெங்கே எம்மரத்தில் பழங்கள் நிறைந்திருக்கின்றனவோ, அங்கங்கே அம்மரத்திற்சென்று கூடி வசிக்கும். ஒருமரத்திலுள்ள பழங்கள் முடிந்துவிடின், அதைவிட்டு வேறு பழமுள்ள மரத்தை நாடிச் சென்றுவிடும்.

அதுபோல, ஒருவன் செல்வனாயிருக்கும்போது அவனை யாவரும் அண்டி உறவுநட்புப்பாராட்டி முகமன்பேசிப் பலவித நன்மைகளைப் பெறுவார்கள். அவன் வறுமையடைந்துவிடினோ ஏனென்றுங் கேளாமல் வேறு செல்வரை நாடிச் சென்றுவிடுவார்கள். இக்கருத்துப்பற்றியே "முட்டின்றொருவருடையபொழுதின்கண், அட்டிற்றுத்தின்பவராயிரவராபவே, கட்டலர்தார் மார்பகலியூழிக்காலத்துக், கெட்டார்க்குநட்டாரோஇல்" என்னும் கவியெழுந்தது.

## 23. இடம்அகப்படாததோஷம் மேத்தப்பதிவிரதை.

மனதிலே வியபிசாரஞ்செய்யவேண்டுமென்று ஆவலைவைத்துக்கொண்டு, சந்தர்ப்பவசதியீனங்களினால் அவ்விதஞ்செய்யாதிருப்பவள் பதிவிரதையல்லள்.

அதுபோல, இவ்வுலகில் பெரும்பாலர் சிலவிதமான பாவங்களுக்கும் குற்றங்களுக்கும் ஆளாகாமல் தப்பியிருப்பதற்கு



முக்கியகாரணம் சந்தர்ப்பவசதியீனங்களேயாம். அவ்விதமானோர்க்கு, சந்தர்ப்பங்கிடைத்துவிடின் குற்றம்புரிதற்குப்பின்னில்லார் என்பதை இப்பழமொழி உணர்த்துகின்றது.

## 24. இரண்டுபட்டஊரில் குரங்குங்குடியிராது.

எக்காரணம்பற்றியேனும் ஒரு ஊரவர்கள் நான் என்ற ஆணவத்தினால் இருகட்சிப்பட்டுக் குரோதம் வளர்த்து, தந்தம் கட்சியே வெல்லவேண்டுமென்று பிடிவாதங்கொண்டு நிற்பார்களாயின், அவ்வூரில் குரங்குகூடக் குடியிராது என்று அவ்வூரின் இழிமையை விதந்து கூறியவாறாயிற்று.

எனவே, நீதி யோக்கியம் பழிக்கஞ்சல் ஆதிய பெருந்தன்மைகளுடையோர், அவ்விதஞ் சீர்கெட்ட ஊரில் குடியிருத்தல் ஆகாது என்பது அருத்தாபத்தியாற் பெறப்படும்

பொறாமை ஆணவம் குரோதம் முதலியவைகளே ஒரு ஊரவர்கள் இருகட்சிப்படுதற்கு மூலகாரணங்களாயிருக்கும். எத்துணை அறிவு ஒழுக்கங்களுடையோராயிருப்பினும் மேற்சொல்லிய குணங்களுக்குச் சிறிதேனும் இடங்கொடுத்தவர் படிக்கிரமமாய்த் தீயோராகி மிருகசுபாவமுடையோராய் விடுவர்.

ஒருஊரில் பெரும்பாலோர் இவ்வித சுபாவமுடையோராய்விடும்போது, நல்லவர்கள் அங்குவசிக்கின் பலவித கஷ்டநஷ்டங்களுக்குள்ளாக நேரிடும். ஆதலால் அவர்கள் அடங்கி ஒடுங்கி இருக்கவேண்டி நேரிடும். அவ்விதம் இருக்கினும், அவ்வூரில் துஷ்டர்களின் ஆதிக்கமே மேலிட்டிருக்குமாதலால் அங்குவசிக்கும் யோக்கியரும் ஓர்ஞான்றில்லாவிடின் மற்றோர்ஞான்றிலேனும் துன்பத்திற்குள்ளாதல் திண்ணம். ஏனெனில், ஒவ்வொருகட்சியினரும் நல்லவர்களைத் தத்தம் கட்சிக்கே இழுக்கப் பிரயத்தனப்படுவார்கள். அப்போது நல்லோர் அவர்களது கேள்விகளுக்கு இணங்காவிடின் அத்தீயோர் கோபமூண்டு கோழைத்தனமான இழிந்த சதிச்செயல்களைக் கரந்துநின்று செய்யவுந் துணிவார்கள்.

அவ்வூரவர் சிலதருணங்களில், பகைமை பொங்குவதனால் கொடுமை மிகுந்து வலாற்காரமான குற்றச்செயல்களும் கலகங்களும் புரிவார்கள். அவதூறுசெய்வார்கள். இவ்வித குற்றமான செயல்கள் காரணமாய் நீதிஸ்தலங்களில் அவர்கள் விசாரிக்கப்படும்போது, யோக்கியராயுள்ளோர் சாட்சியாய் அழைக்கப்படவுங்கூடும். அப்போது உள்ளதைக்கூறினால் ஒருகட்சியாருக்கு அல்லது இருகட்சியாருக்குமே பாதகமுண்டாகக்கூடும். ஆகவே அவர்கள் குரோதங்கொண்டு சாட்சிகூறியயோக்கியருக்குந் தீங்குகளிழைப்பார்கள். இன்னோரன்ன காரணங்களால் இரண்டுபட்டஊரில் குடியிருத்தல் ஆகாது.

துஷ்டருக்கு அஞ்சித் தூரப்போதல் கோழைத்தனமென்று சிலர் கருதல்கூடும். அது தவறு. "போக்கணங்கெட்டவன் இராசாவிலும் பெரியவன்" ஆதலால், ஒருதுஷ்டன் நல்லானொருவனைக் கெடுக்கவேண்டுமென்று பிடிவாதங்கொண்டுநிற்பானாயின், அவன் தான்கெட்டாயினும், அந்நல்லவனைக் கெடுத்தல்கூடும். "தன் மூக்குப்போனாலும் பிறர்க்குத் துர்ச்சகுனமாயிருக்கவேண்டும்" என்று கருதி இழிதொழில் புரிவோர் சாதுக்களாகிய நல்லோருக்கு இடுக்கண்விழைத்தற்குத்தானே பின்னிடுவார்கள்.

எத்துணைத் துஷ்டராயிருப்பினும், அவர்களையுந் திருத்தி வாழ்தலே பெரியோர் கடனாகும். அன்றி, தாம் பிரிந்துபோதல் நன்றல்லவேயென ஆசங்கைநிகழ்த்தலாமெனின், கல்விசெல்வம் ஆதிக்கம் ஆதியனவுடையோரில் பெரும்பாலார் அங்ஙனம் அயோக்கியராகாமலிருப்பாராயின், நல்லோரும் அவர்களுடன் ஒத்துத் தீயோரைத் திருத்திவாழல் தக்கதே. அப்படியன்றித் தலைமைஸ்தானத்திலிருப்பவர்களே பொறாமை குரோதமாதியனஉடையராய்த் தீயநெறிபற்றி ஒழுகும்போது, மிக அற்பதொகையினராகிய நல்லோர் செய்யத்தக்கது யாதுளது? அன்னோர் ஒதுங்கிவிடுதலே உத்தமமாம். இதுபற்றியே "கொம்புளதற்கைந்து குதிரைக்குப் பத்துமுழம், வெம்புகரிக்காயிரந்தான்வேண்டுமேவம்புசெறி, தீங்கினர்தங்கண்ணில்தெரியாததூரத்தே, நீங்குவதே நல்லோர்நெறி." என்றகவியும் எழுந்தது. ஔவையாரும்,



"தீயாரைக்காண்பதுவுந்தீதேதிருவற்ற, தீயார்சொற்கேட்பதுவுந்தீதே—தீயார், குணங்களுரைப்பதுவுந்தீதேயவரோ, டிணங்கியிருப்பதுவுந்தீது" என்று கூறியுள்ளார்.

## 25. இராட்டினம்வருகிறது வண்டியைவிலக்கு.

இராட்டினம் என்பது நூல்திரிக்குங் கையந்திரம். அதைத்தெருவிற்கொண்டுசெல்லும்போது வண்டியெதிர்ப்படின் இலகுவாய் விலக்கிக்கொள்ளக்கூடிய இராட்டினத்தையே விலக்கவேண்டியது. அவ்விதஞ்செய்யாமல், வண்டிக்காரனை வண்டியை விலக்கும்படி கேட்டல் பரிகசித்தற்குரியமடைமையாகும்.

அதுபோல, ஒருசெயலை அவசியஞ்செய்தே தீரவேண்டியதாகவும், அங்ஙனஞ் செய்யும்போது ஒருவர் அல்லது ஒருபகுதியார் யாதேனும் வசதியீனமுறுதல் இன்றியமையாமலும் வேண்டப்படுமாயின், அவ்விஷயங்களில் சொற்பவசதியீனம் உறுபவர்களே அதைப் பொறுக்கவேண்டியது.

திருஷ்டாந்தமாக: சுயபாஷையாளரே நிறைந்துள்ள பொதுக்கூட்டங்கள் பிரசங்கமண்டபங்களாதியவற்றில் ஜனங்கள் விளங்காத அன்னியபாஷைகளில் பிரசங்கிக்கின்றவர்களும், பொதுஜனங்களின் நன்மைக்கும் அறிவுக்குமென்றே பத்திரிகைகளுக்கு விஷயங்கள் எழுதும்போது அவைகளைச் சாதாரணஜனங்கள் விளங்கத்தக்க பாஷையிலெழுதாமல் தம் வசதியையே முக்கியமென்று கருதிப் பிறபாஷையில் எழுதுகின்றவர்களும், பொதுஜனங்களின் நன்மைக்கென்றே ஏற்பட்ட இராசாங்கவிவகாரங்களை, பெரும்பாலரான ஜனங்களின் சுயபாஷையிலே நடத்தாமல், ஒருசிலரான தம் வசதியையே முக்கியமென்று கருதித் தமக்கு இலகுவான பாஷையிலே நடத்துகின்றவர்களுமாகிய இன்னோரெல்லாம் இராட்டினம்வருகிறது வண்டியை விலக்கு என்று கேட்பவனை நிகர்ப்பர்.

## 26. இல்லதுவராது உள்ளதுபோகாது.

முன்னர் இல்லாத வஸ்து உண்டாகாது. இயல்பாய் உள்

ளவஸ்து அழிந்தொழியாது என்னும் தத்துவப்பொருள் நிறைந்துள்ளது இப்பழமொழி.

பிதாவிலிருந்து புத்திரனும் வித்திலிருந்து மரமும் உண்டாதலால் முன் இல்லாதது உண்டாகின்றதென்றும், தோற்றமுடையன எல்லாம் அழிந்தொழிதலால் உள்ளது இல்லாது போகின்றதென்றும் கருதல் ஆராய்ச்சிக்குறைவாம். நாம் காரணகாரியமுறைப்படி நுணுகியாராயின், இப்பிரபஞ்சப்பொருள்கள் உருவழிந்து கண்ணுக்குத் தோன்றாதபடி நிலைமாறுதலையே அழிவு என்றும், பல அணுக்கூட்டங்களின் தொகுதியையே உற்பத்தியென்றுங் கூறுகிறோமெனக் காண்போம். வாஸ்தவத்தில் இல்லாதது உண்டாவதுமில்லை, உள்ளது போதலுமில்லை என்பதே தத்துவமாம்.

## 27. இரவலுடைமை இசைவாயிருக்கிறது.
## என்பிள்ளையாணைகொடுக்கமாட்டேன்.

பிறர்க்குரியபொருளை இரவலாக வாங்கிய ஒருவன், அப்பொருள் தனக்கு உவப்பாகவும் பொருத்தமாகவும் இருக்கிறதென்று, அதனை உடையானிடத்தில் கொடாமல் பிணங்குவானாயின், அவன் உலுப்தனாவான்.

அதுபோல, சிலர் பிறர்க்குரிய உடைமைகள் எக்காரணமாகவேனும் முன்னரே தம்கைக்குள் அகப்பட்டுவிடின், அவைகளை நியாயரீதிப்படி, உரியோருக்குக் கொடாமல் ஒவ்வொரு சாட்டுக்கூறி வல்லடிவழக்குரைப்பர்.

## 28. இலையும்பழுப்பும் எங்குமுண்டு.

மரங்களில் பச்சிலையுண்டானால் பழுப்பிலையும் உண்டாகும்.

அதுபோல, இவ்வுலகத்தில் எத்தேசத்திலும் எவ்விஷயங்களிலும் உயர்வும் தாழ்வும் உண்டு. எத்துணைச் செல்வமிக்க நாட்டிலும் தரித்திரருஞ் சிலரிருப்பர். எத்துணைக்கல்விமிக்க தேசத்திலும் பாமரருஞ்சிலரிருப்பர். எத்துணை நல்லொழுக்கமுடையதேசத்திலும் தீயொழுக்கமுடையோருஞ் சிலரிருப்பர்.



## 29. ஈட்டிஎட்டுமுழம்பாயும்
## பணம்பாதாளம்வரைக்கும்பாயும்.

ஈட்டியினால் ஒருவனைக் குத்தவேண்டுமாயின், சமீபத்திலிருப்பவனையே குத்தலாம். பணமோ ஒருவன் எத்தேசத்தில் எவ்விடத்திலிருப்பினும் அங்கெல்லாம் சென்று தீங்கு புரியும்.

வாக்கியார்த்தத்தின்படி நோக்கினால் பணம்எவ்விதம் ஒருவனுக்குத்தீங்கு புரியும்என்று ஆசங்கை நிகழும்எனின், பணம் நேரே காரணமாவதில்லையாயினும், பணத்தைக் கூலியாய் ஈய்ந்தால் இவ்வுலகில் மனிதரால் சாத்தியமானவைகளெவற்றையும் செய்விக்கலாமென்ற கருத்துப்பற்றியே இங்ஙனங்கூறியது.

ஈட்டி ஒருவனது உயிரை வதைக்குமேயன்றி வேறுவிததீங்கு புரியமாட்டாது. பணத்தினால் ஒருவனுக்கு எவ்வித கொரேமான தீங்குகளையும் புரிவிக்கலாம். பணத்தைக் கூலியாய்க் கொடுத்தால் எவ்வித இழிந்த செயலையுஞ் செய்தற்கு இவ்வுலகில் மனிதமிருகங்கள் யதேஷ்டமாயிருக்கின்றன.

இப்பிரபஞ்சத்தில் மிகத்தாழ்ந்த பதவிமுதல் அதிஉயர்ந்த பதவிவரையிலுள்ள மனிதரில் சிலரே பணத்தின் ஆதிக்கத்திற்கு அகப்படாமலிருக்கின்றனர். ஏனையோரில் சிலர் அரைக்காசுக்கு அற்ப இழிதொழில் புரிவார்கள். சிலர்பகிரங்கத்தில் யோக்கியர்போல நடிப்பினும் அந்தரங்கத்தில் கைலஞ்சம் வாங்கிக்கொண்டு அயோக்கியத்தொழில் புரிவார்கள். சிலர் சொற்பதொகைக்குத் தம்யோக்கியத்தை இழக்காராயினும், தமக்கு வேண்டியஅளவு பெருந்தொகைப்பணம்கிடைத்தால் தகாதசெயலுக்கும் உடன்படுவர். சிலர்கைலஞ்சம்போலன்றி வேறுவகையில்கைலஞ்சமாய்ப் பொருளைப்பெற்றுக்கொண்டு தகாதசெயல் புரிவார்கள். இவ்விதம் கைலஞ்சம்வாங்குவோரிற் சிலர், தாமே அத்தகாச்செயலுக்கு நேர்காரணமாயிராமல் தமது கடமையைச் சரியானபடி கவனியாமல் கண்சாடையாய் விடுவதனால், கைலஞ்சங்கொடுத்தோரது மனோபீஷ்டத்தைப் பூர்த்திசெய்விப்பர். இவ்வாறே அவரவர்க்குரிய விலையைக்கொடுத்தால் அவ்

விலைக்குத் தமது உடல் உயிர் ஆத்மலாபம் மானம் பெண்டிர் பிள்ளை முதலிய யாவற்றையும் விற்கத் தயாராயிருப்பவர்கள் அநேகருளர்.

ஒருவனைக் கெடுக்கவேண்டுமென்று பிடிவாதங்கொண்டவன், மேற்சொல்லிய இழிதொழில்களுக்கும் உடன்படக்கூடிய ஏவற்பசாசுகளைக் கூலிக்குப் பிடித்துக்கொண்டால், ஒருவனது வாழ்க்கைநடையின் ஒவ்வொருபாதையிலும் பொறிக்கிடங்கேற்றிக் கரந்துநின்று கலங்கவைத்தும் கழுத்தறுத்தும் கொடிய தீங்குகள் புரியலாம். சன்மார்க்கனொருவனைத் துன்மார்க்கனென, நம்பத்தக்கவிதமான சிருஷ்டிக் கதைகள் பரப்பி மானபங்கஞ்செய்யலாம். இவ்வாறே ஜீவகாருண்ணியமில்லாதவர்கள் பணத்தைத் தகாதவழிகளிலுபயோகிக்கில், அவர்களால் செய்யக்கூடாத தீங்கு ஒன்றுமில்லை.

பணத்தைத் தகாதவழிகளில் உபயோகிக்கின் இத்தனை கொடிய தீங்குகளுண்டாதல் போலவே, அதனை நல்வழிகளிலுபயோகிக்கின் அத்தனை நன்மைகளுமுண்டாகும். ஆதலால் பணத்தைத் தகாதவழிகளிலுபயோகித்தல் அதிபாவமாகும்.

### 30. உலகத்துக்குஞானம்பேய் ஞானத்துக்குஉலகம்பேய்.

உலகம் என்றது இங்கு சாதாரண ஜனங்களையும், ஞானம் என்றது ஞானியையும் குறிக்கின்றன.

உலகத்தவர் பெரும்பாலும் லௌகீக இன்பங்களிலும் பெருமைகளிலுமே அவா மிக்குடையோராகி, அவற்றையெய்தற்கான கருமங்களையே செய்துகொண்டு ஒழுகுகின்றனர். அவர்களது மனத்துள் பிணி மூப்புச் சாக்காடுகளைப்பற்றிய பயமும் உலகநடையின் சங்கடங்களும் உறைப்பாய் நுழைதலில்லை. வயிற்றுப்பிழைப்பினிமித்தம், தருமங்களை அதருமங்களாகவும், அதருமங்களை உண்மையான தருமங்களாகவும், தமதுசௌகரியங்களுக்கியைய ஏற்படுத்திக்கொண்டு ஒருவரையொருவர் வஞ்சித்துப் பிழைப்பர் உலகத்தவர் பலர். அவர்களது செ



யல்களெல்லாம் சிறுவீடு கட்டியதினடுசோற்றையுண்டுண்டு தேக்குசிறியார்களின் செயல்கள்போலவே, ஞானிக்குத் தோன்றும்.

இனி, ஞானியோ லௌகிக இன்பங்கள் நிலையற்றனவென்றும், அவைகளின் முடிவில் துன்பமே தொடருகின்றனவென்றும், அவ்வின்பங்களைத்தானும் அநுபவிக்குங்கால் மனம் திருப்தியடையாமல் ஒன்றைவிட்டொன்று பற்றியுழலுமென்றும், எல்லாம் யோசிக்கும்வேளையில் பசிதீரவுண்பதும் உறங்குவதுமாகவே முடியுமன்றிக் கண்டபலன் வேறிலதாகுமென்றும் உணர்ந்து மனம் அடங்கியிருப்பன். உலகத்தவர் தனக்கிழைக்கும் இகழ்ச்சி புகழ்ச்சிகளையும், இன்பதுன்பங்களையும் கவனியாமல், மத்தர்பேயரொடு பாலர்தன்மையதுமருவி நிற்பன். ஆகவே, உலகத்தவர்க்கு ஞானி பேயனாய்த் தோன்றலும், ஞானிக்கு உலகத்தவர் பேயராய்த் தோன்றலும் நூதனமல்ல.

ஸ்ரீ. மாணிக்கவாசகசுவாமிகள் “சகம்பேயென்று தம்மைச்சிரிக்க நாணதுவொழிந்து நாடவர்பழித்துரை பூணதுவாக” என்றும், ஸ்ரீ தாயுமானசுவாமிகள் “நான்பேய்போலிருக்கவுலகம் சுற்றிநகைசெய்யவேயுலையவிட்டாயெனில்” என்றும் “பாலரொடு பேயர்பித்தர் பான்மையெனநிற்பதுவே சீலமிகுஞானியர்தம் செய்கைபராபரமே” என்றும் அருளிய திருவாக்குகள் இப்பழமொழியை உறுதிப்படுத்துகின்றன.

### 31. ஊமைக்குத்தேத்துவாயன் உயர்ந்தவாய்ச்சாலகன்.

ஊமைக்குக் கொன்னிக் கொன்னிப் பேசுவோன் யாவரினுஞ் சிறந்த நாவலனாய்த் தோன்றுவான்.

அதுபோல, அறிவீனர் பாமரவித்துவான்களின் பேச்சைக்கேட்டு, அவர்களை உண்மையான அறிஞரென மதித்து மயங்குவர்.

ஒருவன், மதியீனரே பெரும்பாலும் நிறைந்துள்ள ஒருகூட்டத்தில் யுத்திக்கு ஒவ்வா விஷயங்களையும் தங்குதடையின்

றிச் சாதுரியமாய்ப் பிரசங்கிப்பானாயின், அவைகளைக் கேட்டுத் தம் சுயபுத்தியினால் உண்மையை அறியும் ஆற்றலின்றி, அல்லது ஆட்டுமந்தைகளைப்போலக் குருட்டுத்தனமாய்ப் பின்பற்றும் சுபாவத்தினால், அப்பிரசங்கியை மிக அறிவாளியென்றும் நாவலன் என்றும் கொண்டாடுவோர் இப்பழமொழிக்கு இலக்கியமாவர்.

### 32. எட்டாதபழம் புளிக்கும்.

ஒருமரத்தின் உயர்ந்த கொம்பில் நல்லகனியிருந்து அது கைக்கு அகப்படாதிருக்குமாயின், சீ! இதுபுளிக்கும் என்று தம்மனத்தையே போலிவெறுப்படையச் செய்வது சகசம்.

அதுபோல, சிலர் யாதாயினுமொன்றைப்பற்றி விரும்பி அதுகிட்டும்வண்ணம் கூடியவரையும் பிரயாசப்பட்டும் கிட்டாதபக்குவத்தில் அதை நல்லதன்று என இகழ்வர். சிலர், லௌகிகபோகங்களை அநுபவிக்க ஆவலை மனத்தில் வைத்துக்கொண்டும் அவைகள் கிடைத்தல் அசாத்தியமென்று நம்பிக்கையிழந்த மனச்சோர்வினால் பகிரங்கத்தில் துறவிகள்போல வேஷம் பூணுவர். இன்னோரன்னர் இப்பழமொழிக்கு இலக்கியமாவர்.

### 33. எண்ணெய்க்குடமும் வெறுங்குடமும் முட்டினால் எதற்குச்சேதம்?

எண்ணெய்க்குடமும் வெறுங்குடமும் ஒன்றுடனொன்று மோதினால் வெறுங்குடத்திற்கு அதிகசேதமுண்டாகாது. எண்ணெய்க்குடம் உடையுமானால் குடத்தின் சேதத்துடன் எண்ணெயின் சேதமுஞ் சேர்ந்து அதிகநட்டம் விளையும்.

அதுபோல ஒருகனதனவானும் ஒரு அற்பனான அயோக்கியனும் எவ்விஷயத்திலேனும் ஒருவருடனொருவர் எதிர்த்துக்கொள்வாராயின், கனதனவானுக்கே அதிகசேதமுண்டாகும். அயோக்கியனுக்கோ இழத்தற்குப் பொருளுமில்லை, மானமுமில்லை. எனவே, சேதமாவதும் ஒன்றுமில்லை. ஒருபோது, பெரியவனுடன் எதிர்த்த வல்லவன் என்று பாமரரிடத்தில் பொய்க்கீர்த்திமாத்திரம் பெறுவன்.



ஆனால் கனதனவானோ வென்றாலுஞ்சரி தோற்றாலுஞ்சரி பொருட்சேதமும் முயற்சிக்கேடுமுற்று, பாமரரின் இகழ்ச்சிக்கும் பாத்திரமாவான். ஆதலால், "துஷ்டரைக்கண்டால் தூர விலகு" என்றபடி அற்பர்களுடன் எதிர்க்காமல் ஒதுங்கிக்கொள்வார்கள் பெரியோர்.

### 34. எதிரிக்குச்சகுனத்தடையென்று மூக்கையறுத்துக்கொள்ளுகிறதா?

தனது பகைவனுக்குத் தீங்குவிளைக்கவேண்டுமென்று கருதிச் செய்யுந் தீங்கு தனக்குமே பெரிய தீங்கை வருவிக்குமாயின், அத்தீங்கைச் செய்யலாமா? செய்யக்கூடாது என்பது இதன் தாற்பரியம்.

தன் சத்துருவேயாயினும் பதிற்றீங்கு செய்யாதிருத்தல் மிகமேலான பெருங்குணமாகும். ஆனால், அவ்விதஞ் சகித்திருக்கக்கூடிய அறிவும் ஜீவகாருண்ணியமும் பொறுமையும் ஞானிகளுக்கேயன்றி மற்றையோர்க்கு வாய்த்தல் அரிது. ஆதலால், உலகத்தவர் பெரும்பாலும் தம் சத்துருவுக்குப் பதிற்றீங்குபுரிதலே சகசம். இவ்வாறு புரிவோரிலும் சிலகசடர் தமது மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனத்தடையாயிருந்தாலே போதும் என்பதற்கினமான செயல்களைப் புரிவர். இன்னோரின் இழிகுணத்தை விளக்குவது இப்பழமொழியாம்.

### 35. எத்தனைஏழையானாலும் எலுமிச்சங்காயத்தனை பொன்னில்லாமற்போமா.

இப்பழமொழி ஒரு சரித்திரசம்பந்தமாய் வழங்குவது. அதன் சாராம்சமாவது:

ஒரு அரசன் தன் பிரசைகளின் பொருளாதாரநிலையை அறிய நோக்கங்கொண்டவனாய், பலரிடமும் விசாரணைபுரிந்துவருங்காலத்தில், ஒருநாள் தனக்கு க்ஷவரம்பண்ணும் அம்பட்டனொருவனை, தன்குடிகள் செல்வமுடையராயிருக்கின்றார்களா

வென்று வினவினன். அவ்வம்பட்டன் சிறிதுசிறிதாய்ச் சேர்த்து ஒரு எலுமிச்சங்காயளவு பொன் அக்காலத்தில் வைத்திருந்தமையால், தன்னைப்போலவே எல்லாரும் சேர்த்து வைத்திருப்பார்களென்று கருதி, எத்துணை ஏழையானாலும் எலுமிச்சங்காயத்தனை பொன்னில்லாதவரில்லை என்று விடை பகர்ந்தான். ஆகவே, இப்பழமொழியும் வழங்குவதாயிற்று.

தம்மைப்போலவே வறுமை கஷ்டமில்லாதவராய் ஏழைகளுமிருப்பார்களென்று கருதி, சாதாரணசனங்களின் கஷ்டநஷ்ட முறையீடுகளைக் கவனியாமல் உதாசினஞ்செய்யும் மேலுத்தியோகத்தர் பிரபுக்கள் முதலியோர் இப்பழமொழிக்கு இலக்கியமாவர்.

### 36. எய்கிறவனெய்தால் அம்புஎன்னசெய்யும்.

ஒருவனால் எய்யப்பட்ட அம்பு தீங்குவிளைக்குமாயின், அது எய்தவனது குற்றமேயன்றி அம்பினது குற்றமாகாது.

அதுபோல, மேலுத்தியோகத்தரது அல்லது எசமானது கட்டளைப்படி ஒருவன் தன் கடமையை நிறைவேற்றும்போது பிறர்க்குத் தீங்கு உண்டாகுமாயின், அக்கட்டளையையிட்டோரிற் குற்றங்கூறலாமேயன்றி, தன்கடமையை நிறைவேற்றியவனிடத்தில் கோபங்கொள்ளல் நீதியன்று இதுபோன்ற ஏனையவற்றை ஊகித்தறிக.

### 37. எலிக்குத்திண்டாட்டம் பூனைக்குக்கொண்டாட்டம்.

பூனை எலிகளின் மத்தியிற் புகுந்தால் அவற்றைப் பிடித்துப் புசித்துக் களிப்பெய்தும். ஆனால் எலிகள்பாடோ திண்டாட்டமாய்விடும். பிராணசங்கடமாய்விடும்.

இவ்வாறே, இவ்வுலகில் மெலியனவெல்லாம் வலியனவற்றிற்கு இரையாகி, பலவற்றிற்குத் திண்டாட்டமாவது சிலவற்றிற்குக் கொண்டாட்டமாய் முடிகின்றது. பலரைக்கெடுத்தே ஒருவன் செல்வனாகின்றான். ஒருதேசத்தினரைக் கெடுத்தே மற்றொருதேசத்தினர் செல்வம் ஆதிக்கமாதியன எய்துகின்றனர்.



இவ்விதமே ஒவ்வொரு சீவரும் தாம்தாம் பிழைத்திருத்தற்குப் போட்டி (Struggle for Existence) யிடுதலிலேயே ஒருவரையொருவர் மடிக்கின்றனர். கெடுக்கின்றனர்.

### 38. எல்லாம்அறிந்தவனுமில்லை ஏதுமறியாதவனுமில்லை.

வித்தைகள் அளவிறந்தனவாயிருக்கின்றன. மனிதரின் ஆயுளோ சொற்பம். இவ்வாறு கல்வி கரையிலவாயும் கற்பவர் நாள் சிலவாயும் இருத்தலால், ஒருவன் சர்வவித்தைகளிலும் நிபுணனாதல் அசாத்தியம். ஆதலால், எல்லாம் அறிந்தவனில்லையென்றாயிற்று.

எப்படிப்பட்டவனாயினும் யாதேனும் ஒருவிஷயத்திலாயினும் திறமையெய்தாதிருப்பவனுமில்லை. மகாவித்துவான்களின் அறிவுக்கு எட்டாத ஒருவிஷயத்தை சாதாரண அறிவாளியொருவன் அறிந்தவனாயிருக்கவுங்கூடும்.

இக்கருத்துப்பற்றியே ஸ்ரீதாயுமானசுவாமிகள் "எல்லாமறிந்தவரு மேதுமறியாதவருமில்லையெனுமிவ்வுலகம்" என்றும்,

ஔவைப்பிராட்டியார் "எல்லோர்க்குமொவ்வொன்றெளிது" என்றும், ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள் "முற்றுமுணர்ந்தவரில்லைமுழுவதூஉங், கற்றனமென்று களியற்க—சிற்றுளியால், கல்லுந் தகருந் தகராகனங்குழாய் கொல்லுலைக் கூடத்தினால்" என்றுங் கூறினார்கள்.

### 39. ஒருகோபம்வந்துகிணற்றில்விழுந்தால் ஆயிரஞ்சந்தோஷம்வந்தாலும்எழுந்துவரமுடியாது.

யாதேனுங் கோபங்காரணமாய் மனநிதானந் தவறி ஆத்திரம்மிகுந்து, புத்தியீனமும் ஆபத்துமான காரியங்களைத் தீர்க்காலோசனையின்றிச் செய்வோர், அதனாலுண்டாகுந் தீங்கை ஒருகாலத்திலும் நிவிர்த்திக்கமுடியாமல் வருந்த நேரிடும். ஆதலால், அவ்விதகாரியங்களைச் செய்யலாகாது.

### 40. ஒழுக்கம் உயர்குலத்தில்நன்று.

ஒருவன் உயர்குலத்தில் பிறந்தவனாயிருத்தலினும், நல்லொழுக்கமுடையவனாயிருத்தலே மேலாகும்.

உயர்குலத்திற் பிறந்தானொருவன் பொய் கொலை களவு அவதந்தரம் கோள் தறுகண்மை முதலிய துர்க்குண கன்மங்களுடையவனாயிருப்பின், அவனிலும் தாழ்குலத்திற் பிறந்த குணசீலனான சன்மார்க்கன் சிறந்தவனாவான். உயர்குலத்திற் பிறந்தவனேயாயினும், கல்வியறிவொழுக்கமற்ற துர்க்குணத்தீயோன், உலகத்தவர்க்கே ஒரு தொற்றுநோய்போலாகிப் பலரைக்கெடுத்துவிடுவான்.

ஒருவன் தாழ்குலத்திற் பிறந்தவனேயாயினும், சீவகாருண்ணியம் சற்குணம் சன்மார்க்கம் பெருந்தகைமை தேசாபிமானம் கல்வியறிவு முதலியனவுடையனாயின், அவன் உலக்த்தவர்க்கே ஒரு தேடற்கரிய தேட்டம்போலாகி, அநேகநன்மைகள் செய்வான். ஆதலால், ஒழுக்கமுடையானே உயர்குலத்தவனாவான். சிலர் குலத்திற்குத் தக்கபடியே குணகர்மங்களுமிருக்குமென்பர். பெரும்பான்மை அவ்விதமிருக்குமேயன்றி, சிறுபான்மை மாறியுமிருக்குமென்பதை எவராலும் மறுக்கமுடியாது ஒழுக்கமுடைமையே உயர்குலமாகுமென்பதை யமைத்தே திருவள்ளுவநாயனாரும் "ஒழுக்கமுடைமை குடிமை இழுக்கமிழிந்தபிறப்பாய்விடும்" என்று கூறினர்.

### 41. ஓரக்கண்ணனைப்பழிக்கிறான் ஒற்றைக்கண்ணன்.

சிலர்தாம் அதிககுற்றமுடையராயிருந்துகொண்டு, பிறரிடத்திலுள்ள சொற்ப குற்றத்தைப் பெரிதாய்க்கொண்டு பழித்துத்திரிவர். தமது குற்றங்களை ஆய்ந்தறிந்து, அடங்கியிரார். இன்னோர் பிறரைப்பழித்தல் தம்மையே பழித்தல்போலாம்.

### 42. ஔவையார்மேலும்குற்றமுண்டு அண்ணாவியார்மேலும்பழுதுண்டு.

இம்மாயாவுலகத்திலுள்ளோரில் சிறிதேனுங் குற்றமில்லாதிருப்போரிலர் என்பதை இப்பழமொழியுணர்த்துகின்றது.



கர்மவசத்தின்பாற்பட்டமையாலேயே சீவர்கள் இவ்வுலகில் உற்பவிக்கின்றனர். எப்போது கர்மவசத்தரானாரோ அப்போது குற்றத்திற்குமுரியராய்விட்டனர். ஆகவே, மாயைக்குட்பட்டு மனிதராய்ப் பிறந்தோர், குணம்மேலிட்டும் குற்றங்குறைந்துமிருக்கக்கூடுமேயன்றி, சிறிதுங் குற்றமற்றோராயிருத்தல் சாத்தியமன்று. பரிபூரணஞானிகள் மனிதத்தன்மைகள் மாறித் தெய்வத்தன்மையுடையோராய்விடுதலால், அவர்கள் இவ்விதிக்குப் புறம்பானவர்களே.

சிலர் தாம் சிறிதுங் குற்றமற்றோரென்று தம்மைத்தாமே மதித்திருத்தல்கூடும். அவர்கள், தமது குற்றம் தமது அறிவுக்கே தோன்றாமலிருத்தலினால்தான், அவ்விதங்கருதுவர். ஆனால், சிலர் அநேகவிஷயங்களில் குற்றமற்றோராகவேயிருக்கின்றார்கள். அவர்களும், நுணுகியாராய்ந்து அறியுமிடத்து, யாதேனுமோர் விஷயத்திலேனுங் குற்றமுமுடையராகவே காணப்படுவர். இவ்விதமானோர், பாவமும் குற்றமுமான செயல்களைத் தம்மனச்சாட்சிப்படி தவிர்த்தே நடப்பார்களாயினும், சிலவிதமான குற்றங்களைப் பாவமல்லவென்று தவறாய்க் கருதியும் ஒழுகுவார்கள். நிதர்சனமாக சிலர் பஞ்சபாதகங்களாகியவற்றைத் தவிர்த்து ஒழுகுமிடத்தும், தாம் பொருளினால் அதிகமுட்டுப்பாடுடையராயிருப்பின் தம் குடும்பத்தின் பரிபாலனத்திற்காகச் செல்வரிடத்தில் பொருளை ஏமாற்றிப் பெறுதல் அல்லது நம்பிக்கைத்துரோகமாய்க் கவர்தல் அத்துணை அதிகபாவமல்லவென்று கருதி ஒழுகுவர். சிலர் ஆபத்துக்குப் பாவமில்லையென்று பொய் கூறுவர். சிலர் சன்மார்க்கமும் யோக்கியமுமுடையரேயாயினும் வியபிசார தோஷத்திற்குட்பட்டிருப்பர். சிலர் பஞ்சபாதகமாதிய பாவங்களுக்குட்படாதவரேயாயினும், பொறாமை கபடம் அவதந்தரமாதிய துர்க்குணங்களுடையராயிருப்பர். சிலர், மேற்சொல்லிய குற்றங்கள் யாதுமில்லாதவராயிருப்பினும், "நான் சாஸ்திரவிதிவிலக்குகளினின்று தவறாதொழுகிய பரிசுத்தனாயிருக்கின்றேன். ஆதலால், யாவரினும் மேம்பட்டிருக்கின்றேன்" என்று தம்மையே மேலாக மதித்து அகம்பாவமுடையோராய், ஈற்றில் ஆத்மசுகம் பெறுதற்கே அநரு

கராய்விடுகின்றனர். ஆதலால் பரிபூரணஞானிகள் தவிர, ஏனையோரெல்லாம் ஒவ்வோர்குற்றத்திற்கேனும் ஆளாகியேயிருப்பர்

ஸ்ரீ தாயுமானசுவாமிகள் “குற்றங்குறையக் குணமேலிடவருளை, யுற்றவரேயாவிக்குறவாம்பராபரமே” எனவும், “குற்றங்குறைந்து குணமேலிடுமன்பர்கூட்டத்தையே முற்றுந்துணையெனநம்புகண்டாய் சுத்தமூடநெஞ்சே” எனவும், திருவள்ளுவநாயனார், “அரியகற்றாசற்றார்கண்ணுந்தெரியுங்கா, லின்மையரிதேவெளிறு” என்றுங் கூறியவற்றை உற்றுநோக்கின் இப்பழமொழி உண்மையென்றே புலப்படும்.

## 43. கசடருக்குயோகம்வந்தால் கண்ணுந்தெரியாதுகாதுங்கேளாது.

மனிதரில் கசடராகியவர்களுக்குச் செல்வம் அதிகாரம்முதலியன கிடைத்தால், அவர்கள் நான் என்ற அகம்பாவமிக்குடையோராகி, நல்லது இன்னது தீயது இன்னது என்று தெரியாமலும், பெரியோர்மொழிகளைக் கேளாமலும் ஒழுகுவர். தாம் வெல்வதே கருமமாயிருப்பர்.

அவர்கள், தமக்குக்கிடைத்த செல்வங்களைத் தருமச்செயல்களுக்கு ஈயாமல், எழுந்தமானத்தில் தம்மனத்திற்குப் பிடிக்காத அயலாரைக் கெடுத்தற்குச் சதிசூழ்வதற்கான இழிதொழில்கட்கும், துட்டர் தீயோர் வேடக்காரர் புரட்டர்களுக்குமே வாரியிறைப்பார்கள். தம் வெற்றிப்பாட்டையும் கீர்த்தியையும் விரும்பித் தகாவழிகளில் செலவிடுவார்கள். தமக்குக்கிடைத்த அதிகாரத்தைக் குரங்கின் கைக்கொள்ளிபோலாக்கி, நல்லோர்க்கு இடுக்கண் விளைப்பதற்கும் தீயோர்க்கு உதவி புரிதற்கும் உபயோகிப்பார்கள். இக்காரணம்பற்றியே பெரியோர், “செல்வம்வந்துற்றகாலைத் தெய்வமுஞ் சிறிதுபேணார், சொல்வனவறிந்துசொல்லார்சுற்றமுந்துணையும்நோக்கார், வெல்வதேகருமமல்லால் வெம்பகைவலிதென்றெண்ணார், வல்வினைவிளைவுமோரார்மண்ணின்மேல்வாழுமாந்தர்” என்றும், “உடைப்பெருஞ்செல்வத்துயர்ந்தபெருமை, அடக்கமி லுள்ளத்த னாகி—நடக்கையின, ஒள்ளியனல்லான்மேல்வைத்தல்குரங்கின்கைக், கொள்ளிகொடுத்துவிடல்” என்றுங் கூறினார்கள்.



## 44. கடல்வற்றினால்கருவாடுதின்னலாமென்று உடல்வற்றிச்செத்ததாங்கொக்கு.

கடல்நீர் வற்றினால் அதிலுள்ள மீன்களெல்லாம் இறந்துபோகவே, அவைகளை இலகுவாய்ப் பிடித்துத் தின்னலாமென்று ஒருகொக்குக் காத்துக்கொண்டிருக்குமாயின், ஈற்றில் கடல்வற்றப்போவதுமில்லை, கொக்குக் கருவாடு தின்னப்போவதுமில்லை.

அதுபோல, ஒருகாலத்தும் சம்பவிக்கப்போகாத காரியங்களைச் சம்பவிக்குமென்று காத்துக்கொண்டிருந்து, ஈற்றில் ஏமாந்து வருந்துவோர் இப்பழமொழிக்கு இலக்கியமாவர்.

## 45. கடுகுபோனஇடமாராய்வார் பூசினிக்காய்போனஇடந்தெரியாது.

சிலர் தமது பொருளுக்குண்டாகுஞ் சொற்பநட்டங்களை, சாதுரியமாய் நாடியறிவர். ஆனால், பெருநட்டங்களையும், நாள்விகிதமாய் விளைநது பெரிதாகும் நட்டங்களையும், அறியமாட்டார். புத்திவியவகாரசாதுரியம் முதலியன குறையப்பெற்றிருத்தலினாலேயே, அன்னோரது புத்தியில் அந்நட்டங்கள் தோன்றுவதில்லை. இவ்விதமானோர் தம்வாழ்க்கையில் நீடியகாலமுஞ்செல்வராயிருத்தல் அரிதாகும்.

## 46. கடைத்தேங்காயைஎடுத்து வழிப்பிள்ளையாருக்குஉடைத்தாற்போல.

தன்சொந்தப்பொருளைக் கொடுத்துக் கிரயத்திற்கு வாங்காமல், பிறர்க்குரிய தேங்காயைக் களவாயெடுத்துக்கொண்டுபோய், வழியிலெதிர்ப்பட்ட பிள்ளையாருக்கு உடைத்தல் தருமமன்று.

இவ்விதமே, சிலர் அநியாயமான செயல்களைச் செய்துவிட்டுக் கோயில்களில் பூசை திருவிழாக்கள் செய்வித்தால் பாவ

ந்தீர்ந்துபோமென்று கருதி ஒழுகுவர். சிலர், நம்பிக்கைச்சொத்துகளை அப்பொருளுக்குரியோர் பதறிக் கதறிப் பரிதபிக்கும் வண்ணம், முற்றுகவோ அல்லது ஒருபகுதியையோ கவர்ந்து, அதனொருபாகத்தைக் கோவிலுக்கு ஈய்ந்துவிடின், அல்லது தருமத்திற்குச் செலவுசெய்துவிடின், பாவமுண்டாகாதென்று கருதுவர். சிலர் ஒருவனது பொருளை அபகரிக்கும்நோக்கமாக நீதிஸ்தலங்களில் வழக்காடும்போதுகூட, பிள்ளையாரே! இவ்வழக்கை எனக்கு நன்மையாகவே தீர்ப்பித்தால், உனக்கு ஆயிரம்மோதகமும் படைத்துத் தேங்காய்களுமுடைப்பேன்" என்றவிதமான நேர்கடன்களும் சங்கற்பிப்பர்.

இவ்விதமான செயல்களெல்லாம், தெய்வத்திற்குக் கைலஞ்சங்கொடுத்தல்போன்ற செயல்களேயாம். ஆதலால் விதித்தனசெய்தலினும் விலக்கியன ஒழித்தலே முக்கியமாகும்.

தெய்வபக்தியிற் சிறந்து விளங்கிய சில மகான்கள், விதித்தனசில செய்தற்காக விலக்கியன தவிராமலும் ஒழுகியிருக்கின்றார்களேயெனின், அது லௌகிகத்தவர்க்குப் பொருந்தாது எனவிடுக. ஏனெனில் நீந்துதலில் திறமையுடையோன் நீரின்கண் தன் கைகால்களைத் துழாவாமலும் மிதந்திருக்க இயன்றவனாவான். அவ்விததிறமையற்றோன், அவனைப்போலத் தானுஞ்செய்யத்துணிவானாயின், நீரினுள் மூழ்கியேவிடுவான். அதுபோல, தம்செயலென்றுணராமல் ஈஸ்வரன் செயலேயென யாவற்றையுங் கருதியொழுகுவோராகிய ஞானிகளின் செயல்களைப்பார்த்து லௌகிகத்தவரும் ஒழுகுவாராயின், அவர்கள் அதோகதிப்படுதல் திண்ணம். இக்கருத்துப்பற்றியே நீதிநெறி விளக்கநூலாசிரியரும்,

"இசையாதபோலினு மேலையோர்செய்கை
வசையாகாமற்றையோர்க்கல்லால்—பசுவேட்டுத்
தீயோம்பிவான்வழக்கங்காண்பாரையொப்பவே
ஊனோம்பிஊன்றின்பவர்." என்று கூறினர்.

## 47. கண்டதுகற்கப்பண்டிதனாவான்.



தான் காணும் நூல்களெல்லாவற்றையும் ஒருவன் கற்றுவருவானாயின், அவன் காலாந்தரத்தில் பண்டிதனாவன்.

பலநூல்களையுங் கற்பவனொருவன் அந்நூலாசிரியர்களின் அறிவு தன்னில் பதியப்பெறுவான். எனவே, பலவிஷயங்களிலும் அறிவுடையோனாகிப் பாண்டித்தியமும் எய்துவன்.

அதமமத்திமமான நூல்களைக் கற்றல் உசிதம் அன்றேயெனில், அன்னம் பாலையும் நீரையும் பிரித்துப் பாலையுண்ணல்போல, விவேகியான மாணாக்கன் குற்றங்களைந்து குணங்களையே கிரகிப்பான் என்று அறிக.

குற்றங் குணம் இரண்டையும் ஒருங்கே கிரகிக்கும் கிளிபோன்ற மாணாக்கரும் ஈற்றில் திருந்தி அறிவெய்துவர்.

## 48. கல்வியழகே அழகு.

ஆடவர்க்கேயாயினும் மாதர்க்கேயாயினும், கல்வியுடைமையே உண்மையான அழகாகும். உடம்பினழகும், உடையழகும் நகையழகுமாகிய பிற அழகுகள் உண்மையான அழகுகளாகா.

பிரசித்தகூட்டங்கள் கொண்டாட்ட சபைகளாதியவற்றில் கூடியிருப்போர் சபைப்பழக்க வழக்கங்களிலும் பிரசங்க சம்பாஷணைகளிலும் சேரவேண்டி நேரிடும். அச்சமையங்களில் அறிவாளிகள், சபைப்பழக்க வழக்கமாதிரிகளினாலும், நாகரிகம் கல்வியறிவு முதலியவற்றினாலுமே ஒருவனை அல்லது ஒருத்தியை மதிப்பர். புறச்சுத்தத்திலும் அகச்சுத்தமே விசேடமுடைத்தாதல்போல, புறஅழகிலும் அகஅழகாகிய கல்வியழகே சிறந்த அழகாகும். கேவலம் பாவைகள்போல விலையுயர்ந்த ரத்தினாபரணங்களையும் பட்டாடைகளையும் சுமப்பதனால் கண்ட பலன் யாதுமில்லை.

இதுபற்றியே நீதிநெறிவிளக்க நூலாசிரியரும்,

“கற்றார்க்குக்கல்விநலனேகலனல்லால்
மற்றோரணிகலம்வேண்டாவாம்—முற்ற
முழுமணிப்பூணுக்குப்பூண்வேண்டாயாரே
அழகுக்கழகுசெய்வார்.”

என்று கூறினார்.

### 49. கழுதையறியுமாகந்தப்பொடிவாசனை.

சுகந்தமான சுண்ணத்தின் அருமையைக் கழுதை அறியாது. அதுபோல, சிலவிதமான வித்தைகள் பொருள்கள் முதலியவற்றின் அருமையை அவ்வவற்றின்பெருமையை யறியாதார் உணரமாட்டார்கள்.

### 50. கட்குடித்தவனுக்குக்கள்ஏப்பம் பால்குடித்தவனுக்குப்பால்ஏப்பம்.

ஒருவன் புசித்த உணவின்மணமே ஏப்பம்விடும்போதுமுண்டாகும். அதுபோல, ஒருவன் தான்விரும்பிக் கற்ற நூல்களின் தன்மைபோலவே குணம் பேச்சு ஒழுக்கம் முதலியனவும் பொருந்தியிருப்பன். அசுத்தமனமுடையோன் உள்ளொன்று நினைத்துப் புறம் ஒன்றுபேசித் தனது கபடத்தை வெளியிடுவான். சுத்தமனமுடையோன், தன்னகத்திற் கரவின்றி வாக்கும் மனமும் ஒத்திருப்பான். இவைபோன்ற பிறவற்றையும் ஊகித்தறிக.

### 51. கள்விற்றுக்கலப்பணஞ்சம்பாதிப்பதைவிடக் கற்பூரம்விற்றுக்காற்பணஞ்சம்பாதிப்பதுமேல்

அநியாயமானவழிகளால் அதிகமானபொருள் சம்பாதிப்பதைக்காட்டிலும், தருமமானவழிகளால் சிறிதுபொருள் சம்பாதிப்பது விசேடமாகும்.

கள்விற்பதால் அதிகலாபமடையினும், அக்கள்ளைப் பருகினோர் தமக்கும் தம்பெண்டிர் பிள்ளை அயலார் அன்னியர் யாவர்க்கும் கூடாதவராகிக் கொடிய தீங்குகள் புரிவதால், அத்தொழில் தருமமான தொழிலன்று.



இவ்விதம் அதருமமான தொழில்களும் உலகத்தில் சிலவுள. ஆதலால் அவ்விததொழில்களைச்செய்து உலகத்தில் தீமையைப் பெருக்காமல், பிறர்க்கு நன்மையான தொழில்களையே செய்து பொருள் சம்பாதித்தல் வேண்டும். இக்கருத்துப் பற்றியே, ஔவையார் “ஈதல் அறம் தீவினைவிட்டீட்டல் பொருள்” என்றார்.

### 52. கறக்கஊறும்ஆவின்பால் கற்கஊறும்மெய்ஞ்ஞானம்.

பசுவில் பால் அதிகமாய்க் கறந்து வழக்கப்பட்டால், முன்னிலும் அதிகமாய்ப் பெருகி ஊறும். கல்வியையும் ஒருவன் கற்கக்கற்க மெய்ஞ்ஞானம் மேன்மேலும் வளர்ந்து வரும்.

சிலர் பத்திநெறிநிலைநின்று விரதத்தோடுதவம்பல இயற்றினால், அதுவே ஞானத்தை நேரே விளைக்கும் என்று கருதி அறிவைப் பெரிதாகப் பாராட்டார். சிலர், “நாம் அதிகம் கற்பதேன்? கற்றோரெல்லாம் கற்றபடியொழுகுகின்றார்களா? இல்லையே! ஆதலால் அதிகம் கற்பதில் பிரயோசனமில்லை” என்று கூறித் தமது மௌட்டிகத்தை வெளியிடுவர். இவ்வாறு அறிவைத்தேடுதலில் சிரத்தையில்லாதோர் தாமதகுணத்தின்வசப்பட்டவரேயாவர்.

தானே நூல்களை வாசித்தேனும் அல்லது சிரவணமனனங்கள்செய்தேனும் அறிவைத்தேடமுயலாவிடின், மெய்ஞ்ஞானம் விளைதல்அரிது. கல்வியின்றியுஞ் சிலர்ஞானிகளாய் விளங்கியிருக்கின்றார்களேயெனின்; அவர்களும் முற்சனனங்களில் கல்விகேள்விகளினால் அறிவுடையோராயிருந்த பூர்வவாசனையினாலேயே அவ்விதஞானம் எளிதில் வாய்க்கப்பெற்றவரென்றறிக.

கல்வி, அறிவு, கற்றபடிநின்று அநுபவத்துணர்தல், ஆகிய மூன்றும் காரணகாரிய முறையாயுள்ளன. ஒருவன் ஆரம்பத்தில் அறிவுக்குரிய விஷயங்களை அர்த்தமுணராமல் குருட்டுப்பாடமாகவே, பிறரது உதவிகொண்டு கற்கின்றான். அது செயற்கைக் கல்வியாகும். தான் கற்றவைகளைக் காலக்கிரமத்தில் தனது அநுபவத்திலும் ஒட்டியுணர்ந்தபின்பே, அவைகள் அ

வனுக்கு அறிவாகப் பரிணமிக்கின்றன. அவ்விதம் பரிணமித்த அறிவே ஈற்றில் ஞானமாக விகாசமுறுகின்றது. ஆகவே, அவை ஒவ்வொன்றும் தாம் பரிபாகமுறுங்காலம்வரையிலும் வெளித்தோன்றாமல் அவ்வியக்தமாகவேயிருக்கும். அவ்விதமிருத்தல் பற்றி, கல்வியின் அருமையை உணராது உபேட்சித்தல் அறிவீனமாகும்.

ஒருவன் இறக்கும்போது வித்தையும் கர்மங்களும் பூர்வவாசனைகளும், அவனை மறுபிறப்பிற்குந் தொடருகின்றனவென்று வேதசாஸ்திரங்களும் கூறுகின்றன. எனவே, ஒருவன் தேடிய அறிவு ஒருகாலத்தும் வீண்போகாது என்பது பெறப்படுகின்றது. திருவள்ளுவநாயனாரும் இதை வலியுறுத்தியே, "ஒருமைக்கட்டான்கற்றகல்வியொருவற், கெழுமையுமேமாப்புடைத்து" என்று கூறியதுடன், கல்லாதாரினிழிபை "கல்லாதான்சொற்காமுறுதல் முலையிரண்டு, மில்லாதாள்பெண்காமுற்றற்று" என்றுங் கூறினார்.

## 53. கற்கையிற்கல்விகசப்புகற்றபின்அதுவேயினிப்பு.

கல்வியைக் கற்கும்போது ஆரம்பத்தில் கசப்புப்போலத் தோன்றும். கற்றபின்னோ, அதனால் விளையும் நன்மை பெருமை கீர்த்தி ஞானம் முதலியவற்றால் மனஞ் சந்துஷ்டியெய்தி இன்பமுண்டாகும்.

ஆதலால், கல்வியைக் கற்கும்போது கஷ்டமாயிருக்கிறதேயென்று மனஞ் சோர்வடையாமல், வருந்தியேனும் யாவருங் கற்றல்வேண்டும்.

## 54. கற்றவரதுகோபம் நீரின்பிளவுபோல.

கற்று அறிவெய்தப் பெற்றோரது கோபம் நீரிலுண்டான பிளவு திரும்பவும் ஒன்றிவிடுதல்போல, தணிந்துவிடும்.

விப்பிரமவிகாரங்கள் மனிதருக்கு இயல்பாயமைந்தமையால், அறிவுடையோரும் அரிதாய்க் கோபத்தின்பாற்படுவர்.



ஆனால், அக்கோபத்தினால் விளையுங் கேடுகளையுணர்ந்து, அறிஞர் அதற்கு இடங்கொடாமல் தாமே சாந்தமெய்துவர்.

கோபம் இருவகைத்தாகும். ஒன்று முன்னிலையில் உடனிகழ்காரியம்பற்றிச் சடுதியிலெழுந்து தணியும் இயற்கையுடையது. மற்றையது, ஒருவன் எதிரிலின்றி வேறுவழிகளால் வாழ்க்கைநடையின்கண் விளைக்குந் தீங்குகளால், உள்ளிருந்தெழும் இயற்கையுடையது. இவ்விருவித கோபங்களினாலும் அனர்த்தங்கள் விளைதல்கூடும். பின்கூறிய கோபத்தினால் விளையுந்தீங்குகள் பழிவாங்கும் நோக்கமாய்ச் செய்யப்படுவனவாகவிருக்கும். இப்பழிவாங்குங் குணத்தை அறிவுடையோர் நல்லதென்று கொள்ளார். ஒவ்வொருவரும் பதில் தீங்குசெய்தலே ஆண்மையென்று கருதி ஒழுகுவாராயின், இவ்வுலகமானது ஒன்றற்கொன்று பகையாயுள்ள பலவேறுபட்ட மிருகங்களையடைத்த கூடுபோலாய்விடும், அன்றியும் ஒருவனது ஆத்மலாபமும் பழிவாங்குங் குணத்தினால் தடைப்படும். இவ்வுண்மைகளை உணர்தலினாலேயே ஞானிகளாயுள்ளோர் அவர்கள் துறவறத்தினராயினுஞ்சரி, இல்லறத்தினராயினுஞ்சரி உலகத்தவரின் இகழ்ச்சி புகழ்ச்சிகளைக் கவனியாமையால் பாமரரின் நிந்தைக்குள்ளாகின்றனர். ஆனால் உண்மையான அறிஞரே அவர்களது பெருமையை அறிய இயன்றவராவர். பழிவாங்காதிருத்தலே சிறந்த அறிவாகுமென்பதை யுணர்த்தவே திருவள்ளுவநாயனார் "அறிவினுளெல்லாந் தலையென்பதீய, செறுவார்க்குஞ் செய்யாவிடல்" என்று கூறினர்.

இனி, தீயவரோ எக்காலமும் தாம்கொண்ட கோபந்தணியாமல் பழிவாங்கவே காத்திருப்பர். இன்னோரின் இழிகுணத்தையும் நல்லோரின் உயர்குணத்தையும் விளக்கியே ஔவையார் "கற்பிளவோடொப்பர் கயவர் கடுஞ்சினத்துப், பொற்பிளவோடொப்பாரும்போல்வாரே—விற்பிடித்து, நீர்கிழியவெய்தவடுப்போலமாறுமே, சீரொழுகுசான்றோர்சினம்" என்றுங் கூறினர்.

## 55. கற்றவனுக்குமயிரத்தனை கல்லாதவனுக்குமலையத்தனை.

வித்தைகளைக்கற்றவன் தனது தொழில்களை மிகச்சுலபமாயும் காலதாமதமின்றியுஞ் செய்ய வல்லவனாவன். அவைகளைக் கல்லாதவனோ, அத்தொழில்களைச் செய்யப்புகின், மலையத்தனைபெரிதாய்க் கண்டு மயங்குவன்.

## 56. கன்மத்தினாற்சாதியன்றிச் சென்மத்தினாலில்லை.

ஒருவன் தனது ஜன்னியகுணத்திற் கியையச் செய்யுங்கர்மங்களினால், வருணம் ஏற்படுமேயன்றி, கேவலம் தான் பிறந்த வருணத்தினாலேயே அவ்வருணத்தலைவனாகமாட்டான்.

குணகர்மவிபாகங்களினாலேயே சாதிவித்தியாசங்களுண்டாயிருக்கின்றனவென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அக்குணகர்மவிபாவங்கள், ஸ்தூல இந்திரியங்களுக்குப் புலப்படாவண்ணம் ஒவ்வொருவரதும் சூக்கும சரீரத்தின்கண் அமைந்துள்ளன.

அங்கப்பழுதற்றவனுக்கு அங்கப்பழுதுற்றவனும், அங்கப்பழுதுற்றவனுக்கு அங்கப்பழுதற்றவனும் பிறத்தல்போல, உயர்வருணத்தவனிடத்தில் தாழ்வருணத்தவனும், தாழ்வருணத்தவனிடத்தில் உயர்வருணத்தவனும் பிறத்தல் சம்பாவிதம்.

ஒருவன் குணசீலம் தியாகம் ஞானம் முதலியன உடையவனாய் பிரமசாக்ஷாத்காரம் பெறுதலே வாழ்க்கையின் இலக்ஷியமென்று கருதி முயல்பவனாயும், சீவர்களிடத்தில் செந்தண்மைபூண்டொழுகுவோனாயும் இருத்தல்பற்றியே பிராமணவருணத்திற்குரியவனாகின்றான்.

தேசாபிமானம் பரோபகாரம் துஷ்டநிக்கிரகம் சிஷ்டபரிபாலனம் தைரியம் வீரியம் முதலிய குணகர்மங்களுடையனாதல்பற்றியே, ஒருவன் க்ஷத்திரிய வருணத்திற்குரியனாகின்றான்.

ஒவ்வொரு நாட்டினரது வாழ்க்கைக்கும் இன்றியமையாத, உலகத்தின் பற்பலபகுதிகளிலுமுள்ள கிருஷிகப்பொருள்கள் கைத்தொழிற்பொருள்கள் முதலியவற்றை அந்தந்த நாட்டினர்க்குப் பதிற்பொருளுக்காக விற்றலினாலும், அவைகளை உற்



பத்தி செய்வித்தலினாலும், தருமச்செயல் ஈதலாதியன உடையனாதலாலும் தேசத்தின் பொருளாதாரத்தை விருத்திசெய்பவனாதலாலுமே ஒருவன் வைசிய வருணத்திற்குரியனாகின்றான்.

பகுத்துணர்தல் அவதானம் உபமானம் முதலிய மனோதத்துவங்களின் குறைவினால் கூட்டி முடிக்கவும் பிரித்துணரவும் சத்தியின்றிப் பிறரது ஏவலையே செய்தற்கு இயல்புடையனாயும் பிறரது ஆதரவிலேயே இருக்கவேண்டியவனாயுமிருத்தல்பற்றியே ஒருவன் சூத்திரவருணத்திற்குரியனாகின்றான்.

மேற்சொல்லிய குணகர்மங்கள் ஒவ்வொருவருக்கும் பிறவியிலேயே ஜன்னியகுணமாய் அமைகின்றன. அப்பிறவிக்குணமான மனச்சார்புகளுக்கியையவே செயலும் ஒழுக்கமும் பெரும்பாலும் அமையும்.

பிராமணனுக்குப் பிறந்தவனிடத்தில் பிராமணனுக்குரிய ஒழுக்கமும் குணமும் இலவாயின், அவன் பிராமணன் அல்லன். சூத்திரனுக்குப் பிறந்தவனிடத்தில், பிராமணத்துவகுணகர்மங்களுளவாயின், அவன் சூத்திரன் அல்லன்.

திருஷ்டாந்தமாக: யாவராலும் போற்றற்குரிய சிவபத்தராய் விளங்கிய, பறைக்குலத்தில் அவதரித்த நந்தனாரையும், சிறந்த சன்மார்க்கரும் அதிக அறிவாளியும் வள்ளுவகுலத்தவருமாகிய திருவள்ளுவநாயனாரையும், புங்கனூர்ப்புலைச்சியின் வயிற்றிலுதித்த பராசரிஷியையும், அப்பராசரிஷிக்குச் செம்படத்தியிடத்திற் பிறந்த வேதவியாசரையும், கீழ்க்குலத்தில் அவதரித்தமையாலேயே கீழ்வருணத்தவரென்று கூற யாவரேனுந் துணிவாரா? அவர்கள் கீழ்க்குலங்களினின்று தோன்றினாலும் அக்குலத்தினர்க்குரிய குணகர்மங்களின்றி, தத்தம் ஜன்னியகுணத்திற்கியையவே மேல்வருணத்தவராய் விளங்கினர்.

வேதாந்த சித்தாந்த நூல்களிற் கூறப்படும் பிராமணத்துவம் முதலியன ஒவ்வொருவரின் குணகர்மங்களைப் பற்றியிருக்குமேயன்றித், தேகத்தைப்பற்றியிரா.

மேற்சொல்லியவைகளையுள்ளடக்கியே, திருவள்ளுவநாயனாரும், “அந்தணரென்போரறவோர்மற்றெவ்வுயிர்க்கும், செந்தண்மைபூண்டொழுகலான்” என்றும், “பிறப்பொக்குமெல்லாவுயிர்க்குஞ்சிறப்பொவ்வா, செய்தொழில்வேற்றுமையான்” என்றும் திருவாய்மலர்ந்தருளினர்.

### 57. கற்றுக்கொடுத்தசொல்லும் கட்டிக்கொடுத்தசாதமும்நெடுநாளுதவாது

நெடும்பயணஞ்செல்வோனுக்கு வழியுணவுக்காகக் கட்டிக்கொடுத்த சாதம் நெடுநாளைக்கு உபயோகப்படமாட்டாது.

அதுபோல, சுயபுத்தியைக்கொண்டு பேசுந்திறமையற்றவனுக்கு, நெட்டுருப்பண்ணிச் சொல்லும்படி கற்றுக்கொடுத்த வார்த்தை கல்விமுதலியனவும் அதிக பிரயோசனத்தை விளைக்கமாட்டா. ஆகவே, ஒருவனுக்கு இயற்கையாக உள்ளிருந்துண்டாகும் அறிவே விசேடமுடைத்தாம்.

பிறரது உதவிகொண்டு செயற்கையாகக் கற்குங்கல்வி, இயற்கையறிவு விகாசமுறுதற்கு உபகரணமாயமைகின்றதேயன்றி, வேறன்று. ஒருவனுக்கு அறிவாகப் பரிணமிப்பது இயற்கையறிவேயாம். திருஷ்டாந்தமாக: வளருகின்ற ஒருமரத்தை எடுத்துக்கொள்வோம். அம்மரத்தை, நீர்பாய்ச்சி மிருகங்களினின்று காப்பாற்றினவன், அதைத் தானே வளர்த்தவனென்கின்றான். ஆனால், வாஸ்தவத்தில் அம்மரம், தானே வளர்ந்ததன்றி, அம்மனிதன் அதை வளர்த்தவனல்லன். அவன் அம்மரத்திற்கு இடையூறுகள் வராவண்ணம் பிரதிபந்தகங்களை விலக்குதற்குச் சாதகமாத்திரமாகவேயிருந்தான். அவ்வளவேயன்றி, மரம் தனக்குரிய இயற்கைச் சத்தியைக்கொண்டு, தானாகவே வளர்ந்தது.

அதுபோல, சகலசீவர்களுக்கும், உள்ளிருந்தே அறிவுசிறிதுசிறிதாகப் பிரகாசமுற்று விகாசமெய்துகின்றது. அது உயிர்க்கு ஒளியாக என்றுங் கூடவேநிற்குஞ் சிற்சத்தியின் அருளால் நிகழ்வதாம்.



ஒருமாணாக்கன், ஆசிரியன் போதித்ததை நெட்டுருப்பண்ணி ஒப்புவிப்பதனாலேயே, அவன் அவ்விஷயங்களை அறிந்தவனாகான். அம்மாணாக்கன் தான்கூறுவதை உள்ளத்தில் இயற்கையறிவாக உணர்ந்து கூறினால்தான் அது அவனுக்கு அறிவெனப்படும். ஆகவே, மாணாக்கன் செயற்கையறிவாகத் தேடியகல்வி, இயற்கையறிவு விகாசமுறுதற்குச் சாதனமாகின்றதேயன்றி, அது நேரே அறிவை உண்டாக்குவதில்லை. இங்ஙனமின்றி, செயற்கையறிவே, இயற்கையறிவின்றி அறிவை உண்டாக்குவதுண்டெனில், ஆசிரியன்போதித்ததை மாணாக்கரெல்லாம் ஏற்றக்குறைவின்றி ஓரேபடியாகக் கிரகித்து ஓரேயளவான அறிவுடையோராய் விளங்கல்வேண்டும். அவ்வாறில்லையென்பது யாவரும் அநுபவத்திற் கண்ட உண்மையாம்.

இந்த இயற்கையறிவு சீவர்களின் தன்மைநிலைமைகளுக்கேற்ப, சுபாவ உணர்ச்சியென்றும், யுத்தியறிவென்றும் அருளறிவென்றும் பலதிறப்படும்.

ஏகாக்கிரசித்தப்பயிற்சி (Concentration of mind) யினால், இந்த இயற்கையறிவைத் தீவிரமாய் வளரச்செய்யலாம். எவ்வாறெனில், ஒருவன், தன்முன் தோன்றும் விஷயங்களை அகக்கண்ணால் உற்றுநோக்கிப் பழகல்வேண்டும். அது உணவைக் கையினாலெடுத்தற்குச் சமமாகும். அவ்வாறெடுத்தவற்றைச் சிந்தையிற்கொண்டு மனனம்பண்ணல் வேண்டும். அது உணவை மென்று புசித்தற்குச் சமமாம். பின்னர்த் தியானித்தல் வேண்டும். அது இரைக்குடரிற் சேரும் உணவை விபாகப்படுத்தற்குச்சமமாம். இவ்வாறு மனத்திற்கு உணவுகொடுப்போரே இவ்வுலகத்தில் அறிவாளிகளாக விளங்குகின்றனர். இத்தன்மையுடையோர், எழுத்தறிந்தோர்க்குள் உளராதல்போலவே எழுத்தறியாதோர்க்குள்ளும் உளராகின்றனர்.

### 58. காய்த்தமரம் கல்லெறிபடும்.

காய்களையுடையமரமே கல்லெறிபடுகின்றது. அதுபோல உலகத்தில் ஞானிகளும், பெரியோரும் சிலதருணங்களில் பாமரசனங்களினால் தொந்தரவுக்குள்ளாகின்றனர்.

## 59. காரியத்தைப்பற்றிக் கழுதையின்காலையும்பிடி.

தருமமானகாரியம் யாதேனும் நிறைவேறுதற்கு, தாழ்ந்த பதவியிலுள்ளோனது தயவும் இன்றியமையாது வேண்டப்படின், அவனுக்கும் தாழ்மைசொல்லித் தாழ்மையாய் நடந்து, காரியசித்திபெறல் வேண்டும் என்பதை இப்பழமொழியுணர்த்துகின்றது.

## 60. காலத்துக்குஏற்றகோலம்.

காலசக்காம் ஓயாது சுற்றிக்கொண்டேயிருக்கின்றது. அதன் சுற்றுதலுக்கியைய இப்பிரபஞ்சமும் அதன்கணுள்ள சேதனாசேதனப்பொருள்களும், தத்தம் பூர்வநிலையினின்று மாறிக்கொண்டேயிருக்கின்றன. ஆகவே, ஓர்காலத்தில் ஒருவிதசுபாவமும் நிலையுமுற்றிருந்த வஸ்து பின்னர் ஓர்காலத்தில் வேறொருவித சுபாவம் எய்துகின்றது. தாவரங்கள் செந்துக்கள் மிருகங்கள் மனிதர் ஆகிய எல்லாம் தத்தம் சுபாவங்களிலும் ஆகிருதிகளிலும் காலத்துக்குக்காலம் வேற்றுமையடைந்துகொண்டே வருகின்றனவென்பதை, தற்கால நவீனதத்துவசாஸ்திரிகளும் தமது நெடுங்கால பரிசோதனையைக்கொண்டு ஐயமற அறிந்திருக்கிறார்கள். சேதனப்பொருள்களிடத்திலும் அசேதனப்பொருள்களிடத்திலும் இயல்பாயுண்டாகும் இம்மாறுதல்கள் ஈசுவர சங்கற்பத்தின்படியே நிகழும். இதையே காலகதி என்றுங் கூறுவர்.

ஆதலால், ஈசுவரசங்கற்பத்தின்படி நிகழும் இக்காலகதிக்கியைய மனிதரும் தம்மைக் காலத்துக்கேற்ற கோலமாய், திருத்திக்கொண்டு போனால்தான், உலகத்தில் பங்கமுறாமலிருக்க முடியும்.

இவ்வுலகமாகிய சமுத்திரத்தில் சீவராசிகள் மேலுங்கீழுமாய்க் குமிந்துகொண்டு தத்தளிக்கின்றன. எந்தப்பிராணிகள் மற்றைய பிராணிகளுக்கூடாக மிதந்துவந்து மேலெழுகின்றனவோ அந்தப் பிராணிகளே சீவித்திருக்கின்றன. அஃதாவது, தமது சொந்தப் பிரயத்தனத்தினால் தம்மைக் காப்பாற்றிக்கொள்பவைகளே தப்பிப்பிழைக்கின்றன.



மனிதசாதியாரிலும் எவர்கள் தமது யுத்திவலிமை சாதுரியங்களினாலும், இயற்கைவசதிகளினாலும் மேல்நிலையையெய்துகின்றனரோ, அவர்களே பங்கமுறாமல் நிலைத்திருத்தல் சாத்தியமாகும். இவ்விதம் நிலைபெற்றிருத்தற்கு ஓர்காலத்தில் ஒருசாதியார்க்கு உபயோகமுற்றிருந்த சாதனங்கள், பின்னோர்காலத்தில், மற்றொருசாதியார் அவைகளினுஞ் சிறந்த சாதனங்களைக்கொண்டு போட்டியிடுதலால், உபயோகமின்றிப் போகவுங்கூடும். உதாரணமாக, முற்கால யுத்தங்களில் வில்லம்புகளே முக்கிய ஆயுதங்களாயிருந்தன. அவ்வாயுதங்களைக்கொண்டு, இக்காலத்தில் அதிநூதன பீரங்கி முதலிய ஆயுதங்களுடன் எதிர்ப்போரை, வெல்ல யாவராலும் இயலுமா? இயலாது. ஆதலால், ஒருகாலத்தில் உபயோகமுற்றிருந்த சாதனங்கள் நெடுங்காலமும் அவ்விதமே யிருக்குமென்றெண்ணி, காலத்துக்கேற்ற முறைகளை அநுசரியாமல் வாழ்வோர், ஏனையசாதியாரது போட்டிக்கு எதிர்நிற்கமாட்டாமல் பங்கமுறுவார்கள்.

உலகத்தில் எக்காலமும் மாறுதலடையாமலுள்ளவைகள், ஆன்மதத்துவங்களேயாம். அவைகளையே உபநிடதங்கள் முதலியன எடுத்துக் கோஷிக்கின்றன. வேதங்கள் உற்பத்திநாசம் அற்றனஎன்று கூறுவதன் தாற்பரியமும் இதுவேயாம். ஆதலால், என்றும் மாறாத தத்துவங்களைத் தவிர, மற்றையன எல்லாம் காலகதிக்கியைய மாறவுந் தக்கனவேயாம். அவ்விதம்மாறிக்கொண்டுமே வந்திருக்கின்றன. வருகின்றன.

இனி, மனிதர்க்கு லௌகிக க்ஷேமங்களே பாரமார்த்திக க்ஷேமங்களுக்கும் உதவியாயமைந்திருக்கின்றன. ஆதலால், காலகதிக்கியையத் திருத்தமெய்தாமல், லௌகிகக்ஷேமங்களைப் போக்கிலேபோக விடுவோர், பரமார்த்திக க்ஷேமத்தையும் சிறிதுசிறிதாய் இழக்க நேரிடும்.

உலகத்தில் வழங்குகின்ற பாஷைகளிலும், எத்துணைச்சிறந்த பாஷையேயாயினும் காலகதிக்கியையச் சீர்திருத்தமுற்றுக் கொண்டு போகாத பாஷை காலாந்தரத்தில் தாழ்வுற்றுவிடும். இதுபற்றியே பவணந்திமுனிவரும் "பழையனகழிதலும் புதி

யனபுகுதலும், வழுவலகாலவகையினானே" என்றுகூறினர். பாஷைகளுக்குக் கூறிய இவ்விதி பிறவிஷயங்களுக்கும் பொருந்தும்.

திருவள்ளுவநாயனாரும், "உலகத்தோடொட்டவொழுகல் பலகற்றுங் கல்லாரறிவிலாதார்" என்றும் "ஒத்ததறிவான்உயிர்வாழ்வான்மற்றையான், செத்தாருள்வைக்கப்படும்" என்றும், "பருவத்தோடொட்டவொழுகல்திருவினைத், தீராமையார்க்குங்கயிறு" என்றும், "எவ்வதுறைவதுலகமுலகத்தோ, டவ்வதுறைவதறிவு" என்றுங் கூறியிருத்தல், மேற்சொல்லிய தாற்பரியங்களையுள்ளடக்கியேயாம்.

இங்ஙனம் கூறினமையால், யாவற்றையுந் தலைகீழாக மாற்றிவிடல்வேண்டுமென்பது கருத்தன்று. ஈசுவரசங்கற்பத்தினால் உண்டாகும் விளைவுகளையும் அவைகளுக்கு மாறான அஞ்ஞானத்தின் விளைவுகளையும் சீர்தூக்கிப்பார்த்து, ஈசுவரசங்கற்பத்தையே கடைப்பிடித்து, அதற்கியையத் திருந்தி நடத்தல்வேண்டும் என்பதேயாம்.

### 61. காரியமாகுமட்டுங்காலைப்பிடித்து காரியமானபிறகுகுடுமியைப்பிடிப்பதுபோல.

சிலர், ஒருவனிடத்தில் தமக்கு யாதேனுங் காரியம் ஆகவேண்டியிருந்தால், அவனை அண்டித் தாழ்மையாய் நடந்து தமது காரியத்தை முடிப்பித்துக்கொண்டு, பின்னர் நன்றியறியாத தீங்கினராகி, தமக்கு அநுகூலம் புரிந்தோருக்கே பிரதிகூலமான செய்கைகள் புரிவர். இவ்வாறான செயல்கள் இழிந்த குணத்தின் பாற்படும்.

### 62. காலங்கேட்டுக்கறுப்புக்கோழி வெள்ளைமுட்டையிடுகிறது.

கறுப்புக்கோழி வெள்ளைமுட்டையிடுதல் இயற்கையேயன்றி நூதனமல்ல. அதனை "காலங்கெட்டுக் கறுப்புக்கோழி வெள்ளைமுட்டையிடுகிறது" என்று கூறுதல் மூடத்தனமாகும்.



அதுபோல, சிலர், இவ்வுலகத்தில் இயற்கைரீதிப்படி நிகழுஞ் சாதாரண விஷயங்களைத் தம் அறிவீனத்தினால் நூதனமாய்க் கொள்கின்றனர்.

திருஷ்டாந்தமாக: சிலர், இக்காலத்தில் தம்மனோபாவத்திற்கு ஒவ்வா விஷயங்களெல்லாம் கலிகாலவிபரீதம் என்று கத்துதல் சகசமாகிவிட்டது. சிற்சில காலங்களில் தர்மங் குன்றியும் அதர்மம் மேலிட்டும் இருத்தல் உண்மைதான். ஆனால், எவர்களது சங்கற்ப விகற்பங்களையும் பொருட்படுத்தாமல், பிரபஞ்சத்தைத் தன்னாதிக்கத்தின் கீழாக்கித் தன்முன்னெதிர்ப்படுந் தடைகளைத் தன் காலசக்கரத்தின்கீழ் நசுக்கித் தன்தவறாத சங்கற்பத்தை நிறைவேற்றிக்கொண்டு செல்லுஞ் சத்தியும் ஒன்றுண்டு. அதுவே ஈஸ்வரனது சத்தியாம். அந்த ஈஸ்வரனது சங்கற்பத்தின்பாற்பட்டு நிகழுங் காரியங்களைக் கலிகாலவிபரீதமென்று கூறல் மூடத்தனமாகும். இக்காலத்தில் கலிகாலவிபரீதம் என்று கத்துவோரிலேயே பெரும்பாலார் கலிகாலவிபரீதத்திற்கு இலக்கியமாகின்றனர்.

தர்மாதர்மங்களென்ன, நன்மைதீமைகளென்ன என்று அவைகளின் இலக்கணங்களை முந்தவேஉற்றுணராமல், ஒன்றைக் கலிகால விபரீதமென்னல் அறிவீனமாம்.

சாஸ்திரங்களில் தர்மாதர்மங்கள் கூறப்பட்டிருக்கின்றன. ஆயினும், அவைகளின் இலக்ஷியார்த்தங்களை (எந்நோக்கம்பற்றிக் கூறப்பட்டதென்பதை) யறியாமல், அவிவேகபூரணகுருசீஷர்கதைக் கிலக்கியமாக, வாக்கியார்த்தங்களையே முக்கியமென்று விபரீதமாக விளங்கிக்கொண்டு அனர்த்தம் விளைத்தல் தவறாகும்.

### 63. கீழ்க்குலத்தானாயினுங் கற்றவன்மேற்குலத்தான்.

ஒருவன் கீழ்க்குலத்தில் தோன்றியவனாயினும், அவன் கல்வியறிவு உடையவனாயின், மேற்குலத்தவனாவன். இக்கருத்துப்பற்றியே திருவள்ளுவநாயனார் "மேற்பிறந்தாராயினுங்கல்லாதார் கீழ்ப்பிறந்துங், கற்றாரனைத்திலர்பாடு" என்றும், நன்னெ

றிநூலாசிரியர், "ஆக்குமறிவானலதுபிறப்பினான், மீக்கொளுயர் விழிவுவேண்டற்க—நீக்கு, பவராரரவின்பருமணிகண்டென்றாங், கவரார்கடலின்கடு." என்றுங் கூறினார்கள்.

## 64. குசவனுக்குஆறுமாதம் தடிகாரனுக்குஅரைநாழி.

குசவன் ஆறுமாதகாலஞ் செலவிட்டு வனைந்த மட்பாண்டங்களை, தடிகாரன் அரைநாழிகையில் சுலபமாய் நாசஞ்செய்துவிடல் கூடும்.

அதுபோல, எக்காரியங்களையும் புதிதாய் உண்டாக்குதல் காலவியயமுங் கஷ்டமுமாகும். அவைகளை அழித்தலோ அல்லது கெடுத்தலோ அற்பநேரவேலையாகும்.

ஒருவன்ஒருநூலியற்றுதல் அருமையும்மனோசிரமமுமான வேலையாகும். குற்றமேதெரிவார் அதில் குறைகூறுதலோ இலகுவான வேலையாகும். இவைபோன்ற பிறவற்றையும் ஊகித்தறிக.

## 65. குடல்கூழுக்கழுகிறதாம் கோண்டைபூவுக்கழுகிறதாம்.

ஒருவன் வயிற்றுப்பசிக்கே உணவில்லாமல் திண்டாடும்போது, இடம்பம் வேடிக்கை முதலியவற்றை விரும்புதல் மடமையும், நாச ஏதுவுமாகும். ஒவ்வொருவரும் தத்தம் தற்கால நிலைமைக்கியையவே ஊண் உடை நடை முதலியவற்றை விரும்பல்வேண்டும். இவ்விதமின்றி, புலியைப் பார்த்துப் பூனை சூடிட்டுக்கொண்டதுபோல செல்வரைப்பார்த்து வறியவரும் நடக்கத்துணிதல் கேட்டிற்கே காரணமாகும்.

செல்வரைப்போன்றிருக்க விரும்பும் வறியவர், தாமும் தமது விடாமுயற்சியினால் தர்மவழியைநாடிப் பொருளைத் தேடியபின், அவ்விதநடையை அநுசரிக்கலாம்.

## 66 குடிக்கிறமுலையுஞ்சரி பிடிக்கிறமுலையுஞ்சரி.

குழந்தைகள் பால் குடிக்கும்போது, சிலவேளைகளில் தாயின் ஸ்தனத்தை ஆசையுடன் அளைகின்றன. கணவனும் சர



சமாய்க் கூடிக்களிக்கும் வேளையில் மனைவியிடத்தில் அவ்விதசெயலைப் புரிகின்றான். ஸ்தூலநோக்கில், இருவரும் ஓரேவித செயலைப் புரிவதாய்த் தோன்றினும், சூக்குமமாய் நோக்குவதாயின். குழந்தை ஒருவிதஎண்ணமும் கணவன்வேறொருஎண்ணமுங்கொண்டவரென்பது புலப்படும். எனவே, பிடிக்கிற முலையுங் குடிக்கிறமுலையும் ஒன்றாகவேயிருந்தும், அதனால் நிகழும் மனோவிருத்திகள் வேறுபடுகின்றன.

அதுபோல, பலரால் செய்யப்படும் ஓரேவிதசெயல்கள் ஸ்தூலமாய் நோக்கும்போது ஒன்றற்கொன்று வித்தியாசமற்றனவாயும், சூக்குமமாய் ஆராயும்போது செய்பவரின் எண்ணத்திற்கியைய வேறுபாடுடையனவாயுமிருக்கும் என்பதுண்மையாம்.

உதாரணமாக: ஞானிகள் சிலபோது மத்தர் பேயரொடு பாலர்தன்மை மருவிநிற்கின்றனர். உண்மையான பேயர் பைத்தியகாரரும் அவ்விததன்மையுடையோராயிருக்கின்றனர். ஆயினும், இவ்விருபாற்பட்டோரது மனோபாவங்களுக்கும் வெகுதூரவித்தியாசமுண்டு.

யுத்தகளத்தில் போர்வீரனும் கொலைபுரிகின்றான். பகைகொண்ட சதிகாரனும் கொலைபுரிகின்றான். ஆயினும் இவ்விருவரது மனோநோக்கங்களும் வேறுபாடுடையனவே.

லௌகிகத்தவன் மாதர்போகத்தழுந்துகின்றான். மனத்தகத்தழுக்கறுத்த மௌனஞானயோகியும் முலைத்தடத்தழுந்தலுண்டு. ஆயினும் இவ்விருவரது மனோபாவங்களும் அடையும் பலன்களும் வேறுபாடுடையனவே. இவ்வாறே ஏனையவற்றையும் ஊகித்தறிக.

## 67. குணம்பெரிதேயன்றிக் குலம்பெரிதல்ல.

எவரும் குணத்தினாற் பெரியவராவரேயன்றி, குலத்தினாற் பெரியவராகார்.

தாமரை பொன் முத்துச் சவரங்கோரோசனை முதலியன அசங்கிய இடங்களிலிருந்து உண்டாகின்றன. அக்காரணம் பற்றி, அவைகள் தமக்குரிய மதிப்பில் குறைவுபடுவன அல்ல.

ஆதலால், நல்லோர் எங்கே பிறந்தாலும் தமக்குரிய பெருமையில் குறைவுபடார்.

## 68. குரங்கின்கைப்பூமாலைபோல.

குரங்கின்கையில் பூமாலை கிட்டுமாயின், அது அதனருமையையுணராமல் சிதைத்தெறியும்.

அதுபோல, தக்காரல்லாரிடத்தில் கிட்டும் அரிய பொருள்கள் தம்பெருமை குன்றிப் பங்கமெய்தும்.

## 69. குரங்குக்குப்புத்திசொல்லித் தூக்கணாங்குருவிகூண்டுஇழந்தது.

இது ஓர் கற்பனைக் கதையைப்பற்றிய பழமொழி. அதன் சாராம்சமாவது:—ஓர் குரங்கு கடுமழையில் நனைந்து வருந்திக்கொண்டிருந்தபோது, அதன்சமீபத்தில் தன்கூண்டில் சௌகரியமாய் வசித்துக்கொண்டிருந்த ஒரு தூக்கணாங்குருவியானது அக்குரங்குக்காகப் பரிதாபமுற்று, அதை நோக்கி "நீயேன் இங்ஙனம் வருந்துகின்றாய்? என்னைப்போல நீயும் ஒருகூண்டு செய்து அதில் சுகமாய் வசித்தலாகாதா?" என்று புத்தி கூறிற்று. அதைக்கேட்ட குரங்கு "நீயா எனக்குப் புத்திசொல்லுகிறது?" என்று கோபங்கொண்டு அத்தூக்கணாங்குருவியின் கூண்டைப் சிதைத்து எறிந்துவிட்டது.

இவ்விதமே, மனிதரிலுஞ் சிலர், அறிவாளிகள் புத்தி கூறினால் "இவரா எனக்குப் புத்திபோதிப்பவர்?" என்று கோபங்கொள்கிறார்கள்.

## 70. குருக்கள்நின்றுகோண்டுபேய்தால் சீஷன்ஓடிக்கோண்டுபேய்வான்.



குரு தவறான ஒழுக்கமுடையனாயின், சீஷன் அவனிலும் அதிக தவறான ஒழுக்கமுடையனாயிருப்பான் என்பது இதன் தாற்பரியம்.

குருவின் ஒழுக்கத்தை உதாரணமாகக்கொண்டே சீஷனும் ஒழுகுவான். அறிவு ஒழுக்கங்களில் சிறந்திருக்கவேண்டியவரான குருவே ஒன்றைக் குற்றம்பொருந்தச் செய்யும்போது சீஷன் அதனையே அதிககுற்றம் பொருந்தச் செய்தற்குந் துணிதல் இயல்பேயாம்.

இவ்வுலகில் பெரும்பாலும் குற்றம்பெருகிவருதற்குக் காரணம் மேற்பதவிகளிலுள்ளோரும் பெரியவர்களும் தவறியொழுகுதலைக்கண்டு, சிறியோரும் "பெரியவர்களே அவ்விதம் நடந்திருக்கும்போது நாம் அவ்வாறுசெய்தல் பிரமாதமாகுமா?" என்று எண்ணி நடத்தலேயாம். இக்கருத்துப்பற்றியே, திருவள்ளுவநாயனாரும் "மனந்தூய்மை செய்வினைதூய்மையிரண்டும், இனந்தூய்மை தூவாவரும்" என்றருளினர்.

## 71. குலத்தளவேயாகுங்குணம்.

ஒருவன் தான்பிறந்த குலத்திலுள்ளவர்களின் குணப்பாங்குகளுக்கேற்கவே தனது குணமும் அமையப்பெறுவான் என்பது இதன் தாற்பரியம்.

ஈண்டுக் கூறியகுணம், ஒருவனுக்கு ஈஸ்வரன் மாதாவின் கருப்பையிலேயே வர்ணவிபாகம்பற்றி அமைக்கும் ஜன்னியகுணம் அன்று. மற்றென்னெனில், சகவாசசம்பந்தத்தால் பழக்கவாசனையாக உண்டாகுங் குணமேயாம்.

சிறுவர்கள், பெரியோரது செயல்களையும் பாங்குகளையும் பார்த்து அவ்விதமாகவே, தாமும் ஒழுகுதல் இயல்பு.

திருஷ்டாந்தமாக: சிறுவர்கள் விளையாடும்போதும், தம் பிதா மாதா முதலிய சுற்றத்தவரின் தொழில் பாங்குகளையே, அவ்விளையாட்டிலும் அமைத்து விளையாடுகின்றார்கள். இவ்வி

தமே, ஒவ்வொரு விஷயங்களிலும், அவர்கள், தாம் பிறந்த குலத்தினரின் பாங்குகளேயே பின்பற்றியொழுகி வளருகின்றுர்கள்.

நற்குண நல்லொழுக்கங்களுடைய குடும்பத்தில் பிறந்தவன் தனது இளம்பிராயத்தில், தன்னைச் சுற்றியுள்ளோரது குணசெயற் பாங்குகளேயே பின்பற்றுகின்றுர்கள். ஆகவே, அவன் நல்லவனுகின்றுன். இவ்வாறே, தீயகுடும்பத்திற் பிறந்தவன் தீயவனுகின்றுன். ஆயினும், இது பொதுவிதிதான். ஏனெனில் மிக அரிதாய் ஜன்னியகுணம் முதலிய வேறுசில காரணங்களின் வலிமையினுல், தீயகுடும்பத்தில் வளர்ந்தேநல்லவனுகுதலும் நற்குடும்பத்தில் வளர்ந்தே தீயவனுகுதலும் உண்டாதலினென்க. ஆனுல், பெரும்பாலும், சகவாசசம்பந்தமாகவே குணமும் பழக்கமும் அமையும். இக்காரணம்பற்றியே "குலத்தளவேயாகுங்குணம்" எனப்பட்டது.

ஆனுல், சிலர் கருதுவதுபோல, அவ்வவ்வருணத்துக்குரிய குணம், அவ்வவ்வருணத்திற் பிறக்கும் பிள்ளைகளுக்கும் உண்டாகும் என்று கொள்ளல் தவருகும்.

மேற்சொல்லிய கருத்துக்களையுள்ளிட்டே திருவள்ளுவநாயனுர்,

"மனந்தூய்மைசெய்வினை தூய்மையிரண்டும்
இனந்தூய்மைதூவாவரும்."

என்றும்,

"நிலத்தியல்பால்நீர்திரிந்தற்றுகுமாந்தர்க்
கினத்தியல்பதாகுமறிவு."

என்றும்,

"மனத்துளதுபோலக்காட்டியொருவற்
கினத்துளதாகுமறிவு"

என்றும்,

ஔவையார்,

"நீரளவேயாகுமாம்நீராம்பருன்கற்ற
நூலளவேயாகுமாம்நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவேயாகுமாந்தான்பெற்றசெல்வம்
குலத்தளவேயாகுங்குணம்.

என்றும் கூறினுர்கள்.

### 72. குலத்துக்கீனங்கோடரிக்காம்பு.

மரங்களை வெட்டுதற்குத் துணைக்கருவியாயுள்ளது கோடரியாகும். கோடரியின் இரும்பினுலான பாகம் மரங்களை வெட்டுதற்கு உபகரணமாயுள்ளது, கோடரியின் மரப்பிடியேயாம். அம்மரப்பிடியில்லாவிடின், கோடரி தனித்து மரங்களை வெட்டமாட்டாது. ஆகவே, கோடரியானது மரங்களை வெட்டுதற்கு அம்மரத்தினமாகிய கோடரிப்பிடி காரணமாகின்றது. இக்காரணம்பற்றியே "குலத்துக்கீனம் கோடரிக்காம்பு" எனப்பட்டது.

அதுபோல, சிலர், அன்னியருடன் சேர்ந்துகொண்டு தாம்பிறந்த குடும்பத்திலுள்ளவர்களுக்கே கஷ்டநஷ்டங்களையுண்டுபண்ணுகின்றுர்கள். சிலர் அன்னியதேசத்தினருடன் சேர்ந்துகொண்டு, தமது தேசத்திற்கே துரோகிகளாகின்றுர்கள். இன்னோரன்னர் இப்பழமொழிக்கிலக்கியமாவர்.

### 73. கெடுகோலத்திற்குக் கேட்டோர்புத்தியைக்கேட்பார்.

ஒருவன் தனக்குக் கெடுகாலம் வரும்போது நல்லோரது புத்தியை அங்கீகரியாமல் கெட்டோரது புத்தியையே தனக்கு ஏற்றது என்று கைக்கொண்டு ஒழுகுவான் என்பது இதன் தாற்பரியம்.

கெட்டவர்கள் அறிவுடையவராயிருப்பினும், மூக்கறையன்கதைபோல், தம்மைப்போலவே அயலாருங் கெடவேண்டுமென்று கருதி வாக்குச்சாதுரியமாயும் வசீகரமாயும் தகாப்புத்திகள் போதித்துக் கெடுக்க முயலுவார்கள்.

ஆதலால் சீவகாருண்ணியமும் நல்லறிவுமுடையோரது புத்தியையே கேட்டல்வேண்டும்.

### 74. கேட்டவையெல்லாம்நம்பாதே
### நம்பினதெல்லாஞ்சொல்லாதே.

ஊரிலே சனங்கள் சொல்லுபவைகளெல்லாவற்றையும் நம்பலாகாது. ஆராய்ந்து நம்பினவைகளெல்லாவற்றையும் பிறர்க்குச் சொல்லலாகாது என்பது இதன் தாற்பரியம்.

ஊரவர்கள்சிலர் பொறாமை கோபம் ஆராய்வின்மை முதலிய காரணங்களால், கோள் குண்டணி அவதூறு முதலியன சொல்லித் திரிவார்கள். பொய்கலந்த மெய்களும், மெய்கலந்த பொய்களுங் கூறி வஞ்சிப்பார்கள். ஆதலால், கேட்டவைகளெல்லாம் நம்பத்தக்கனவும் அல்ல. நம்பினவைகளெல்லாம் பிறர்க்குச் சொல்லத்தக்கனவும் அல்ல.

உண்மையென நம்பினதைக் கூறுதல் குற்றம் அன்றேயெனின், அற்றன்று. உண்மையாயினும் பிறரது குற்றங்களைக் கூறாதிருத்தலே மேன்மையாம். இதுபற்றியே நாயனாரும் "கொல்லாநலத்தது நோன்மைபிறர்தீமை, சொல்லாநலத்ததுசால்பு" என்று கூறினர்.

## 75. கைக்குவாய்உபசாரமா.

வாய்க்கு உணவு எடுத்துக் கொடுப்பது கையேயாயினும், வாயானது உணவைப் புசியாவிடின் கையுஞ் சீவிக்க முடியாதாகையால், கைக்கு வாய் விசேஷ உபசாரஞ் செய்யவேண்டியதில்லை. சமட்டி ரூபமான தேகத்தின் க்ஷேமத்திற்கு வியட்டி ரூபமான அங்கங்களின் ஒற்றுமையான உதவிவேலைகள் இன்றியமையாதனவாகும். ஒரு அங்கம் தன்தொழிலில் தவறுமாயின், மற்றைய அங்கங்களுக்கும் கேடுண்டாகும்.

ஒரு அங்கத்திற்குப் போஷணை குறையவே மற்றைய அங்கங்களும் சோர்வடைகின்றன. ஒரு அங்கத்திலேறிய விஷம் மற்றைய அங்கங்களையும் தாவுகின்றது. ஆதலால், அங்கங்கள் ஒன்றற்கொன்று உதவியாயிருத்தலே தேகத்தின் க்ஷேமத்திற்குக் காரணமாகும்.

அதுபோல, ஒருகுடும்பத்தின் அங்கத்தவரும், தத்தம்கடமைகளை நிறைவேற்றுவதற்காக, மற்றைய அங்கத்தவரிடத்திருந்து விசேஷ உபசாரங்களை வரம்புகடந்து அவாவுதல் தகாது.



சமட்டிசேவைக்குழைக்கும் பொதுமனிதரும், தாமாகவே பொதுச்சனங்களிடத்தில் விசேஷ உபசாரங்களை எதிர்பார்த்தல் மேன்மை அன்று. இவ்வாறே பிறவிஷயங்களிலும் பொருத்திக் காண்க.

## 76. கைப்பொருள்தன்னிலும் மெய்ப்பொருள்கல்வி.

ஒருவனுக்குக் கையிலிருக்குஞ் செல்வத்தினும், சித்தத்திலிருக்குஞ் செல்வமாகிய கல்விப்பொருளே நிலையான மெய்ப்பொருளாம்.

செல்வப்பொருள் எடுக்க எடுக்கக் குறையும் இயல்பினது. கல்விப்பொருளோ எடுக்க எடுக்கக் குறையாமல் மேன்மேலும் வளரும் இயல்பினது.

செல்வப்பொருள் சோதரர் சுற்றத்தவர் பகைவர் கள்ளர் முதலியவர்களால் அபகரிக்கப்படக்கூடியது. கல்விப் பொருளோ பிறரால் எவ்வாற்றானும் அபகரிக்கப்படக்கூடாதது.

செல்வப்பொருள் தீ நீர் முதலியவற்றால் அழியும் இயல்பினது. கல்விப்பொருளோ அவ்வாறழியாத இயல்பினது.

ஆதலால், "பிச்சைபுகினுங் கற்கைநன்றே" பின்வரும் பாக்கள் கல்வியின் அருமையை விளக்குகின்றன.

ஆற்றவுங்கற்றாரறிவுடையார்அஃதுடையார்
நாற்றிசையுஞ்செல்லாதநாடில்லை—அந்நாடு
வேற்றுநாடாகாதமவேயாம்ஆயினால்
ஆற்றுணாவேண்டுவதில்.

கேடில்விழுச்செல்வங்கல்வியொருவற்கு
மாடல்லமற்றையவை.

## 77. கையிற்பிடிப்பதுஜபமாலைகக்கத்திலிடுக்குவதுகன்னக்கோல்

சிலர் பகிரங்கத்தில் கர்மாநுஷ்டானம் தெய்வவணக்கம் முதலியன செய்துகொண்டு சாதுக்கள்போல நடிப்பார்கள். அந்

தரங்கத்தில் பொய் களவு புரட்டுருட்டு பொறாமை கோள் நம்பிக்கைத்துரோகம் முதலியனவுடையராயிருப்பார்கள். இன்னோர் சாதுக்கள்போல வெளிவேஷம் பூணுவதெல்லாம் தமது கபடவேடத்திற்கும் தந்தரங்களுக்கும் தடுமாறுவோரை ஏமாற்றுவதற்காகவேயாம். தருணம் வாய்க்கின் எவ்வித கொடிய செயல்களையுஞ் செய்யப் பின்னிடார்கள்.

### 78. கொக்கின்தலையில்வெண்ணெயைவைத்து அதுஉருகிக்கண்ணில்விழும்போதுபிடித்துக் கொள்ளலாமென்பதுபோல.

கொக்கின் தலையில் வெண்ணெயைவைத்து அது உருகிக் கண்ணில் விழும்போது பிடித்துக்கொள்ளலாமென்று எண்ணுவதுண்டெனின், "கொக்கின்தலையில் வெண்ணெயை வைப்பதெவ்வாறு? ஒருபோது அவ்விதம் வைத்தாலும் கொக்குப் பறந்துசெல்லாதிருக்குமா? வெண்ணெயை வைத்து வினைக்கெடும் நேரத்திலேயே கொக்கின் கழுத்தைப் பிடித்துக்கொள்ளலாமே!" என்ற வினாக்கள் நிகழுகின்றன. ஆதலால் இவ்வாறான எண்ணம் மடமைகளெவற்றிலும்முதற்றரமான மடமையாகும்.

அதுபோல, சுலபமான வேறுவழிகளை நாடாமல், அசாத்தியமான வழிகளைச் சாத்தியமான வழிகளென்று எண்ணி, எவ்விஷயத்திலேனும் பிரவிர்த்திப்போர் இப்பழமொழிக்கு இலக்கியமாவர்.

### 79. கொடுங்கோலரசு நெடுங்காலம்நில்லாது.

பிரஜைகளை வருத்தி ஆளுகின்ற இராச்சியம் நெடுங்காலம் நில்லாது. ஏனெனில், கொடுமையாய் ஆளப்படுகின்ற பிரஜைகள் அவ்விராச்சியத்தில் வெறுப்படைந்து, இராசவிசுவாசமற்றவராயும் இராசத்துரோகிகளாயும் மாறிவிடுவதால், அவர்கள் காலாந்தரத்தில் தாமே அவ்விராச்சியத்தை மாற்றி அமைத்தும்விடுவார்கள். அல்லது வேற்றரசர் படையெடுப்பில் அன்னியருடன் சார்ந்துநின்று, அக்கொடுங்கோலரசை அழிப்பார்கள். எனவே கொடுங்கோலரசு நெடுங்காலம்நில்லாது. இக்கருத்துப்பற்றியே திருவள்ளுவநாயனார் "வேலன்று வென்றி தருவது மன்னவன், கோலதூஉங்கோடாதெனின்" என்று கூறினர்.



### 80. கொடுங்கோன்மன்னர்வாழுநாட்டிற் கடும்புலிவாழுங்காடுநன்றே.

கொடுங்கோலரசன் ஆளுகின்ற தேசத்தில் வாழ்தலினும் கொடிய புலிகள் வாழுகின்ற காட்டில் வசித்தலே நன்றாகும்.

ஏனெனில், கொடிய இராச்சியத்தில் வாழ்வோரது சொத்துக்களும் சுதந்தரங்களும் நாள்விகிதமாய் அல்லது சடுதியில் பங்கமுறுதல் திண்ணமாகும்.

இராசாங்க சுதந்தரங்களே லௌகிக க்ஷேமத்திற்கும், லௌகிகக்ஷேமமே பாரமார்த்திக க்ஷேமத்திற்கும் மூலாதாரமாயிருத்தலால், கொடுங்கோலரசின்கீழ் வாழ்வோர் இகபரசுகங்களை இழக்க நேரிடும்.

இக்கருத்துப்பற்றியே திருவள்ளுவநாயனார் "அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல்" என்றும், "இன்மையினின்னாதுடைமை முறைசெய்யா மன்னவன் கோற்கீழ்ப்படின்" என்றுங் கூறினார்.

### 81. கோட்டிக்கிழங்கு பறிக்கப்போனால் கோபித்துக்கொள்வார் பண்டாரம் அவித்துரித்துமுன்னேவைத்தால் அமுதுகொள்வார்பண்டாரம்.

ஒருவன் தனக்குத் தேவையான பொருளொன்றைப் பெறவிரும்பி மன்றாடிக் கேட்கினும், சிலர் இசையாமல் கோபமுங் கொள்வார்கள். ஆனால், அதேபொருளை அவருக்கு உபகாரமாய் ஈயின், மானமின்றிச் சந்தோஷத்துடன் அங்கீகரித்துக்கொள்வார்கள் என்பதை இப்பழமொழி யுணர்த்துகின்றது.

### 82. சகதியில்கல்லைவிட்டெறிந்தால் தன்துணியென்றும்அயலார்துணியென்றும்பாராது.

ஒருவன் சேற்றில் கல்லெறிந்தால், அதினின்று தெறிக்குஞ்சேறு, எறிந்தவனென்றும், எறியாதவனென்றும் பேதமின்றிச் சூழநிற்போர் யாவர்மீதும் படும்.

அதுபோல், ஒருசெயலைச் செய்யுமிடத்து, அதனாலுண்டாகும் தீங்கு, செய்தவனென்றுஞ் செய்யாதவனென்றும் பேதமின்றி யாவருக்குமே சமமாய்த் தீங்குவிளைக்குமாயின், அவ்வித செயல்களைச் செய்தல் ஆகாது.

## 83. சத்தியவாசகன் சமஸ்தசற்குணன்.

ஒருவன் உண்மைபேசுவோனாயிருப்பானாயின், அவன் சகலவித சற்குணமும் உடையனாகவேயிருப்பான். ஏனெனில், உண்மை பேசுவோர் தம்மனச்சாட்சிக்கு மாறான செயல்களைச் செய்யவேமாட்டார். தாமே கஷ்டத்திற்குள்ளாயினும், தருமநெறியினின்றும் வழுவார். அவர்களிடத்தில் சீவகாருண்ணியம் பொறுமை கபடமின்மை பரோபகாரம் முதலிய சற்குணங்கள் மேலிட்டிருக்கும். சத்தியம் பேணுவோராலேயே இவ்வுலகத்தில் சனாதன தருமங்கள் நிலைபெற்றிருக்கின்றன.

ஒருவனது ஊர்த்துவகதியும் அதோகதியும் மனத்தூய்மையைக் கொண்டே நிச்சயிக்கப்படுவதால், அம்மனத்தூய்மைக்கு முக்கியகாரணமாகிய வாய்மையையுடையவன், மோட்சசோபானங்களின மேற்படியிலேயிருப்பவனுமாவன். எனவே சமஸ்தசற்குணமும் உடையவனாவன்.

ஒருவன் பிற ஒழுக்கங்களில் சிறந்தவனாயிருப்பினும், வாய்மையென்னும் மனத்தூய்மையில்லாதவனாயின் அவன் பிரமசாக்ஷாத்காரம் பெறுதற்கு அருகனல்லன்.

மேற்சொல்லிய கருத்துக்களையுள்ளிட்டே திருவள்ளுவநாயனார் "பொய்யாமைபொய்யாமையாற்றின்அறம்பிற, செய்யாமைசெய்யாமைநன்று" எனவும், ஸ்ரீ தாயுமானசுவாமிகள், "பொய்வளருநெஞ்சினர்கள் காணாதகாட்சியே பொய்யிலாமெய்யரறிவில், போதபரிபூரண அகண்டிதாகாரமாய்ப் போக்குவரவற்ற பொருளே......" என்றுங் கூறியருளினார்கள்.



இனி, எவ்வித சந்தர்ப்பங்களிலும் உள்ளதை உள்ளபடியே கூறுதல்தான் சத்தியவாசகம் என்று கருதல் கூடாது. ஏனெனில் இல சந்தர்ப்பங்களில், உள்ளதை உள்ளபடி கூறலே பொய்யினிடத்தைப்பெற்றுப் பாபமுமாகும் அத்தருணங்களில், வார்த்தையிலேயே பொய் மெய்யை நோக்காமல், இலக்ஷியத்தில் பொய் மெய்யை நோக்கித் தன் வார்த்தை தீங்குக்குக் காரணமாகாதபடி பேசுதலே வாய்மையெனப்படும். இதனை விளக்கவே நாயனார், "வாய்மையெனப்படுவதியாதெனில் யாதொன்றுந்தீமையிலாதசொலல்" என்றும், "பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மைபயக்குமெனின்" என்றுங் கூறினார்.

மேற்சொல்லியவிதமான சந்தர்ப்பங்களில், தமது வார்த்தைகள் தீங்கிற்குக்காரணமாகாதபடி மொழியாமல், உள்ளதை உள்ளபடி கூறுவோர் பாபத்திற்குள்ளாவரென்பதற்கு ஒரு பிராமணனதுசரித்திரம் உண்டு. அதன்சாராம்சம் வருமாறு:—

ஒரு கிராமத்திலுள்ள சனங்களெல்லாரும், தமது ஊரை அன்றிரவு கள்ளர் கொள்ளையிடப் போகிறார்களென்று முன்னரேயறிந்து, தமது பொருள்களைச் சேகரித்துக்கொண்டுபோய் ஒரு மறைவிடத்தில் ஒளித்து வைத்துவிட்டுத் தாமும் மறைந்திருந்தார்கள். உண்மை பேசுவோனாகிய ஓர் ஏழைப்பிராமணன் மாத்திரம் தனக்குக் கள்ளராலென்ன நஷ்டம் வரப்போகிறதென்று கருதி, அவ்வூரைவிட்டகலாமல் ஓர் தெருத்திண்ணையிற் படுத்திருந்தனன். அன்றிரவு கள்ளர் அவ்வூரில் புகுந்து வீடுவீடாய்ச் சோதித்துப் பார்த்தபோது மனிதரையும் மற்றைய பொருள்களையுங் காணாமையால் அதிசயமுற்றனர். ஈற்றில் தெருத்திண்ணையில் படுத்துறங்கிக்கொண்டிருந்த பிராமணனை அவர்கள் கண்டதும், அவனையெழுப்பி அவ்வூரவர்களும் பொருள்களுமெங்கேயென்று அச்சுறுத்திக் கேட்டனர். பிராமணன் உண்மை பேசுவோனாகையால் செய்வதின்னதென்றுணராமல் திகைத்து மயங்கி, ஈற்றில் உள்ளதை உள்ளபடியே கூறிவிட்டான். உடனே, கள்ளர் அவ்விடஞ்சென்று, தாம் குறித்த

காரியங்களை அதிககஷ்டமின்றி முடித்துக்கொண்டு போயினர். இக்கேடுகளுக்கெல்லாம் அப்பிராமணனே காரணமானமையால் அவன் நரகத்திற்குள்ளாயினன்.

## 84. சத்துருபொறாமை தனக்கேதண்டனை.

ஒருபகைவன் ஒருவனது கல்வி செல்வம் கீர்த்தி முதலியவற்றைக்கண்டு சகியாமல் அழுக்காறுகொள்ளல் தனக்கே தண்டனை செய்தல்போலாகும். எவ்வாறெனில் பொறாமை ஒருவனது இருதயத்தில் வித்துப்போலிருந்து முளைத்துவேருங்கிளைகளும்விட்டு, பாபமென்னும் பலவிதகனிகளை யீனுகின்றது.

தன்னிலும் மேம்பட்டோரது சீர்சிறப்புக்களைக் கண்டு சகியாமல் மனம் எரிவோன், காலாந்தரத்தில் அன்னோரது பெருமைகளைக் கெடுத்தற்குச் சதிசூழவும் எண்ணங்கொண்டு தனது பொருள்களையும் அரியகாலத்தையும் துர்விநியோகஞ்செய்வான். வாழ்க்கைநடையில் தீவிரமாய் முன்செல்வோரைப் பார்த்துத்தான் அவ்வாறு அவர்களுடன் சமமாய்ச்செல்லல் அசாத்தியமென்று மனச்சோர்வடைந்து, அன்னோரை எவ்வகையினுங் கெடுப்பதே அவர்கள் தன்னிலும் மேம்படாதிருக்கும்வழியாகுமென்று கருதி, பாவமான சதிச்செயல்கள் புரிவான் பொறாமையாளன். இவ்வித செயல்களிலேயே அவன் தனதுகாலம் விவேகம் செல்வம் முதலியவற்றைச் செலுத்துவதனால், தான் வழக்கமாய்ச் செய்யும் முயற்சிகளையும் சிறிதுசிறிதாயிழந்து, மேன்மேலும் தானே கெடுவான். அவனது மனம் அசுத்தப்பட்டு மாசு அடைவதால் தெளிவான அறிவு தோன்றாது. ஆகவே, பாரமார்த்திகஞானத்திற்கும் அவனுக்கும் வெகுதூரமிருக்கும். இவ்வாறு பொறாமையாளன் இம்மை மறுமையிரண்டையுங் கெடுத்துக் கொள்வதால், தனக்குத்தானே தண்டனை விதிப்பவனாகின்றான். இக்காரணம்பற்றியே திருவள்ளுவநாயனார் "அறனாக்கம்வேண்டாதானென்பான் பிறனாக்கம், பேணாதழுக்கறுப்பான்" என்றும், "அழுக்காறெனவொருபாவி திருச்செற்றுத் தீயுழியுய்த்துவிடும்" என்றுங் கூறினார். ஸ்ரீ தாயுமான



சுவாமிகளும் "அழுக்காற்றானெஞ்சம் அழுங்கியபுன்மாக்கள், இழுக்காற்றாலின்பநலம் எய்தார்பராபரமே" என்றருளினர்.

## 85. சந்திரனைப்பார்த்துநாய் குலைத்தாலேதென்ன.

சிலவேளைகளில் நாய்கள் சந்திரனைப் பார்த்துக் குலைக்கும். அதனாலே சந்திரனுக்கு ஆவது ஒன்றுமில்லை. போவதுமொன்றுமில்லை.

அதுபோல, சிலமூடர் பெரியோரை இழித்துக் கூறிநிந்திப்பர். அதனால் பெரியோரது பெருமை சிறிதேனுங் குறைவு அடைதலில்லை. இக்கருத்துப்பற்றியே ஆன்றோரொருவர்,

நெறியாலுணராது நீர்மையுமின்றிச்
சிறியார்எளியராலென்று பெரியாரைத்
தங்கணேர்வைத்துத் தகவல்லகூறுதல்
திங்களைநாய்குரைத்தற்று. என்று கூறினர்.

## 86. சந்திரன் சண்டாளன்வீட்டிலும்பிரகாசிக்கிறான்.

சந்திரன் பிராமணனென்றுஞ் சண்டாளனென்றும் செல்வனென்றுந் தரித்திரனென்றும் பேதமின்றி யாவரது வீட்டிலும் தனது தண்ணொளியை எறிக்கின்றான்.

இவ்விதமே, கடவுளது கருணையும் பிராமணனென்றுஞ் சண்டாளனென்றும் பேதமின்றி, யாவர்க்கும் பொது உரிமையானதே. அவர் தமது கருணைச்சுடரை எங்கும் பரப்பியிருக்கின்றார். ஒவ்வொருவரது வீட்டுமுற்றத்தின் விசாலத்திற்குத் தக்கதாகவே வெண்ணிலாச்சென்று பரவுதல்போல, கடவுளின் கருணைச்சுடரும் அவரவரின் பக்குவத்திற்குத் தக்கதாகவே சென்று பரம்பும்.

ஒருவன் கடவுளில் அன்புகொண்டு, லௌகிகபோக இச்சைகளை மனதார வெறுத்து இருதயத்தினின்று தூரத்தி அவ்விருதயத்தை எவ்வளவுக்கு வெறுமையாக்குகின்றானோ, அவ்வளவுக்கு அவ்விருதயமாகிய பையில் கடவுளின் கருணையாகிய

செல்வம் வந்து நிரம்புகின்றது. ஆகவே, சிலருக்குக் கூடியும், பலருக்குக் குறைந்தும், கடவுளின் கருணையிருப்பதாயின், அதற்குக்காரணம் அவரவரேயன்றிக் கடவுள் அல்லர். இக்கருத்துப்பற்றியே ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகள் "தாமேதமக்குச் சுற்றமுந்தாமேதமக்கு விதிவகையும்......" என்றும், ஸ்ரீ தாயுமானசுவாமிகள் "தண்பருவமலருக்கு மணமுண்டுவண்டுண்டு தண்முகைதனக்குமுண்டோ..." என்றுங் கூறியருளினார்கள்.

## 87. சந்நியாசிகோவணத்துக்குஇச்சித்து சமுசாரம்மேலிட்டதுபோல.

இது ஒரு சரித்திரத்தைப்பற்றிய பழமொழி. அதன் சாராம்சம் வருமாறு:—ஒரு சந்நியாசி தனது கோவணத்தைத்தோய்த்துக் காயவைக்க, எலிகள் எப்போதும் அதைக் கடித்துப் பழுதுசெய்வது வழக்கம். இதனால் சந்நியாசிக்குக் கோவணப்பஞ்சமுண்டாகவே, இதற்கு நிவிர்த்தியென்னவென்றாராய்ந்து, ஈற்றில் ஒரு பூனையை வளர்ப்பதே சரி என்று தீர்மானித்து அவ்வாறே ஒரு பூனையையுந் தேடிக்கொண்டார். ஆனால், சந்நியாசி யோகத்திலிருந்துவிட்டால் பூனையை வளர்ப்பவர் யார்? இப்பிரசினமுண்டாகவே, ஓர் வேலைக்காரனை ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென்று கருதி, அவ்விதமே ஒருவனை நியமித்துங்கொண்டார். சிலகாலஞ்சென்றபின், வேலைக்காரனும் முறுக்கேறப்பெற்றமையால், தனக்கு ஒருபெண்ணை விவாகஞ் செய்துதரல்வேண்டுமென்று சந்நியாசியை வேண்டிக்கொண்டான். சந்நியாசியும் வேறென்செய்வார்? அவ்விதமே அவனுக்கு ஒருத்தியை விவாகஞ் செய்வித்தார். வேலைக்காரன் சிலவருஷங்கள் சென்றபின் பிள்ளைகளும் பெற்றுப் பெரிய குடும்பஸ்தனாகி, சந்நியாசிக்கே பெரிய பாரமாய்விட்டான். அப்போதுதான்ஒருநாள்சந்நியாசி "நான்யார்? நானிருந்த ஆச்சிரமமென்ன? இப்போது நானிருக்கும் நிலையென்ன?" என்று ஞானம் உதிக்கப்பெற்றவராகி, "இச்சோலிகளெல்லாம் கோவணத்திற்கு இச்சித்துத்தானே விளைந்தன" என்று கருதிப் பின்னொருகால் முற்றத்துறந்தனர்.



இவ்விதம், சிலர் அற்பகாரியங்களைப் பெரிதெனப் பேணிக்கொள்ளவிரும்பிப் பெரியகாரியங்களில் தலையிட்டு, அதனால் முன்னிலும் அதிக கஷ்ட நஷ்டம் அடைவர்.

## 88. சாமிவரங்கொடுத்தாலும் பூசாரிஇடங்கொடுக்கமாட்டான்.

தெய்வத்தினிடத்தில் ஒரு வரத்தை வேண்டுவோனுக்குத் தெய்வம் அவ்வரத்தை ஈந்தாலும், பிரத்தியுபகாரத்தை நாடும் பூசாரி இடங்கொடுக்கமாட்டான்.

அதுபோல, அரசர் மேலுத்தியோகத்தர் எசமானர் முதலியோரிடத்தில் ஒருவேண்டுகோளை விரும்பிக் கேட்டவனுக்கு அவர்கள் உத்தரவு ஈந்தாலும் அவர்களின் கீழிருந்து அவ்வுத்தரவை நிறைவேற்றிக் கொடுப்பார் கொடுங்கோன்மைசெய்து காரியக்கெடுதி விளைக்கின்றார்கள்.

## 89. சாராயத்தைத்தினங்குடித்தால் காராளனுங்கடைமகனாவான்.

ஒருவன் எப்படிப்பட்ட கனதனவானாயிருப்பினும், அவன் வெறிப்பதார்த்தங்களை அருந்துவானாயின், படிப்படியாய் மனிதரில் கழிகடையனாய் விடுவான்.

வெறிப்பதார்த்தங்களையருந்தித் தமது மதியைக் கெடுப்போர் எவ்வித பாவங்களையுஞ் செய்வர். எவ்வித கொடுமைகளையும் புரிவர். வெறிப்பதார்த்தங்களுக்காகவே தமது பொருள்களெல்லாவற்றையுஞ் செலவிட்டு, ஈற்றில் வறுமையுமெய்தும்போது, தமது மனைவி மக்களாதியோரின் நகை யுடை முதலியவற்றையும் விற்பர். தமது மனைவி மக்கள் பிதா மாதா முதலியோர் வயிற்றுக்கின்றித் திண்டாடும் பரிதாபமான நிலைமையைக்கண்டும் மனஞ் சிறிதும் இரங்கார். இவ்வாறு குடிவெறிகாரர் எப்போதும் சீவகாருண்ணியமில்லாதவராகவே யிருப்பர். ஆதலால் வெறிப்பதார்த்தங்களை அருந்துதல் மகா பாவமாகும்.

குடிகாரர் பெரும்பாலும் ஆரம்பத்தில் வெறிப்பானீயங்களை அருந்தத் தொடங்கும்போது "இன்றுமாத்திரங் குடித்துவிட்டு இனிக்குடிப்பதில்லை" என்று மெலிந்த தீர்மானஞ் செய்துகொண்டு குடிப்பதே வழக்கம். அல்லது "எல்லாருங் குடிக்கின்றார்களே, நானுங் கொஞ்சமாய்க் குடித்துப் பார்க்கலாம்" என்று கருதிக்கொண்டு குடிப்பார்கள். பின்பு "அன்று நான் குடித்தபோது மதிமயங்கவில்லையே, இன்றுங் கொஞ்சமாய்க் குடிப்பதில் குற்றமில்லை" என்றெண்ணி, முன்னினுங்கொஞ்சம் அதிகமாகக் குடிப்பார்கள். இவ்வாறே படிப்படியாய், காற்குடியர் அரைக்குடியர் முக்காற்குடியராகி, ஈற்றில் முழுக்குடியராகிவிடுவார்கள். ஆதலால், வெறிப்பதார்த்தங்களை யருந்துதலில் மனஞ்செல்லாமல் ஆரம்பத்திலேயே அதனையடக்கிக்கொள்ளல்வேண்டும்.

## 90. சீப்புஎடுத்துஒளித்தால்கலியாணம்நிற்குமா.

ஒருபெண்ணுக்கு நிகழவிருக்குங் கலியாணத்தைத் தடுக்க விரும்பிய ஒருவன், அப்பெண் தலைசீவுகின்ற சீப்பை எடுத்து ஒளிப்பதனாலே, அக்கலியாணந் தடைப்படாது.

இவ்விதமே, தப்பாமல் நிறைவேறித் தீரும் விஷயங்களை அறிவீனர் தமது குயுக்திகளாலுங் குமார்க்கங்களாலுந் தடுக்கமுயலுதலும், ஈசுவரசங்கற்பத்தின்பாற்பட்டுக் காலகதிக்கியைய நடந்தேறுங் காரியங்களை, அரசியல் ஆசாரவியல்களில் தலையிடுவோர்சிலர் அறிவீனத்தினால் தடுத்தும் எதிர்த்தும் வேலைசெய்தலும், இப்பழமொழிக்கு இலக்கியமாகும்.

## 91. சுகத்திற்குப்பின்துக்கம்
## துக்கத்திற்குப்பின்சுகம்.

இன்பமுந் துன்பமும் நிலைத்துநிற்காவென்பது இதன் தாற்பரியம். சச்சிதானந்தந்தவிர மற்றைய இன்பங்களெல்லாம் நிலையற்றனவாகும். லௌகிக இன்பங்கன் தமக்குரிய காலவெல்லைகள் கடந்தபின் துக்கத்தை விளைப்பனவே. இன்பத்தை அ-



நுபவிக்கும்போதுகூட, சற்றுக் காலநீடிப்பாய்த் தோன்றின், அவ்வின்பமே தெவிட்டி அதிருப்தியைத் தருகின்றது. எனவே, உடலும் நிழலும்போல இன்பத்தின் முடிவில் துன்பமுந் தொட்டுக்கொண்டிருக்கின்றதென்பது புலப்படுகின்றது.

இன்பதுன்பங்களை முன்னும் பின்னும் ஆடிக்கொண்டிருக்கும் ஒரு ஊஞ்சலுக்கு ஒப்பிடலாம். ஊஞ்சல் முன்னேகுவதற்குத்தக்கபடி பின்னுக்குஞ் செல்லும். அதுபோல இன்பத்தின் முடிவில் துன்பமும், துன்பத்தில் முடிவில் இன்பமும் வந்தே தீரும்.

மாயையாலாகிய தனுகரணங்களால் அநுபவிக்கப்படும் இன்பமானது விபரீதமாயுணருந் துன்பமேயாமென்றுணர்ந்து உபசாந்தியை நாடிப் பிரமசாக்ஷாத்காரம் அடைந்தபின்னரே, ஊஞ்சல்போன்ற லௌகிக இன்பதுன்பங்கள் தொலையும்.

## 92. சுடலைஞானம்திரும்பிவருமட்டும்.

ஒருவன் இறந்தால், அச் சாவீட்டிற்குச் செல்வோர் தேக அநித்தியத்தைப்பற்றிச் சிந்தித்து ஒருவித ஞானமுதிக்கப்பெறுவது சகசம். ஆனால் அவ்வுணர்ச்சி நீடித்து நிற்பதில்லை. ஆதலால் "சுடலைஞானம் திரும்பிவருமட்டும்" என்று வழங்கலாயிற்று. இச்சுடலைஞானம் பெரும்பாலார்க்கு நீடித்து நில்லாவிடினும், அவரவரின் பக்குவத்திற்கியைய அறிவைக் கிளரப்பண்ணி ஆத்மலாபத்தை விளக்கும்.

மனிதப்பட்சிகள் வாழ்க்கையாகிய மரத்தில் இன்பமாகிய கனிகளையுந் துன்பமாகிய கனிகளையும் இடைக்கிடை புசிக்கின்றன. அப்போது, துன்பமாகிய கனிகளே மனிதனை மேல்நோக்கச்செய்கின்றன. அடிக்கடி துன்பமாகிய கனிகளைப் புசிப்பவன் இத்துன்பங்களுக்குக் காரணமென்ன, நிவிர்த்தியென்ன? என்று ஆராயத் தொடங்கி, அறிவு முதிரப்பெற்று ஞானமெய்துவான். ஆதலின், சீவர்களின் துன்பங்களைக் கண்டு மனம் நெக்குருகாமலிருப்பதிலும், சுடலைஞானமேனும் ஒருவனுக்கு உதித்தல் நன்றே.

சிலருக்குச் சுடலைஞானந்தானும் உதிப்பதில்லை. சிறிதாகினும் சுடலைஞானமேனு முதிக்கப்பெறாதவர், மோக்ஷசோபானங்களின் அடிப்படியிலிருப்பவரேயாவர். இவ்வுலக துன்பங்களில் மிக அற்ப துன்பத்தையும் பெரிதெனக் கண்டு “அந்தோ! இவ்வுலகங் கொடுந் துன்பமாயும் அஞ்ஞானாந்தகாரமாயுமிருக்கின்றதே! இதினின்று சீவர்கள் கடைத்தேறவேண்டுமே!” என்று இரங்கி மேல்நோக்குஞ் சுபாவமுடையோர் கடவுளின் கருணைக்கு மிக அணித்தாயுள்ளவராவர்.

நிதர்சனமாக: கௌதமபுத்தர் ஒரு பிணியாளனையும் ஒரு கிழவனையும் ஒரு பிரேதத்தையுங் கண்டவுடனே பரிதாபமுற்று எண்ணாதவெண்ணமெல்லாமெண்ணி ஞானவுணர்ச்சியெய்தப்பெற்றனர். முன்னர் சித்தார்த்தர் என்னும் பெயரால் விளங்கிய அப்புத்தர் சகல இராசபோகங்களுடனும் ஓர்வித குறைவுமின்றி வாழ்ந்தவர். ஆயினும், அவர் அதிதீவிரபரிபக்குவமுற்று இருந்தமையால், பிணி மூப்புச் சாக்காடுகளைப்பற்றிய அறிவு விளக்கந் தோன்றியவுடன் ஞானவுணர்ச்சிபெற்றுத் துறவறம் பூண்டனர். அவர் கண்ட காட்சியிலும் பார்க்க, பன்மடங்கு பரிதாபகரமான காட்சிகளை அநேகாநேக மனிதர் தினமுங் காண்கின்றார்கள்; ஆயினும் அவர்களெல்லோருக்கும் ஞானவுணர்ச்சி தோன்றுவதில்லை. இதற்குக் காரணம் அன்னோரதுமனம் அத்துணைப் பக்குவமெய்தியிராமையேயாம்.

மேற்சொல்லியவற்றால் ஒருவன் சீவர்கள் அநுபவிக்குந் துன்பங்களைக்கண்டு தன்மனம் எந்நிலையடைகின்றதென்பதை அறிவதுண்டெனின், அவனது மனோபக்குவத்தையும் அறிதல் கூடுமென்பது புலப்படுகின்றது.

## 93. சுருதிசுவாநுபவம் இரண்டுமொத்தால்முத்தி.

சாஸ்திரங்களில் கூறப்பட்டவைகள், தனது சொந்த அநுபவத்துடன் ஒத்துத் தோன்றினால் முத்தி சித்திக்கும் என்பது இதன் தாற்பரியம்.



சாஸ்திரங்களை அறிந்ததனாலாயபயன் உடனே தானேயுண்டாகிவிடுதலில்லை. எப்போதும் அறிவுமுந்தியும், அவ்வறிவின்பயனான கற்றபடிநிற்குஞ் செயல்கள் பிந்தியுமே நிகழும்.

ஒருவன் மாலுமிசாஸ்திரத்தைக் கற்று இன்னதுறைமுகத்திற்கு இன்னவிதமாய்ப் போகவேண்டுமென்று அறிந்தவுடனே அங்கு சென்றுவிடமாட்டான். அதுபோல அறிவைப்பெற்றவன் அவ்வறிவைப்பெற்ற அக்கணமே அவ்வறிவின்படி நிற்றல் எல்லாவிஷயங்களிலும் சாத்தியம் அன்று. அவ்வறிவும் அவனுக்கு அநுபவபாவமாய்ச்சென்று உறைத்தபின்பே கற்றபடி நிற்கவும் இயன்றவனாவான். ஆதலால் ஒருவன் கல்விகளைக்கற்று அறிவைத் தேடுதல் ஒருகாலத்தும் வீணாகாது.

எவ்விதத்தினும் பாரமார்த்திகவிஷயங்களில் அறிவைத்தேடியவன், அவைகளை விரைந்து அநுபவத்திற்குங் கொண்டுவந்து முத்தியெய்துவான். ஆதலால், சுருதியினால் வாய்த்த அறிவு சுவாநுபவத்துடன் ஒத்துத் தோன்றவே முத்தியுஞ் சித்திக்கும் என்பதற்கு ஐயமில்லை.

## 94. செங்கோல்கோணினால் எங்குங்கோணும்.

ஒரு இராசன் தனது அரசியலை முறைதவறி நடாத்துவானாயின், அதனால் விளையுந் தீமைகள் எங்கும் பற்றிக்கொள்ளும் என்பது இதன் தாற்பரியம். “அரசனெவ்வழி குடிகளவ்வழி” நிற்றலால், அரசனின்கீழுள்ள மந்திரிமார் உத்தியோகத்தர் முதலியோரும் அரசனது தயவைப் பெறவிரும்பி அவனது மனோபாவத்திற்கியையவே பெரும்பாலும் ஆளுகையை நடாத்துவார்கள். ஆகவே, அரசன்கோண, அவனால் மந்திரிமார்கோண, அவரால் உத்தியோகத்தர்கோண, ஈற்றில் இராசாங்கம் எல்லாமே கோணிவிடும்.

அவ்வாறு கோணலுற்று முறைதவறி நடாத்தப்படும் இராச்சியத்தில் பிரசைகளின் இராசாங்க சமயாசாரசுதந்தரங்களும் மற்றைய க்ஷேமங்களும் பங்கமெய்தும். எனவே, லௌகி

கபாரமார்த்திக விஷயங்களெல்லாவற்றிலும் கோணலுண்டாகித்தீமைகள் விளையும். இக்கருத்துப்பற்றியே திருவள்ளுவநாயனார் "துளியின்மைஞாலத்திற்கெற்றற்றேவேந்த னளியின்மைவாழுமுயிர்க்கு" என்றும் "அந்தணர்நூற்கும்அறத்திற்குமாதியாய், நின்றதுமன்னவன்கோல்" என்றும் கூறினார்.

### 95. சோறுஞ்சீலையுங்கேளாமலிருந்தால் சோந்தப்பிள்ளையைப்போலவளர்த்துக்கொள்கிறேன்.

யாவருக்கும் இன்றியமையாமல் வேண்டப்படுவன சோறுஞ்சீலையுமேயாம். ஒருவன், தனக்கு ஏவலாளாக அல்லது தருமத்திற்காக ஒரு பிள்ளையை வளர்க்கச் சம்மதிக்குமிடத்து அப்பிள்ளை சோறுஞ் சீலையுங்கேளாமலிருந்தால் சொந்தப்பிள்ளையைப்போல வளர்த்துக்கொள்கிறேன் என்று கூறல் நகைப்பிற்கிடமான அவதந்தரப் பாசாங்காகும்.

அதுபோல, சில எசமானர்களும் அதிகாரிகளும் தமக்குக் கீழ்த்தரமாயுள்ளோருக்கு உசிதமான நன்மைகளையும் சுதந்தரங்களையும் விட்டுக்கொடாமல், தன்னயநோக்கங்காரணமாக அன்னோரிடத்தில் போலியன்பும் போலியநுதாபமுங் காட்டிவஞ்சிப்பர்.

### 96. ஞானமுங்கல்வியும் நாழியரிசியிலே.

உலகத்தில் பிறந்தவர்க்குப் பசிப்பிணியே முதற்பிணியாயிருக்கின்றது. சொற்பமேனும் அன்னம்புசித்து அப்பசியைத் தீர்த்தாற்றான், ஞானத்திலும் மனஞ்செல்லும். தானந்தவங்கல்வி தாளாண்மைஞான மாதியனவெல்லாம், பசிவந்திடில் பறந்துபோம். ஞானிகளுக்குமே இவ்வாறாயின், உலகத்தவர்க்குப் பசிப்பிணியுண்டாயின் அதிக கேடுகள் விளையும்.

ஆதலால், பொருளாதாரங் குன்றிய தேசத்தினர் லௌகிகக்ஷேமங்களை இழத்தல்போலவே பாரமார்த்திக க்ஷேமங்களையும் சிறிதுசிறிதாயிழப்பர் என்று புலப்படுகின்றது. எனவே கிருஷிகம் கைத்தொழில் வியாபாரம் முதலியவற்றிலும் அன்னியரின் ஆதிக்கம் போட்டிகளுக்குட்பட்டிருப்போர் காலாந்தரத்



தில் பாரமார்த்திக விஷயங்களிலும் இழிந்தொழிவரென்பது திண்ணம். இதுபற்றியே,

"மானங்குலங்கல்விவண்மையறிவுடைமை
தானந்தவமுயற்சிதாளாண்மை—தேனிற்
கசிவந்தசொல்லியர்மேற்காமுறுதல்பத்தும்
பசிவந்திடப்பறந்துபோம்" என்னும் பாடலெழுந்தது.

### 97. தட்டிப்பேசஆளில்லாவிட்டால் தம்பிசண்டப்பிரசண்டன்.

சிலர், தாம் சொல்பவைகளை மறுத்துப் பேசத்தக்க வாசாலகாரன் அறிவாளிகள் தம்சமுகத்தில் இலரெனக் காண்பாராயின் அவர்கள் தம்கொள்கைகளைச் சண்டப்பிரசண்டமாய் முழங்கிப் பேசுவார்கள்.

இவ்வாறு பேசுவோன் தான் அறிவிலனாயிருப்பினும் தனது குதர்க்கங்களினாலும் வாயாடித்தனத்தாலும் பாமரரை ஏமாற்றுவான்.

### 98. தணிந்தவில்லுத்தான்தைக்கும்.

ஒருவில்லு எவ்வளவுக்கு வளைகின்றதோ அவ்வளவுக்குத் தன் அம்பை வேகமாய்ச் செலுத்தித் தீங்குவிளைக்கின்றது.

அதுபோல, தாழ்மையாயும் அடக்கமாயுமிருந்து அற்றம் பார்த்துக் காரியம் நடாத்துவோர் காரியசித்தியையும் வெற்றியையும் அடைவர். பகிரங்கத்தில் வீரம்பேசிக் கொக்கரித்துத் திரிவோர் காரியத்திற்கு உதவார். இக்கருத்துப்பற்றியே

"வில்லதுவளைந்ததென்றும்வேழமதுறங்கிற்றென்றும்
வல்லியம்பதுங்கிற்றென்றும்வளர்கடாப்பிந்திற்றென்றும்
புல்லர்தஞ்செய்கைக்கஞ்கிப்பொறுத்தனர்பெரியோரென்றும்
நல்லதென்றிருக்கவேண்டாநஞ்செனக்கருதலாமே."
என்றபாடலெழுந்தது.

### 99. தருமமேஜெயம்.

இப்பிரபஞ்சத்தில் தருமத்திற்கும் அதருமத்திற்கும் என்றும் முடிவெய்தாத போர் விளைந்துகொண்டேயிருக்கின்றது. சிலகாலங்களில் அதருமமேஜெயங்கொள்வது போலவுந்தோன்றும். ஆனால், ஈற்றில் தருமமே ஜெயங்கொள்ளுமென்பதற்குச் சந்தேகமில்லை.

ஈண்டு தருமமென்றது தருமநெறிநிற்போரையும் அதருமமென்றது தீயநெறி நிற்போரையுங் கருதும்.

தருமநெறிநிற்போர் பெரும்பாலுந் துன்பமும் அபஜெயமுமுறவும் அதருமநெறிநிற்போர் இன்பமும் ஜெயமுமுறவுஞ் சிலபோது காணப்படுதலால், "தருமமேஜெயம்" என்று எவ்வாறு கூறலாமென ஆசங்கை நிகழ்த்தலாம். ஆனால், தருமம் புரிவோர்க்கு உடனுக்குடனே இன்பமுஞ் ஜெயமுமுண்டாகுமென்ற கருத்தன்று. தருமம் நீடியகாலங் கழிந்தபின்னருந் தன் பலனைத் தரும். சிலவிஷயங்களில் மறுஜனனங்களிலேயே தனது பலனை யளித்தலுங் கூடும்.

தருமம் ஜெயந்தருவதாயின், உடனே அப்பிறவியிலேயே தரல்வேண்டுமன்றோ எனவும் ஆசங்கை நிகழ்த்தலாம். இவ்வினாவுக்கு தீமைகள் ஏன் இவ்வுலகில் விடப்பட்டிருக்கின்றன என்னும் பிரசினத்தின் சிக்கறுத்தால் விடையுந் தானே கிடைக்கும். உலகத்தவரிடத்தில் அறியாமையால் நிகழுங் குற்றங்களையுந் தீவினைகளையுங்கூட, ஈசுவரன் தனது உபகரணங்களாயமைத்துக்கொண்டு தனது தருமமான சங்கற்பங்களை நிறைவேற்றியருளுகின்றாரென்றும் உண்மையை யுணர்வோர் மேற்படி பிரசினத்தின் சிக்கையும் நீக்க இயன்றவராவர். தீமைகள் எவ்விதமுண்டாயின என்னுங் கேள்வி ஈண்டுப்பொருந்தாது. ஈசுவரனது திரோதான சத்தியின் இயக்கங்களையே நாம் தீமைகளென்று கூறுகின்றோம். ஞானிகள் அத்தீமைகளின் சூக்கும நோக்கங்களையுணர்ந்தமையாலேயே ஈசுவரனை "குற்றநீ குணங்கணீ" என்றும் "தீமைநன்மைமுழுதும்நீ" என்றும் "இன்பமுந்துன்பமுமில்லானேயுள்ளானே" என்றும், "ஆடல்கண்டவனும்நீ ஆடுகின்றவனும்நீ அருளும்நீ மருளும்நீ" என்றும் இன்னும் பலவாறாகப் பாடினார்கள்.



தீயோரால்விளையுந் தீமைகளும் அக்கணத்திலேயோ அல்லது பிற்காலத்திலேயோ நல்லோர்க்கு நன்மையாய்முடிதலையும் அத்தீமைகள் நல்லோரது உள்ளத்தில் புத்திபூர்வமாகவோ அல்லது அபுத்திபூர்வமாகவோ அறிவை விகாசமுறச்செய்து ஆத்மாவை உத்தாரணஞ்செய்தற்குக் காரணமாதலையும் அறிஞரே அநுபவத்தில் உணர்வர்.

மேற்சொல்லியவற்றால், தீயோரது தீங்குகளையும் நல்லோர் தமது ஈடேற்றத்திற்குரிய சாதனங்களாயமைத்துக்கொள்ளலாமென்று பெறப்படுகின்றது. தீயோரது தீங்குகள் நல்லோரது ஈடேற்றத்துக்குக் காரணமாகுமாயின், தீயோர்க்குப் பாபம்விளைதல் தக்கதன்றேயெனின், அற்றன்று. தீவினை விதைத்தவன் தீயகனிகளையே பெறல்வேண்டும். இரண்டாமவன் அத்தீவினையைத் தனக்கு ஞானசாதனமாக்கிக்கொள்வானாயின், அஃது அவனதேயாம். மனிதன் தான்செய்த வினைக்கு நேரேயுரிய பலனைப் பெறுதற்குப் பாத்திரனேயன்றி, பிறரிடத்தில் அவ்வினையின் கடைசிமுடிவு எவ்வாறாயிற்று என்று வினவுதற்கு அருகனல்லன். மனிதன் நினைத்தபடியாகின்றான் ஆதலின் அவனது மனச்சுத்தம் கபடம் முதலியவற்றிற்கியையவே, அவன் தனது வினையின் பயனை நேரே பெறுவான்.

தீவினைசெய்வோர் தற்காலத்திலெய்திய இன்பமுஞ் ஜெயமும், அவர்கள் முன்னீட்டிய நல்வினைகளின்விளைவுகளெனவும் நல்வினைசெய்வோர் தற்காலத்திலெய்திய துன்பமும்அபஜெயமும் முன்னீட்டிய வினைகளின் பிராரத்தபலன்களெனவும் நாம் உணர்தல்வேண்டும். அன்றியும், தெய்வமுண்டென்று நம்பித் தருமநெறி நிற்போருக்கு, அன்னோரது பூர்வதீவினைகள் முற்றி அதிக தீங்குகளுண்டாகாவண்ணம், ஈசுவரனும் அவர்களை ஆரம்பத்திலேயே துன்பத்திற்குள்ளாக்கிப் பின்னர் புனிதராக்கியருளுகின்றார். அதருமநெறி நிற்போர் தாம்செய்ததீவினைகளின் பலனை நெடுங்காலஞ்சென்று முற்றியபின்னர் வட்டியுடன் அநுபவிப்பர். இக்கருத்துப்பற்றியே

"தெய்வமுளதென்பார்தீயசெயப்புகின்
தெய்வமேகண்ணின்றுநின்றொறுக்கும்—தெய்வம்

இலைதென்பார்க்கில்லைத்தமின்புதல்வர்க்கன்றே
பலகாலுஞ்சொல்வார்பயன்"
என்ற பாடலும் எழுந்தது.

மேற்கூறிவிளக்கியவற்றால் நல்வினைசெய்தவன் நன்மையையும் தீவினைசெய்தவன் தீமையையும் அடைவார்களென்பதும், "தருமமேஜெயம்" பெறுமென்பதும் பெறப்பட்டன.

## 100. தலையிடியுஞ்சங்கடமும் தனக்குவந்தால்தான்தெரியும்.

தலையிடியின்வருத்தமும், வாழ்க்கையிலுண்டாகுஞ் சங்கடங்களும் தனக்கு வந்தாற்றான் தெரியும்.

வருந்துவோர்க்குத் தேறுதல் கூறுவோர் இது ஓர் துன்பமா என்று இலகுவாய்க் கூறலாம். ஆனால், தமக்கு அவ்விததுன்பம் நேரிடினன்றோ அவர்கள் அத்துன்பத்தின் கொடுமையை அறிவார்கள்? வாழ்க்கைநடையில் பற்பலவிதமான துன்பங்கள் நேரிடல்கூடும். அவ்வவ்விதத் துன்பங்களை முன்னர் அநுபவித்தவர்களே, அத்துன்பங்கள் இத்தன்மையன என்று சரியாயறிய இயன்றவராவர்.

## 101. தவளைதாமரைக்குச்சமீபமாகஇருந்தும் அதன்தேனைஉண்ணாது.

தாமரைக்குச் சமீபமாக இருக்குந்தவளை அதிலுள்ள தேனை உண்பதில்லை. தூரத்திலுள்ள வண்டுகள் வந்து அத்தேனை உண்ணும். அதுபோல, அறிவீனர் சமீபத்திலுள்ள அருமையான பொருள்களையும் அவற்றின் உபயோகத்தையும் அறியாமல் வீண்போகவிடுகின்றனர்.

இந்தியா இலங்கை முதலிய கீழைத்தேசங்களில் தங்கம் வெள்ளி இரும்பு நிலக்கரி தாவரவஸ்துக்கள் முதலியனஏராளமாய்க் கிடக்கின்றன. அவைகளில், சிலவற்றின்உபயோகத்தை அறியாமையாலும், பலவற்றைச் சுலபமாய்த் தேடி ஊதியம்பெறும்வகை தெரியாமையாலும், சுவதேசிகள் வாளா ஏமாந்திருக்க, அன்னியநாட்டினர் "தூங்குவோன்தொடையில் திரித்தமட்டும்லாபம்" என்று, அப்பொருள்களை நாடித் தேடித் தத்தம் தேசங்களுக்குக் கப்பல்கப்பலாய் அனுப்புகின்றனர். அவர்கள் அங்கு அனுப்பிய இயற்கைப்பொருள்களைத் தமது வித்தையின் சாதுரியத்தினால் மனிதருக்கு உபயோகமான பலவித கைத்தொழிற்பொருள்களாக மாற்றித் தமது தேவைகளுக்கும் எடுத்துக்கொண்டு, எஞ்சிய சாமான்களை, மறுபடியும் கப்பற்கூலி தரகுகூலி சுங்கவரி லாபம் முதலியனவுஞ் சேர்த்து இத்தேசத்தினர்க்கே விற்றுப் பெரும் ஊதியம் பெறுகின்றனர். இவ்விஷயத்தில் சுவதேசிகள் தவளைக்கும் அன்னியநாட்டினர் வண்டிற்கும் ஒப்பாகின்றனர்.



## 102. தவிட்டுக்குவந்தகைதான்தனத்துக்கும்வரும்.

எத்துணைச் சிறியபொருளாயிருப்பினும், அதனை இது அற்பபொருள்தானே என்றெண்ணிக் களவாய்க் கவர்வோன், காலாந்தரத்தில் பெரிய களவுகளுஞ் செய்தற்குத் துணிவான்என்பது இப்பழமொழியின் தாற்பரியம்

## 103. தனக்குக்கண்டு தானம்வழங்கு.

பிறர்க்குத் தருமமாய் அல்லது உபகாரமாய், ஒருவன் தனதுபொருளைக் கொடுக்கும்போது, தனக்கும் தன்னை நம்பியிருப்போராகிய மனைவிமக்களாதியோர்க்கும் ஊண் உடை முதலியவற்றிற்குப் போதிய செல்வத்தைச்சேமித்துக்கொண்டே, தானம்வழங்கல் வேண்டுமென்பதை இப்பழமொழி யுணர்த்துகின்றது.

## 104. தன்னைஅறிந்தவன் தலைவனைஅறிவான்.

ஒருவன் தன்னை அறிவானாயின், தனது தலைவனாகிய கடவுளையும் அறிவான் என்பது இதன் தாற்பரியம்.

முத்தியை நாடுவோர் பதியையுணரல் வேண்டுமென்று கூறப்படினும், தன்னையும் தனக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தத்தையும் அறிதலாலேயே பதியை அறிதலுஞ் சித்திக்கின்

றது. எனவே, தன்னை அறிபவன் தலைவனையும் அறிவான். பட்டணத்துப்பிள்ளையாரும் "சற்றாகினுந் தன்னைத்தான்அறியாய்" என்று கூறிய பாடலினால் இப்பழமொழி வலியுறுத்தப்படும்.

ஒவ்வொருவரும் நான் நான் என்பது என்ன என்று ஆராய்பவர் மிகச் சிலரேயாவர்.

நான் என்பது என்ன? பஞ்சபூதங்களின் சேர்க்கையினாலான இத்தேகம் நானா? அல்லது இத்தேகத்தில் நிறைந்திருக்கும் பிராணமயம் நானா? அல்லது மனம்நானா? அல்லது புத்திநானா? அல்லது வேறெதுதான்நானாகும்? இவ்வாறு தன்னைத்தானே ஆறித்தேறி ஆராய்ந்து உண்மையை அறிய முயல்வோர் பதியையும் அறிய இயன்றவராவர்.

வேதாந்த சாஸ்திரத்தின்படி சீவனாகிய சிதாபாசனேநான் என்னும் அகங்கார புருஷனாவான். சிதாபாசனென்றால் சித்தைப்போன்றவன் என்று அர்த்தம்.. பரமார்த்தமாயுஞ் சத்தாயுமுள்ள சித்து ஒன்றுதான். அதுவே பரமசிவமென்னும் பிரமமாகும். சீவர்கள் தமக்கென வேறானசித்துடையோரல்லர். மஞ்சளுஞ் சுண்ணாம்புங் கூடியவிடத்து, அவ்விரண்டுமல்லாத சிவப்புநிறந் தோன்றல்போல, அநாதியேயுள்ளசைதன்னியம் அவித்தையிற் பிரதிபிம்பித்து அவ்விரண்டுமல்லாச் சீவர்கள் ஆதியுடையவர்களென்று கருதப்படத்தக்கவரல்லர். எவ்விதம் மஞ்சளுஞ் சுண்ணாம்புங்கூடி யுண்டான சிவப்பை வஸ்துவாக நோக்குமிடத்துப் புதிதாயுண்டானதென்று கூறமுடியாதோ, அவ்விதமே சீவர்களையும் ஆதியுடையவர்களென்று கூற முடியாது.

தனக்கென ஒளியின்றிச் சூரியனிடத்தில் ஒளியைப்பெற்ற கண்ணாடியானது சூரியனொளி காணாத இருட்டு வீட்டினுள்ள வஸ்துக்களையும் விளக்கிக் காண்டல்போல, சீவர்களும் மாயையினாலான இப்பிரபஞ்சத்தைக் காண்பர்.

சீவர்கள் நான் நான் என்னும்போது பிரதிபிம்பசித்தாகிய சிதாபாசனையே கருதும். இவ்விதம் எல்லாரும் நான்நான் என்று கூறுவதற்கு ஆதாரமாயும் அதிட்டானமாயும், எல்லாருக்



கும் தான் என்னும் உணர்ச்சிக்கு விஷயமாயுமுள்ள சித்துஒன்றுதான். அதுவே அதிட்டான நான் ஆகிய பிரமசைதன்னியமாம். ஆரோப நான் என்பதே சீவனாகும்.

பல குடங்களில் பிரதிவிம்பித்த சூரியர்களுக்கு உண்மையான சூரியனே ஆதாரமாயிருத்தல் போல, எல்லாரும் நான் என்பதற்குப் பிரமசைதன்னியமே பொருளாயும் ஆதாரமாயுமிருக்கின்றது. அதுதான் சச்சிதானந்த சிவமாகும். ஆகவே, பிரமம் ஒன்றே பரமார்த்த சத்தாகவும், மற்றையனவெல்லாம் வியாவகாரிகசத்துக்களாகவுமே முடியும்.

இங்ஙனமாயின், முத்தியை அடைவது யாது என்று ஆசங்கை நிகழ்த்தலாம்எனின், அதற்குச் சமாதானம் வருமாறு:—

அவித்தையின் காரியங்களாகிய அனான்மதத்துவங்களெல்லாங் கழிந்தொழிந்துபோக, சிதாபாசனுக்கு உயிராய் நின்ற கூடஸ்தராகிய பிரத்தியே கான்மாவே எஞ்சுகின்றது. பளிங்கின் நிறத்திற்கியைய, அதனுள்ளிருக்கும் அக்கினி வெளிச்சமும் விகாரமுற்றுத் தோன்றினும் வாஸ்தவத்தில் அக்கினிதனது ஸ்வரூபத்தில் எவ்விதம் மாறுதலடையவில்லையோ அவ்விதமே தடஸ்தமாயும் கூடஸ்தமாயும் நின்ற இப்பிரத்தியகான்மா முக்காலத்திலும் இன்பமுறவுமில்லை துன்பமுறவுமில்லை பந்தமுறவுமில்லை முத்தியுறவுமில்லை. இவ்வாறே வேதாந்த சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆயினும், அந்த உண்மையை ஒருவன் ஈசுவரகடாட்சத்தினால் வாய்த்த அநுபூதிஞானத்தினால் உள்ளத்தில் உணர்ந்தறியலாமேயன்றி, வாக்கினால் எழுத்தினால் விளக்கிக்காட்டல் அசாத்தியமேயாம்.

மேலே காட்டிய கொள்கைகளை வலியுறுத்தற்குப் பிரபல பிரமாணங்கள், இந்நூலின் அந்தத்தில் "வேதத்திற்கு உலகம் பகை, உலகத்திற்கு ஞானம்பகை" என்ற பழமொழியின் விளக்கவுரையிற் காண்க.

**105. தனக்குப்பிறந்தபிள்ளைதவிட்டுக்குஅழும்போது ஊரார்பிள்ளைக்குக்கூட்டுக்கலியாணம்செய்வதுபோல**

ஒருவன் தனக்குப்பிறந்தபிள்ளை தவிடுதானும் கிடையாமல் பசியினால் வருந்தும்போது, அப்பிள்ளையைப் போஷித்தலே தனது முக்கியகடமையாமென்றுணராமல், ஊராரது பிள்ளைக்குக் கலியாணம் நிறைவேற்ற முயல்வானாயின், அவன் தருமநெறியினனல்லன்.

அதுபோல, சிலர் தாம் அவசியஞ்செய்யவேண்டியகடமைகளைக் கவனியாமல் விட்டு, அனாவசியகமான செயல்களைப் புரிதற்கு முற்படுகின்றனர்.

திருஷ்டாந்தமாக: சிலதேசத்தினர் தமது தேசம் வறுமைபிணி அடிமைத்தனம் முதலியவற்றால் வருந்தும்போதும், அவைகளை நிவிர்த்தித்தலே தமது முக்கிய கடமையாமென்றுணராமல், பிறதேசத்தினருக்கே தான தருமங்கள் புரிய முந்திக்கொள்கின்றார்கள்.

சகல சீவர்கள்மீதும் சமத்துவ சீவகாருண்ணியமுடையோராயிருத்தலே சிறந்ததாயினும், ஒவ்வொருவரும் தத்தமக்குரிய முக்கிய கடமைகளை நிறைவேற்றலே அவசியமென்றுகருதி ஒழுகாவிடத்து, சமத்துவ கருணையும் சீவகாருண்ணியத்தின்பாற்படாது.

அன்றியும், ஒருவனுக்குச் சுகபோகங்களை ஏற்படுத்திக்கொடுத்தலினும், துன்பமுறுகின்ற சீவர்களின் விக்கினங்களை நீக்கிவிடுதலே ஆவசியகதருமமாகும்.

### 106. தாடிபற்றிக்கொண்டெரியும்போது சுருட்டுக்குநெருப்புக்கேட்டானாம்.

யாவரேனும் கஷ்டநஷ்டங்களடைந்து ஆபத்திலிருக்கும்போது, அவர்களுக்காக இரங்கித் தானும் தன்னாலியன்ற உதவியைச் செய்யாமல், அவ்வாபத்திலிருந்து தனக்கு யாதேனும் நன்மை கிடைக்குமாவென்று நாடுவோர் இப்பழமொழிக்கு இலக்கியமாவர்.

### 107. தாட்டோட்டக்காரனுக்குத்தயிருஞ்சோறும் விசுவாசகாரனுக்குவெந்நீரும்பருக்கையும்



இச்சகம்பேசல் புரட்டுருட்டு தந்தரம் வசீகரசாதுரியம்முதலியனவுடையோரையே சிலர் தக்காரென மதித்து, அன்னாருக்கு விசேஷநன்மைகளும் உபசாரங்களுஞ் செய்வர்.

விசுவாசிகராயும், நல்லவர்களாயும் அடக்கமுடையோராயும் தாமாகவே ஒன்றைக் கேளாதவராயுமுள்ளோரைப் பேயரெனக் கருதி மதிப்புக்குறைவாய் நடாத்துவர். இவ்விதஞ்செய்வோர் இப்பழமொழிக் கிலக்கியமாவர்.

### 108. தாயைப்போலப்பிள்ளை நூலைப்போலச்சீலை.

நூல் எவ்வளவு மெல்லிதாயிருக்குமோ அவ்வளவு மெல்லிதாகவே சீலையுமிருக்கும். நெசவுசெய்வோனும், நெசவுக்குரிய காரணங்களும் எவ்வளவு மேன்மைபொருந்தியிருப்பினும், நூல் திறமானதாயில்லாவிடின், சீலையுந் திறமின்றாம்.

இவ்விதமே, பிள்ளைகளும் தாயைப்போலவே இருப்பார்கள். ஒருதாய் எவ்வித மனோபாவங்களும் குணங்களுமுடையளாயிருக்கின்றாளோ அவ்வித மனோபாவங்களும் குணங்களுமுடையராகவே மக்களும் பெரும்பாலும் இருப்பர்.

மிக அரிதாய், தாயைப்போலின்றிய பிள்ளைகளுமிருத்தலால், இது பொதுவிதியான பழமொழியாகும்.

ஒருசாதியாரிலுள்ள பெண்கள் எவ்விதநாகரிகமும் மனோபாவமுமுற்றிருக்கின்றார்களோ அவ்வித நாகரிகமும் மனோபாவமுமுற்றவர்களாகவே அந்தச்சாதியின் ஆடவர்களுமிருப்பர். ஆதலால், தம்மைச் சீர்திருத்தியமைக்க விரும்புஞ்சாகியத்தார் பெண்களையே முந்திச் சீர்திருத்தமுடையராக்கல்வேண்டும்.

### 109. தாய்மனம்பித்து தகப்பன்மனங்கல்லு.

பெரும்பாலும், தந்தையிலும் தாயே பிள்ளைகளிடத்தில் அன்புடையளாயிருப்பாள். தந்தை ஒவ்வோர் காரணம்பற்றிப் பிள்ளைகளை வெறுத்துந் தள்ளுவான். தாயோ எக்காரணம்பற்றியேனும் தான்பெற்ற பிள்ளைகளை வெறுக்கமாட்டாள்.

ஸ்ரீ தாயுமானசுவாமிகள், "பொல்லாதசேயெனில் தாய்தள்ளல்நீதமோபுகலிடம்பிறிதுமுண்டோ" என்றும் "தாயானகருணைகாட்டி" என்றும், தாயையே விசேடித்துக் கூறினார்.

மனிதரில் ஆறுவிரல்களுடையோரும் அரிதாயிருத்தல்போல, தாயினும் தந்தையே அதிக அன்புடையனாயிருத்தலுமுண்டு.

## 110. தீப்புண்ஆறும் வாய்ப்புண்ஆறாது.

நெருப்பினால் சுட்டு உண்டான புண் ஆறும். வாயினால் ஒருவரைச் சுடவுரைத்துண்டானபுண் ஒருகாலத்தும் ஆறாது.

வசைமொழிகூறியும், குத்திரம் பேசியும் ஒருவரது மனத்தைப் புண்ணாக்கினால், அப்புண் ஆறுதல் அரிதினும் அரிதேயாம்.

சுற்றத்தவர் சிநேகர் முதலியோர்க்கிடையிலெழுகின்ற ஆற்றக்கூடாத பகைகள், பெரும்பாலும் ஒருவரையொருவர் சுடவுரைத்தலினாலேயே உண்டாகின்றன. ஒருவன் கொண்டிருக்கும் எவ்வித பகையும் நீங்குமியல்பினது. ஆனால், வாயினாற்சுடவுரைத்துண்டான பகைநீங்கல் மிக அரிதேயாம்.

பிறர்செய்த தீமைகளை மறக்குஞ் சுபாவமுடையோராகிய நல்லோரது உள்ளத்திலும், சுடவுரைத்துண்டான புண்ஆறமாட்டாது.

ஆதலால் ஒருவன் தன்னெதிரிக்கு எவ்வித தீங்கைப்புரியினும், வாயினாற் சுடவுரைத்தலாகிய தீங்கை ஒருகாலத்துஞ்செய்யலாகாது. மற்றைய தீங்குகளினாலுண்டாகும் பகைகள் ஓர்காலத்திலே தணிவடைந்து, அப்பகையாளர் முன்போலப் பரஸ்பர அன்புடையராயிருத்தலுங்கூடும். சுடவுரைத்துப் பிரிவுற்ற பகையாளர் ஒருபோது மறுபடியுங் கூடினாலும், அவர்களுடைய உறவு நொய்மையுற்றதாகவேயிருக்கும். இக்கருத்துப்பற்றியே ஆன்றோரொருவர்,

நீக்கமறுமிருவர்நீங்கிப்புணர்ந்தாலும்
நோக்கினவர்பெருமைநொய்தாகும்—பூக்குழலாய்



நெல்லினுமிசிறிதுநீங்கிப்பழமைபோற்
புல்லினுந்திண்மைநிலைபோம். என்று கூறினர்.

திருவள்ளுவநாயனாரும், "தீயினாற்சுட்டபுண்ணுள்ளாறுமாறாதே, நாவினாற்சுட்டவடு" என்றருளினார்.

ஆதலால், சனவசியத்தையும், சுற்றத்தவரின் உறவையும் நல்லோனென்னும் பெயரையும், பெறவிரும்புவோன் ஒருவரையுஞ் சுடவுரைத்தலாகாது.

## 111. துஷ்டனைக்கண்டால் தூரத்தூர.

குணக்கேடராகிய துஷ்டரைக்கண்டால், பெரியோர் தூரவிலகிக்கொள்ளலே மரபாகும். வழிநடைகளில் மாத்திரமன்றி மற்றையவிதங்களிலும் துஷ்டரது சம்பந்தம் தமக்குண்டாகாதபடியிருப்பர் பெரியோர். இக்கருத்துப்பற்றியே ஆன்றோரொருவர்,

கொம்புளதற்கைந்துகுதிரைக்குப்பத்துமுழம்
வெம்புகரிக்காயிரந்தான்வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங்கண்ணிற்றெரியாததூரத்தே
நீங்குவதேநல்லோர்நெறி. என்று கூறினார்.

## 112. துறவறம்இல்லறம்மனதிலே.

முத்திப்பேற்றை விரும்பித் துறவறம்பூணுதலும், அவ்வாறின்றி லௌகிக இன்பங்களை விரும்பி இல்லறத்திருத்தலுமாகிய இரண்டும், ஒருவனது மனத்தின் சுத்தத்தையுங் கபடத்தையுங் கொண்டே அளவிடற்பாலனவாம்.

ஒருவன் துறவெய்தியபின்னரும், லௌகிக போகங்களை மனதார விரும்புவானாயின், அவன் துறவியல்லன்.

பகிரங்கத்தில் துறவாவிடினும், இவ்வுலகநடைக்கும் துன்பங்களுக்கும் அஞ்சி, மனத்தில் துறவெய்தி, சீவகாருண்ணியம் பாசவைராக்கியம் ஈசுரபத்தி பிரமஞானமாகியவைகளுடையராயிருப்போர் அந்தரங்கத் துறவிகளாவர். அவ்விதமானோர்

பிராரத்த வினைப்பலன் கழியும் வரையிலும் லௌகிகத்திலிருந்து இறைவன் தரும் போகங்களை நுகர்ந்து, எல்லாச் செயல்களும் இறைவன்செயலேயாமெனக் கண்டு "மத்தர் பேயரொடு பாலர் தன்மை" மருவிநிற்பர். அவர்கள் உலகினருய்யும்பொருட்டு லௌகிகத்தினர்க்குரியனபோன்ற தொழில்களையுஞ் செய்வர். அன்னோரின் மனோநிலையைச் சாதாரணசனங்கள் அறியமாட்டார்கள், இக்கருத்துப்பற்றியே சிவவாக்கியர்,

"மனத்தகத்தழுக்கறுதமவுனஞானயோகிகள்
வனத்தகத்திருக்கினுமனத்தகத்தழுக்கறார்
மனத்தகத்தழுக்கறுத்தமவுனஞானயோகிகள்
முலைத்தடத்திருக்கினும்பிறப்பறுத்திருப்பரே."

என்றும், பட்டணத்துச்சுவாமிகள்,

"காடேதிரிந்தென்னகாற்றேபுசித்தென்னகந்தைசுற்றி
ஓடேயெடுத்தென்னஉள்ளன்பிலாதவர்ஓங்குவிண்ணோர்
நாடேயிடைமருதீசர்க்குமெய்யன்பர்நாரியர்பால்
வீடேயிருப்பினும்மெய்ஞ்ஞானவீட்டின்பமேவுவரே."

என்றும் அருளினார்கள்.

## 113. தேளுக்குமணியங்கொடுத்தால் சாமத்துக்குச்சாமங்கொட்டும்.

தகுதியில்லார்க்கு உயர்ந்த பதவிக்குரிய அதிகாரங் கொடுத்தால், அவர்கள் அதனைத் தகாதவிதமாயுபயோகித்து அனர்த்தம் விளைப்பார்களென்பதை யுணர்த்துதற்காகவே இப்பழமொழியெழுந்தது.

ஒருதீயவன், பொதுவிஷயங்களில் அதிகாரமற்றவனாயிருப்பானாயின், அவனால் பொதுச்சனங்களுக்கு அதிகதீங்கு விளையச் சந்தர்ப்பமிராது. ஆனால், அவனிடத்தில் உயர்ந்த பதவிக்குரிய அதிகாரத்தைக் கொடுத்துவிடின், அவன் அவ்வதிகாரத்தைத் தவறாக உத்தியோகித்து, தனக்குப் பிரியமானவர்களிடத்தில் வேறொருவிதமாகவும் நியாயரீதி தவறிஒழுகி அனர்த்தம் விளைப்பான்.



ஒருதேசத்தின் சமுட்டிக்ஷேமமானது அரசியல் சமயவியல் ஆசாரவியல்களுடனேயே முக்கியமாகச் சம்பந்தப்பட்டிருப்பதால், அவற்றிற்குரிய பதவிகளைத் தகுதியில்லார் வகிக்கும்படி செய்தலாகாது. இக்கருத்துப்பற்றியே முன்னொருவர்,

"உடைப்பெருஞ்செல்வத்துயர்ந்தபெருமை
அடக்கமிலுள்ளத்தனாகி—நடக்கையின
ஒள்ளியனல்லான்மேல்வைத்தல்குரங்கின்கைக்
கொள்ளிகொடுத்துவிடல்" என்று கூறியுள்ளார்.

## 114 தோடையையுங்கிள்ளித் தொட்டிலையும்ஆட்டுகிறதா.

சிலர் ஒருவனுக்குக் கஷ்டநஷ்டங்களுண்டாகும்வண்ணம் சதிசூழ்ந்துவிட்டு, தாம் அவ்வாறு செய்யாதவர்கள் போலக் காட்டிக்கொள்ளுமாறாக, தமது சூழ்ச்சிக்குளகப்பட்டவனிடத்திற்கே சென்று அவனுக்கு அக்கஷ்டநஷ்டங்களை நிவிர்த்திக்கஉதவிசெய்வார்போல நடிப்பர். இன்னோர் இப்பழமொழிக்கிலக்கியமாவர்.

## 115 தொட்டிற்பழக்கஞ்சுடுகாடுமட்டும்.

ஒருவனுக்குச் சிறுபிள்ளையிற் பழகிய பழக்கம், தான் சாகுங்காலம்வரையிலும் நீங்காமல் நிற்கும்.

சிறுபிள்ளைகளின் மனத்தைச் சுத்தமான வெள்ளைக் காகிதத்திற்கு ஒப்பிடலாம். வெள்ளைக்காகிதத்தில் அருமையான நல்விஷயங்களையெழுதி ஆயிரம்பொன் பெறுமதியாகவுஞ் செய்யலாம் அல்லது வீண்விஷயங்களைத் தாறுமாறாயெழுதி ஒரு அற்பவிலைதானும் பெறாதபடியுஞ் செய்யலாம்.

அதுபோல, சிறுவர்களின் மனத்திலும், இளமையிலேயே உயர்வான மனோபாவங்களும், உத்தமகுணங்களும், நல்லறிவுகளும் பதிந்தழுந்துமாறு அவர்களைப் பயிற்றிவந்தால் பெரியவர்களானபின்னர் அன்னோர் சிறந்து விளங்குவர். இளமையிற் சரியாய்ப் பழக்கப்படாதவர் முதிர்ந்தபின் திருந்துதல் மிக அரிதாகும்.

இளமையிற் சரியானபழக்க ஒழுக்கங்களின்றியிருந்தோர் பின்னர்த் திருந்துதல் முற்றாய் அசாத்தியமோவெனில், இயற்கைக்குணம் நன்றாயமையப்பெற்றவர்கள் அதிக பிரயாசத்தின் மேல் திருந்துதலும் சாத்தியமேயாமென்க.

## 116. தோட்டப்பார்த்தால்தோட்டியும்உறவு.

இனமுறைகளைக் கடைபோக ஆராய்ந்தால் ஒருவிதத்தில் தோட்டியும் உறவுடையோனவன் என்பது இதன்பொருள். கீழ்க்குலத்தினர் சந்ததிக்கிரமத்தில் மேற்குலத்தினராய் மாறிவருதலே உலகவியல்பு என்னுந் திண்ணங்குறித்து இப்பழமொழியெழுந்தது.

## 117. தோளிலிருந்துசெவியைக்கடிக்கிறதா.

ஒருவனது தயவின்கீழிருந்து அவனால் நன்மைகளையடைந்துகொண்டும், அவனுக்குத் தீமைகளை அல்லது மனம் வருந்தத்தக்க செய்கைகளை வருவித்தலாகாது. அவ்விதஞ்செய்தல் இழிந்த குணமாகும்.

## 118. நல்லநினைவைஅநுசரித்தலே கெட்டநினைவைநீக்கல்.

மனிதரது மனத்தில் வந்து நுழையுங் கெட்ட எண்ணங்களை எத்துணை வலிமையுடன் துரத்தினாலும் அவை மறுபடியும்வந்து ஒட்டிக்கொள்ளும். அவ்வெண்ணங்களைத் துரத்துவதற்குச் சுலபமான வழியென்னெனில் மனத்துக்கு உவப்பானநல்விஷயங்களைப் பற்றிச் சிந்தித்தலும் அவைகளிற் பிரவிர்த்தித்தலுமேயாம்.

நல்லெண்ணங்களே மனத்தில் மேலிட்டு நிற்கும்போது தீயவெண்ணங்கள் நுழைதற்கு இடமின்றித்தாமேஅகன்றுவிடும்

## 119. நல்லோர்நடக்கை தீயோர்க்குத்திகில்.

சன்மார்க்கமுடையோரது நல்லொழுக்கமானது தீயோர்க்குத் திகிலையேயுண்டாக்கும். ஏனெனில் தருமநெறிபற்றியொழுகுகின்ற நல்லோர் தீயோரது அதருமமான செயல்களுக்கு



இடங்கொடுக்கமாட்டார்கள். அவர்கள் தருணம்வாய்க்கு மிடத்தெல்லாம் தீயோரது பொய் களவு கோள் அவதந்தரம் ஆதியதீயசெயல்களைக் கண்டித்தும் அத்தீயசெயல்கள் அநுகூலமாகாவண்ணம் தடுத்தும், தருமத்தை நிலைநாட்டவே முயல்வார்கள். ஆகவே, அத்தீயோர் தாம் அரசினரது தண்டனைக்குள்ளாகுதற்கும் அந்நல்லோரது சான்றே எக்காலத்தும் காரணமாகக்கூடுமென்றுங்கருதித் தம்முள்ளத்தில் திகில்கொள்வர்.

## 120. நாடெங்கும்வாழ்ந்தால்கேடொன்றுமில்லை.

நாடெங்கும் வறுமையின்றிச் சுபிட்சமாய்வாழ்ந்தால், அந்நாட்டில் தீங்குகளொன்றும் இருக்கமாட்டாது என்பது இதன்பொருள்.

இவ்வுலகில் பொய் கொலை களவு வியபிசாரம் முதலிய தீமைகளுக்கு வறுமையும் ஓர் காரணமாயிருக்கின்றது. வறுமையின் கொடுமையை ஆற்றாமையால் தான் பெரும்பாலார் தீச்செயல்கள் புரிகின்றனர். ஆதலால், நாடு சகலவித வளப்பமும்பொருந்தி வறுமையின்றியிருக்குமானால், அந்நாட்டில் கேடுகள் குறையுமென்பதற்குச் சந்தேகமில்லை.

ஒருநாடு நிரந்தரமாய் வறுமையின்றியிருத்தற்கு, அந்நாட்டில் யாவருக்கும் ஊதியம் பயக்கக்கூடிய பிழைப்பு இருத்தல் வேண்டும். அவ்வாறு நிரந்தரமான பிழைப்பு இருத்தற்கு அந்நாட்டில் கிருஷிகம் கைத்தொழில் வியாபாரம் முதலியன போதியபடி இருத்தல்வேண்டும். இவ்வாறிருக்குமாயின் அந்நாட்டில் யாவருக்கும் பிழைப்புக்கு இடமுண்டாகி எல்லாருந் தத்தம் தொழிலைச் செய்து யோக்கியமாய்ச் சீவிப்பார்கள்; புரட்டுருட்டுத் தொழில்களிற் பிரவேசிக்க ஆவசியகமிராது.

நாடு எங்கும் சுபிட்சமாய் வாழ்ந்தாற்றான் பிச்சைபுகுவோர்க்கும் பிச்சைகிடைக்கும். பிச்சையுங் கிடைத்தல் கஷ்டமென்று அறிந்தபின்னரே பெரும்பாலார் மோசமான புரட்டுருட்டுத் தொழில்களை நாடுகின்றனர்.

கூட்டமாயுஞ் செழிப்பாயுமிருக்குமிடங்களில் வளருகின்றமரங்கள் ஒன்றுக்கொன்று குளிர்மையாயிருந்து மேன்மேலுஞ் செழித்து வளர்தல்போல, செல்வர்கள் நிறைந்துள்ள நாட்டினர் மேன்மேலுஞ் செல்வம் பெருகி வாழ்வர்.

வரண்ட மணற்றரையிற் பாய்ச்சப்படுந் தண்ணீர் அருகிலுள்ள வரண்ட மணல்களாலும் உறிஞ்சப்பட்டுவிடுதல்போல, வறுமையுற்ற தேசத்தில் அங்கொருவர் இங்கொருவராய்ச் சிதறுண்டிருக்குஞ் செல்வர்களது பொருள்களும் ஏழைகளால் உறக்கப்பட்டு விருத்தியெய்தா. இக்காரணத்தினாலேயே பொருளாதாரநிலையில் மேம்பட்டிருக்கும் நாட்டினருடன் ஏழைநாட்டினர் கைத்தொழில் வியாபாரம் முதலிய விஷயங்களில் போட்டி விளைத்து வெல்ல இயலாதவர்களாயிருக்கின்றனர். கைத்தொழில் வியாபார விஷயங்களில் முற்றாய் அன்னியரின் ஆதிக்கத்துக்குட்பட்டிருப்போர், ஐக்கிய நாணய சங்கங்கள் ஸ்தாபித்து ஒத்துழைப்பதாலும், அன்னியவஸ்து பஹிஸ்காரஞ்செய்து சுதேசவஸ்துக்களை ஆதரிப்பதாலும், காலாந்தரத்தில் மீட்சிபெறுதலுங் கூடும்.

மேற்சொல்லியவற்றால் ஒருநாட்டினர் கைத்தொழில்வியாபாரம் கிருஷிகம் முதலியவைகளை விருத்திசெய்து சனங்களுக்குச் சுலபமாய்ப் பிழைப்புக் கிட்டும்வண்ணஞ் செய்துகொண்டால், அந்நாட்டில் கேடுகள் குறைந்து தருமங்கள் விருத்தியாகும் என்பது புலப்படுகின்றது.

### 121. நான்பிடித்தமுயலுக்கு மூன்றேகால்.

ஒருமுறை வெளியிட்ட வார்த்தையை அது தவறுடைத்தென்று அறிந்த ஞான்றும் மாற்றாமல், தன் கொள்கையையே பிடிவாதமாய்த் தாபித்துப் பேசுவோர் இப்பழமொழிக் கிலக்கியமாவர்.

ஒருபோது வானத்தை வில்லாக வளைத்தாலும், மூடப்பிடிவாதக்காரரைத் திருத்துதல் அசாத்தியமேயாம். அறிவாளிகள் தாம்கொண்ட அபிப்பிராயந் தவறுடைத்தென்று அறிந்தால்,



உடனே திருத்திக்கொள்வார்கள். மூடப்பிடிவாதக்காரரோ, தமது கொள்கைகளை மாற்றினால் தோல்வியடைந்தமைபோலாகுமென்று கருதி, முன்னிலும் அதிக க்ஷாத்திரத்துடன் அக்கொள்கைகளைத் தாபித்துப் பேசுவர். அன்னோர் இவ்வாறு பிழையான கொள்கைகளைத் தாபித்துப் பேச முயல்வதனால், அம்மூடக்கொள்கைகளை நிலைநிறுத்தற்காக மேன்மேலுந் தாமேபிழையான கொள்கைகளைக் கைக்கொள்ளவேண்டியவர்களாகின்றனர். எனவே, மனத்தை நடுநிலையிலிருத்தி விஷயங்களை நோக்குதற்கு அசக்தர்களாகி, ஈற்றில் சிறிய விஷயங்களிலுஞ் சரியான அபிப்பிராயம் வெளியிடற்கு இயலாதவர்களாகி விடுகின்றனர்.

### 122. நாறல்தூற்றல்நரிக்குக்கொண்டாட்டம்.

நரியானது நாறற்பிணங்களையும் அசுசியான உணவுகளையுமே அவாவுடன் விரும்பும்.

அதுபோல, சிலர் தீயவிஷயங்களையே அவாவுடன் விரும்புகின்றனர். பிறரது குடும்பசம்பந்தமான இரகசியங்கள் தவறுகள் குற்றங்கள் முதலியவற்றை ஆவலுடன் நாடித் தேடித் தம்முள்ளத்தில் சேமித்து வைத்து வேண்டியபோதெல்லாம் அலர்தூற்றியுங் கோளுரைத்துந் திரிவோர் இப்பழமொழிக் கிலக்கியமாவர்.

### 123. நுனிக்கொம்பிலிருந்து அடிக்கொம்பைத்தறிப்பதுபோல.

ஒருவன் ஒரு மரத்தின் நுனிக்கொம்பிலிருந்து அடிக்கொம்பைத் தறிப்பானாயின், முடிவில் அவனும் அக்கொம்பருடன் கூடவே விழுந்து அழிவுறுவான்.

அதுபோல சிலர் தமது நன்னிலைமைக்குக் காரணமானமூலாதாரங்களுக்கே கேடுவிளையத்தக்க செயல்களை மூடத்தனத்தினால் செய்கின்றார்கள்.

### 124. பசித்தவன்பழங்கணக்குப்பார்த்ததுபோல.

ஒருவன் தான்புசித்தற்கு உணவின்றிப் பசியினால் வருந்தும்போது அப்பசி உடனே தீர்தற்குரிய வழிவகைகளையே முந்தித் தேடல்வேண்டும். அங்ஙனமின்றி, தனக்குப் பழையகடன்காரரிடத்தில் கிடைக்கவேண்டிய பணம் எவ்வளவென்று கணக்குப்பார்த்து அதனை வசூலித்து உணவுப்பதார்த்தங்கள் வாங்கிச் சமைத்து, தன் பசியைத் தணிக்கலாமென்று முயல்பவன் மூடனாவான்.

அதுபோல, சிலர் ஆபத்தான தறுவாயில் தாம் முந்திச்செய்யவேண்டியவற்றைச் செய்யாமல் அனாவசியகமானவைகளையே செய்து அழிவுறுவர்.

திருஷ்டாந்தமாக: சிலர் தமது தேசத்தை உத்தாரணஞ் செய்ய விரும்பியவிடத்து அதற்கு அவசியம் வேண்டற்பாலனவாகிய செயல்களைச் செய்யாமல் தமது முன்னோரது பெருமைகளையே மீட்டும் மீட்டும் வர்ணித்துக் கூறி வீண் பெருமை பாராட்டுகின்றனர். இன்னோரன்னர் இப்பழமொழிக் கிலக்கியமாவர்.

## 125. படைகேட்டு ஓடும்போதுநரைமயிர்பிடுங்குவதுபோல.

யுத்தம்புரிகின்ற சேனாவீரர் தம்மெதிரிகளின் வலிமைக்கு எதிர்நிற்க ஆற்றலில்லாதவர்களாகி, தம்மை வீணில் அழிவுக்குளாக்காவண்ணம் பின்வாங்கியோடும்போது, தமது நரைமயிர்களைப் பிடுங்குதற்கு அத்தருணமே முயல்வாராயின், அவர்கள் பரிகாசத்திற் கிலக்கான மூடராவர்.

அதுபோல, சிலர் ஆபத்தான தறுவாயில், தம்மைக்காப்பாற்றவேண்டியஎத்தனங்களைச் செய்யாமல், சாவகாசத்தில் செய்யத்தக்க அனாவசியகமான செயல்களையே முந்திச் செய்கின்றார்கள்.

## 126. பணக்காரன்பின்னும்பத்துப்பேர்
## பைத்தியகாரன்பின்னும்பத்துப்பேர்.

பணக்காரனுக்குப்பின் பரிசனங்களாகவும் அவனது தயவைப் பெறுதற்காகவும், பலர் பின்தொடர்ந்துசெல்லல்சகசம். பைத்தியகாரனுக்குப் பின்னும் வேடிக்கை நிமித்தமாகப் பலர் பின்தொடர்ந்து செல்லல் சகசம். இக்காரணம்பற்றி, பணக்காரனும் பைத்தியகாரனும் ஓரே தன்மையுடையோராகார்.



அதுபோல, சிலசம்பவங்கள் ஸ்தூலநோக்கில் ஓரேமாதிரியாகத் தோன்றினும், சூக்கும ஆராய்ச்சியில் வேறுவேறியல்புடையனவாயிருக்கும். ஓரே சம்பவம் ஓரிடத்து இகழ்ச்சிக்கும் மற்றோரிடத்துப் புகழ்ச்சிக்கும் உரியதாகும்.

## 127. பாத்திரம்அறிந்துபிச்சைபோடு.

யாவருக்கேனும் பொருள்களைத் தருமமாய் ஈயும்போது, அத்தானத்தை ஏற்பவர் சற்பாத்திரராவென்று ஆராய்ந்தறிந்த பின்னரே, கொடுத்தல்வேண்டும். அபாத்திரர்க்குஈதலால்,ஈவோனது பொருளுக்கு நட்டமும் உலகத்திற்குக் கேடும் உண்டாகும்.

உண்மையான துறவிகள், ஞானிகள், சற்பிராமணர், குருடர், அங்கவீனர், கிழவர், நோயாளர் அநாதர்கள் முதலியோரே தானம் வாங்குதற்கு அருகராவர்.

வேஷதாரிகளுக்கும், வேலைசெய்து பிழைக்கக்கூடியவர்களுக்கும் பொருளீதலால் அவர்கள் சோம்பலாண்டிகளாகிப் பூமிக்குப் பாரமும் சோற்றுக்குக் கேடுமாகிவிடுகின்றார்கள். தங்களால் உலகத்திற்கு விளைவிக்கக்கூடிய தானியப்பொருள்களை விளைவியாமலிருத்தலுடனமையாது, பிறரால் விளைவிக்கப்படுந் தானியங்களையுந் தங்கள் வயிற்றிலிடுவதால், அவைகளைமற்றையோர்க்கில்லாதபடி குறைத்தும் விடுகின்றார்கள். இவர்களைப் பார்த்து ஏனைய தடியர்களும் சோம்பலாண்டிகளும் இதுவே நல்லபிழைப்பு என்று பற்பல கபடவேடங்கள் பூண்டுகொண்டு உலகத்தைக் கெடுக்கப் புறப்பட்டுவிடுகின்றார்கள். இத்தீமைகளெல்லாவற்றிற்குங் காரணர் இன்னோரை ஆதரித்து ஈவோரேயாதலால், அபாத்திரர்க்குக் கொடுப்போருஞ் சிறிதுபாவசம்பந்தமுறுவர். இக்கருத்துப்பற்றியே ஆன்றோரொருவர்,

தக்கார்க்கேயீவர்தகார்க்களிப்பாரில்லென்று
மிக்சார்க்குதவார்விழுமியோர்—எக்காலும்
நெல்லுக்கிறைப்பதேநீரன்றிக்காட்டுமுளி
புல்லுக்கிறைப்பரோபோய். என்று கூறினர்.

### 128. பாம்புக்குத்தலையைக்காட்டிமீனுக்குவாலைக்காட்டுகிறது.

விலாங்கு பாம்புக்கு நான் உனது இனத்தவன் என்று தலையையும், மீனுக்கு நான் உனது இனத்தவன் என்றுவாலையுங் காட்டுமென்று ஓர் கற்பனைக் கொள்கையுண்டு.

அதுபோல, சிலர் பலரிடமுஞ்சென்று அவரவர்க்குப் பிரியமான விதங்களில் நடித்து, அடிக்கடி ஒவ்வொரு வேஷங்கொள்வர்.

### 129. பாலுக்குச்சீனியில்லையென்போர்க்கும் கூழுக்குஉப்பில்லையென்போர்க்கும்விசாரம்ஒன்றே.

பாலுக்குச் சீனியில்லையென்று விசாரப்படுபவனும், கூழுக்கு உப்பில்லையென்று விசாரப்படுபவனும் ஒரேவித விசாரத்தையே அடைகின்றார்கள்.

இவ்விதமே உலகத்தில் ஒவ்வொருவரும் தாம் தற்காலமுற்றிருக்கும் நிலைமையில் ஏதும் குறைவிருப்பதாய் வருந்தி விசாரமுறும்போது ஒரேவித விசாரமே யாவர்க்குமுண்டாகின்றது.

உதாரணமாக: கால்நடையாகச் செல்லும்போது செருப்பில்லையேயென்று விசனமுறுவோனும், பல்லக்கின்மீதிருந்துசெல்லும்போது பஞ்சணையில்லையேயென்று விசனமுறுவோனும் ஒரேவித விசாரத்தையே அடைகின்றனர்.

ஏழைக் குடும்பஸ்தனுக்குச் சீர்சிறப்பான நகை யுடை வீடு காணிகளில்லையேயென்றுண்டாகும்விசனமும், சாதாரண சீர்சிறப்புக்களுடையோனுக்கு மிகு செல்வம் கல்வி கீர்த்தி மாடமாளிகை வீடாதியன இல்லையேயென்றுண்டாகும் விசனமும், தேசமாளுகின்ற அரசனுக்கு உலகம் முழுவதுந் தன்னாளுகை



க்குள்ளாகவில்லையே யென்றுண்டாகும் விசனமும் ஒரேவித விசாரங்களேயாம். இவைகளெல்லாம் ஒன்றைவிட்டொன்றுபற்றி யுழலும் மனக்குரங்கின் அறியாமையாலேயேயுண்டாகின்றன. ஆதலால், கிடைத்ததைக்கொண்டு திருப்தியுற்றுவாழ்தலே அறிவான செயலாகும். இவ்வாறு கூறினமையால், எல்லாரும் ஊக்கமும் முயற்சியுமின்றித் தாமதகுணம் மேலிடவிருக்கவேண்டுமென்பதன்று. பற்றற்ற நிலையிலிருந்து கடமைகளைச்செய்து திருப்தியுற்றிருத்தல் வேண்டுமென்பதேயாம்.

### 130. பாழூருக்குநரிராசா.

நரி ஒரு அற்பமிருகம். தன்னிலும் வலிமைமிக்க மிருகங்களில்லாமலும், மனிதசஞ்சாரமின்றிப் பாழடைந்துமிருக்கின்ற ஊரிலே நரி இராசசுதந்தரத்துடன் சிறிய மிருகங்களைப் பட்சித்துக் களித்துத் திரியும்.

அதுபோல, யோக்கியரான பெரியோர் அரிதாயுள்ள ஊரில் துஷ்டர் அயோக்கியர் முதலியோரின் ஆதிக்கமே மேலிட்டிருக்கும்.

### 131. பானையிலிருந்தாலல்லவா அகப்பையில்வரும்.

பானையில் சோறு இருந்தால்தான், அள்ளும்போது அகப்பைக்குள்ளும் வரும்.

அதுபோல ஒருவனிடத்துக் கல்வியறிவாகிய செல்வம் இருந்தால்தான் அவன் அறிஞர் வியக்கக்கூடிய விஷயங்களை வெளியிட்டுப் பேசவும் எழுதவும் இயன்றவனாவான்.

### 132. பிச்சைவேண்டாம் நாயைப்பிடி.

ஒருவனைத் தருமவானென்று மதித்துப் பிச்சைக்குப்போனவிடத்தில், அவன்வாயினால் "இல்லை" என்றுகூறாமல் குறிப்பினால் இல்லையென்று துரத்தக்கருதி, நாயைச் சாடையாய் ஏவிவிடுவானாயின், "பிச்சைக்குப்போனவன் பிச்சைதரவேண்டாம், ஐயாவே நாயைப் பிடியும்" என்றே வேண்டுதல் செய்வான்.

இவ்வுலகில் இதுபோன்ற இழிசெயல்களைப் புரியும் இழிகுணத்தினருஞ் சிலருளர்.

### 133. பிடிவாதம் குடிநாசம்.

ஒருவனது கொள்கைகள் தவறுடைத்தென்று பிறர் எடுத்துக் காட்டும்போது, அத்தவறான கொள்கையையுடையோன் "இவர்களா எனக்குப் புத்திசொல்கிறவர்கள்" என்றுவீம்புகொண்டு பிடிவாதஞ்செய்தல் தனக்கேநாசகாரணமாகும். அதிலும் ஒரு குடும்பத்திலுள்ளவர்கள் பிடிவாத குணமுடையோராயிருப்பின், அக்குடிமுழுவதுமே கேடுறும். ஏனெனில், ஒரே குடும்பத்திலுள்ளவர்கள் அக்குடும்பத்திற்குரிய பொதுவான நயநட்டங்களைப்பற்றிப் பேசித்தெளிந்து நல்வழிப்படி நடக்கவேண்டிய சந்தர்ப்பங்களுமுண்டாகும். அத்தருணங்களில் சரியான நல்வழிகளைவிட்டு, பிடிவாதகுணத்தினால் தவறான வழிகளில் பிரவிர்த்திப்பாராயின் அக்குடும்பத்திற்குக் கேடுகள் விளைதல் திண்ணம். ஆதலால், பிடிவாதகுணம் ஒருவருக்கும் ஆகாது.

புத்தி கூறுவோன் வயதில் இளைஞனாயிருப்பினும் அவன் கூறியபுத்தி சரியானதென்று தோன்றினால், அதை அங்கீகரித்தலே பெரியோர்க்கு அறிவான செய்கையாகும்.

### 134. பித்தனுக்குத்தன்குணம் நூலினுஞ்செவ்வை.

பைத்தியகாரன் தனது குணத்தை, சாஸ்திரங்களில் விதித்த சற்குணங்களினும் நல்லதென்றே கருதுவான்.

அதுபோல, துர்க்குணரும் அறிவீனரும், தமது குணங்களைக் கெட்டனவென்று ஒப்புக்கொள்ளாமல் மற்றையோரது குணங்களினுஞ் சிறந்தனவென்றே மதிப்பர்.

### 135. பிள்ளைக்குவிளையாட்டுச் சுண்டெலிக்குப்பிராணசங்கடம்.

சிறுவர்கள் சுண்டெலியைப் பிடித்துத் தாம் களிப்புறுமாறு விளையாடினால், அது சுண்டெலிக்குப் பிராணசங்கடமாய் விடும்.



அதுபோல, வேடிக்கைநிமித்தமாய் வேட்டையாடிச் சாதுமிருகங்கள் பட்சிகளாதியவற்றை வதைப்போரும், பேரவா அல்லது குரோதங்காரணமாய் ஒருதேசத்தினருடன் அதர்மயுத்தந்தொடுக்கின்ற அரசர் அதிகாரபிரமுகர்கள் முதலியோரும், இப்பழமொழிக்கிலக்கியமாவர்.

### 136. பிள்ளையார்கோவிலில் கள்ளனிருக்கிறான் அதைச்சொன்னாலுங்கோள்போலிருக்கும்.

கோயிற்பொருள்களைத் திருடவென்று கரந்திருப்பவனைக் கண்டவன், உடனே கோயிலதிகாரிகளிடம் அச்சங்கதியைத் தெரிவித்தல் அவன்பாற் கடமையாகும். அவ்வாறின்றி, அதைப் பிறர்க்குத் தெரிவித்தால், கள்ளனைக் கோள்கூறினதுபோலாகுமென்று ஒருவன் மௌனமாயிருப்பானாயின், அவனும் கள்ளனேயாவன்.

அதுபோல, சிலர் நீதிஸ்தலங்களில் ஓர் உண்மையைக் கூறும்படி அழைக்கப்பட்டால், அவர்கள் உண்மையையே கூறல் வேண்டுமென்று கருதாமல், தமது சுற்றத்தவரென்றும் சிநேகரென்றும் அன்னோருக்குமாறாய் எப்படிச்சாட்சிசொல்லலாமென்றுங் கருதி உண்மைகளை மறைத்துக் கூறுவர். இன்னோரன்னர் இப்பழமொழிக்கிலக்கியமாவர்.

### 137. புத்திமான்பலவானாவான் புத்தியற்றான்பலனற்றான்.

புத்திசாதுரியமுடையவனே பலமுமுடையவனாவான். கேவலம் முரட்டுப்பலமுடையவன், புத்தியற்றவனாயிருப்பின், அவனது தேகபலத்தினால் அதிக பிரயோசனமுண்டாகாது.

புத்தியுள்ளவன் தேகபலமற்றவனாயிருப்பினும், அவன் தனது யுத்தி தந்தரங்களினால் இன்ன இன்ன காரியங்களை இன்ன இன்ன விதமாய்ச் செய்தால் அநுகூலமெய்தலாமென்று அறிந்து அற்றம்பார்த்துச் செய்வதனால் ஜெயம் அடைவான்.

இதற்கு இக்காலத்தில் நிகழும் ஐரோப்பிய யுத்தங்களை நிதர்சனமாயெடுக்கலாம். அவ்யுத்தங்களில், மனிதனின் சூக்கு

மபுத்தியினால் கண்டுகொள்ளப்பட்ட நூதனகருவிகளும் ஆயுதங்களுமே வெற்றியை அளிக்க, தோள்வலிமையும் சேனாபலமும் அதிக உபயோகமின்றிப் போய்விட்டன.

ஆதலால், புத்திமானே பலவானாவானென்பதற்குச் சந்தேகமில்லை.

## 138 புத்தியற்றவர்கள்பத்தியாய்ச்செய்வதும் விபரீதந்தான்.

தமது சூக்குமபுத்தியினால் ஞானத்தைத் தேடாதவர்கள், பத்தியாய் ஒன்றைச் செய்வதுதானும், விபரீதமாய் முடிதல்கூடும். ஞானமாகிய அறிவைத் தேடியவர்களே, விதிவிலக்குகளை உள்ளவாறு பகுத்துணர்ந்து ஒழுகவுந் தக்கவராவர்.

ஒருவன், சாஸ்திரங்களில் விதித்த கர்மாநுஷ்டான முதலியவைகளைச் செய்யும்போதும், சிறிது சிறிதாக ஞானத்தையும் அடையுமாறாக அறிவைத் தேட முயலாவிடின் அவனை ஆத்மார்த்த ஞானாபிவிருத்தியுடையோனென்று கொள்ள முடியாது.

"சுற்றியோடியும்வாசலாலே" என்றபடி, எவ்வித தவவிரதங்களைப் பத்தியுடன் அநுஷ்டித்தாலும், ஞானமாகிய கதவைத் திறந்தே யாவரும் முத்தியடைதல் வேண்டும். ஞானமிலதேல், முத்தியுமின்றாம்.

ஞானமெய்தற்குச் சாதனகரணங்கள், சிரவணமனனமாதியனவேயாதலால், ஆசாரியன் வாயிலாகவோ அல்லது நூல்கள் வாயிலாகவோ அறிவைத் தேடி, தேடியவைகளை ஏகாக்கிரசித்தத்தினால் சிந்தித்துத் தெளிந்து ஞானமெய்தல்வேண்டும். அவ்வாறெய்திய ஞானமும் தான் பரிபாகமெய்திய ஞான்றே பூரணபலனைத் தரும்.

நிலையற்றனவாகிய லௌகிகபோகங்களையுஞ் சுவர்க்காதியின்பங்களையும் அவாவிச் செய்யப்படுவனவாகிய கர்மானுஷ்டானங்களும், நிலையான முத்தியைத் தருவதாகிய ஞானமும் ஒன்றுக்கொன்று விருத்தமானவைகளே. ஞானந்தவிர, ஏனையனவெல்லாம் நேரே முத்தியைத் தரத்தக்கனவல்ல. இதனை,



பத்திநெறிநிலைநின்றுநவகண்டபூமிப்
　　பரப்பைவலமாகவந்தும்
பரவையிடைமூழ்கியுநதிகளிடைமூழ்கியும்
　　பசிதாகமின்றியெழுநா
மத்தியிடைநின்றுமுதிர்சருகுபுனல்வாயுவினை
　　வன்பசிதனக்கடைத்து
மௌனத்திருந்துமுயர்மலைநுழைதனிற்புக்கு
　　மன்னுதசநாடிமுற்றுஞ்
சுத்திசெய்தும்மூலப்ராணனோடங்கியைச்
　　சோமவட்டத்தடைத்துஞ்
சொல்லரியவமுதுண்டுமற்பவுடல்கற்பங்க
　　டோறுநிலைநிற்கவீறு
சித்திசெய்துஞ்ஞானமலதுகதிகூடுமோ
　　சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவருதக்ஷிணாமூர்த்தியே
　　சின்மயானந்தகுருவே.

என்னும் ஸ்ரீ தாயுமானசுவாமிகளின் திருப்பாடலானு மறிக. இன்னும், "பன்னும்பனுவற்பயன்றேரறிவிலார், மன்னுமறங்கள்வலியிலவே—நன்னுதால், காமொன்றுயர்திண்கதவுவலியுடைத்தோ, தாமொன்றிலதாயிற்றான்" என்ற வெண்பாவும் இப்பழமொழியை வலியுறுத்துகின்றது.

## 139. பொய்யுடையோருவன்சோல்வன்மையினால் மெய்போலும்மேமெய்போலும்மே.

பொய்கூறுவோர் சிலர், தாம் கூறுபவைகளைப் பிறர் சுத்தமான மெய்யென்று நம்பும்படி வாக்குவல்லபமாய்க் கூறுவார்கள்; தாம் கூறுபவைகளை நிரூபிக்குமாறு, "காகமிருக்கப் பனங்காய் விழுந்த நியாயம்" போன்று அகஸ்மாத்தாய் நிகழுஞ் சம்பவங்களைத் திருஷ்டாந்தமாயுங் காட்டி வஞ்சிப்பார்கள். அவ்விததருணங்களில், மெய்யுடையவன் பொய்யுடையவன்போல விழிக்க நேரிடும்.

## 140. போக்கணங்கெட்டவன் ராசாவிலும்பெரியவன்.

மானம் மரியாதை யோக்கியம் முதலியனவில்லாதகசடன் தான்தானே ராசாவினும் பெரியவன்போலிருப்பான் என்பது இதன் தாற்பரியம். அவன், பிறர் தன்னைப்பற்றி எவ்விதம் மதிப்பாரென்ற சிந்தனை சிறிதுமின்றி, தன்னிஷ்டப்பிரகாரம் அயோக்கியமும் அநியாயமுமான செயல்களைப் புரிவான். ஒருவேளை, அவ்வித செயல்கள் காரணமாய்த் தண்டனையும் அவமானமும் அடைந்தாலும், தான் அபசெயமுறாதவன்போல "விழுந்தவன் மீசையில் மண் படவில்லை" என்றவிதமாய், பின்னரும் வீரம்பேசி நிற்பன்.

இப்படிப்பட்ட கசட்டுலுத்தன் தனது வீம்புக்குணம் அடங்கித் தோல்வியை ஒப்புக்கொள்ளானாதலால், அவன் தன்னளவில் "ராசாவினும் பெரியவன்" என்று, புகழ்ச்சியாற் பழிப்புத்தோன்றப்பண்ணும் வஞ்சப் புகழ்ச்சியணிக்கு இலக்கியமாக இழித்துக் கூறப்பட்டான்.

## 141. மகன்சேத்தாலுஞ்சாகட்டும் மருமகள்கர்வம் அடங்கினாற்போதும்.

ஒருத்தி தனது மருமகளில் கொண்ட குரோதங் காரணமாய், அவளை அமங்கலியாகக் காணக்கருதி, தன்மகனிறந்தாலும் நன்றேயென்று விரும்புவாளாயின், அக்கொடியவளது குணத்தை எவ்வாறு விளக்கலாம்? அவள் கொடிய நீசக்குணமுடைய பாபியாவாள்.

அதுபோல, சிலர், தம்மெதிரிக்குக் கேடு விளைவதாயின், தாம் எவ்வித நட்டமுமுறுதற்கு மனமிசையக்கூடிய வீம்பர்களாயிருக்கின்றனர்.

உதாரணமாக: தமது சுற்றத்தவர்மீதுகொண்ட குரோதங்காரணமாய், அயலாரிடத்தில் சென்று, கோள், குடும்பரகசியங்கள் முதலியன கூறுவோரும், தமது தேசத்தினரிடத்தில் கொண்ட துவேஷங் காரணமாய் அன்னியரிடத்தில் சென்று



கோள், உளவு முதலியன கூறுகின்ற தேசத்துரோகிகளும், இப்பழமொழிக்கிலக்கியமாவர்.

## 142. மண்குதிரையைநம்பிஆற்றிலிறங்கலாமா.

மண்ணினால் செய்யப்பட்ட குதிரையை நம்பி, ஆற்றைக் கடக்கத் துணிதல் ஆபத்துக்கிடமாகும்.

அதுபோல, தகைமையற்றோரைத் தக்காரெனநம்பி எவ்விதமுயற்சிகளிலுந் தலையிடலாகாது.

## 143. மனத்திலேபகையும் உதட்டிலேஉறவும்

சிலர் மனத்திலே மூண்டெரிகின்ற குரோதமுடையராயும் பகிரங்கநடைகளில் நல்ல உறவுடையார்போலவுமிருப்பார்கள். அன்னோர் மனத்திலொன்று வைத்து வெளியிலொன்று பேசுகின்ற இழிந்த குணம், அவதந்தரம் பொறாமை கபடம் முதலிய துர்க்குணங்களைத் தம் நெஞ்சகத்தே பொதிந்துவைத்திருப்பர். அப்படிப்பட்டவர்களுடன் சகவாசசம்பந்தமுற்றிருப்போர் மிக எச்சரிக்கையாயிருத்தல்வேண்டும். இதுபற்றியே திருவள்ளுவநாயனாரும் "உட்பகையஞ்சித் தற்காக்க உலைவிடத்து, மட்பகையின் மாணத்தெறும்" என்று கூறினார்.

## 144. மனம்போலவாழ்வு.

மனிதன் தான் நினைத்தபடியே ஆகின்றான். அவன் தான் தற்காலமுற்றிருக்கும் நிலைமையும் ஒழுக்கங்களும் தற்செயலாய்நேர்ந்துள்ளனவல்ல. அவை, அவன் தன் மனத்தில் வளர்த்த மனோசங்கற்பங்களின் காரியமுந் தொகுதியுமாய் நேர்ந்திருக்கின்றன. அவன் எதிர்காலத்தில் அடையப்போகும் நிலைமைகளும், நிகழ்காலத்தில் தான் இலக்ஷியத்தில் குறித்திருக்கும் மனோபாவத்திற்கும் ஏற்றனவாகவேயிருக்கும்.

மனிதனது அசுத்தமான எண்ணங்கள் துன்பத்தையும், பரிசுத்தமான எண்ணங்கள் இன்பத்தையும் விளைக்கின்றன. மரத்தின் வித்துக்கள் தமக்குரிய கால எல்லையிலேயே முளைத்து

ப்பருத்துப் பலனையீதல்போன்று, மனோசங்கற்பங்களும் தத்த மக்குரிய காலங்களிலேயே பரிபாகமெய்துகின்றன. அஃதாவது, அவைகள் செயல்களாகப் பரிணமித்துத் தமக்குரிய இன்பப்பலனையோ துன்பப்பலனையோ தருகின்றன.

மனோசங்கற்பம் வித்துப்போலவும், செயல் மலர்போலவும் இன்பதுன்பங்கள் கனிகள்போலவும் உள்ளன. பிரத்தியக்ஷமான ஸ்தூலப்பிரபஞ்சத்தில் எவ்விதங் காரணகாரியங்கள் தவறாதநியதிக்கிரமமாய் நிகழ்கின்றனவோ, அவ்விதமே அவ்வியக்தமான மனோமண்டலத்திலும் காரணகாரியங்கள் நிச்சயமாகவுங் கிரமமாகவும் நிகழ்கின்றன.

எனவே, மனிதன்தான் எவ்விதமாகவேண்டுமென்று மனோசங்கற்பஞ் செய்துகொள்ளுகின்றானோ, எவ்வித மனோபாவங்களை வளர்க்கின்றானோ, அவ்விதமே காலாந்தரத்தில் ஆகுவான். மனிதன் அகத்திலே வளர்ந்துகொண்டு புறத்திலே நின்ற நிலையில் நிற்க முடியாது. அவன் அகத்தில் வளர்வதற்குத் தக்கபடியே, புறமும் விரிந்து கொடுக்கும்.

ஒருவன் தன்மனத்தில் அசத்தியம் பொறாமை கபடம் அவதந்தரம் முதலிய தீக்குணங்களாகிய பூண்டுகளைக் களைந்து, அங்ஙன் சீவகாருண்ணியம் சத்தியமாகிய விதைகளை விதைக்கட்டும்; அவன் சிறிதுகாலஞ் சென்றபின்னர் தன்னொழுக்கத்திலும் வாழ்க்கையிலும் ஆச்சரியப்படத்தக்கவிதமாய் மாறுதல் அடைவான். பின்னர் அதன் பயனாய் இன்பமும் சாந்தியும் அடைவான்.

ஒருவன், எத்துணைச் சிறந்த ஒழுக்கமுடையனேயாயினும் தன்மனத்தில் அசத்தியம் பொறாமை கபடமாகியவற்றிற்குச் சிறிது இடங்கொடுக்கட்டும்; அவன் சிறிதுகாலஞ் சென்றபின்னர் தானே கீழ்நிலைக்குத் தாழ்வுறுவன்.

சிலகாலங்களில் நல்லோர் துன்புறுதலையுந் தீயோர் இன்புறுதலையுங் கண்டு, சிலர் இவ்வித கர்மத்தின் காரண காரியங்களில் விசுவாசங்கொள்கின்றிலர். அவர்கள் விஷயங்களை ஆழ்ந்து ஆராய முயலாத அறிவிலிகளாயும், உடனுக்குடனே பலன்களை விரும்பும் பொறுமையிலிகளாயுமே யிருப்பர். நல்லோரநுபவிக்குந் துன்பங்கள் அவர்கள் தாம் முன்னர் வளர்த்த சில தீய எண்ணங்களின் விளைவுகளெனவும், தீயோரநுபவிக்கும் இன்பங்கள் அவர்கள் தாம் முன்னர் வளர்த்த சில நல்லெண்ணங்களின் விளைவுகளெனவும், அன்னோர் அறிகின்றிலர்.



மேலே விளக்கிக் காட்டப்பட்டவற்றால், மனிதன் தன்மனம்போலவே வாழ்வான் என்பது பெறப்பட்டது. ஸ்ரீ தாயுமான சுவாமிகள் "யாதொன்று பாவிக்க நானதுவாதலால்" என்றும், திருவள்ளுவநாயனார், "எண்ணியவெண்ணியாங்கெய்துப எண்ணியோர், திண்ணியராகப்பெறின்" என்றுங் கூறியவைகள் இப்பழமொழியை வலியுறுத்துகின்றன.

## 145. மாமியாருடைத்தால்மட்கலம் மருமகளுடைத்தாற்பொற்கலம்.

அதிக குற்றமான செயலேயாயினுந் தாம் செய்ததாயின் அற்பகுற்றமாயும், அற்ப குற்றமேயாயினும் தம் மனத்திற்கு வெறுப்பானவர்கள் செய்ததாயின் அதிக குற்றமாயும் கருதுவோர் இப்பழமொழிக்கிலக்கியமாவர்.

## 146. முற்றநனைந்தவருக்குக்குளிரில்லை முழுதுங்கெட்டவருக்குத்துக்கமில்லை.

ஒருவனது தேகத்தின் சொற்பப்பகுதியில் தண்ணீர்படின் குளிருண்டாகின்றது. ஆனால், உடம்பை முற்றாய்த் தண்ணீரில் ஆழ்த்தினால் அவ்விதக்குளிருண்டாதலில்லை.

அதுபோல, மனிதர் சொற்ப துன்பத்திற்கும் சொற்ப இகழ்ச்சிக்கும், ஆரம்பத்தில் அஞ்சி வருந்துவார்கள். முற்றான துன்பம் அல்லது இகழ்ச்சியையடைந்துவிடினோ, முன்கொண்ட அச்சமும் வியாகுலமும் நீங்கி, அவைகளைச் சர்வசாதாரணமாய்க் கருதுவார்கள்.

## 147. முளையில்கிள்ளாததுமுற்றினால் கோடாலிகொண்டுவெட்டவேண்டும்.

ஓர் மரத்தை முளையிலேயே கிள்ளுவதாயின், மிக இலகுவாய்க் கிள்ளலாம். வளர்ந்து முற்றியபின்னெனில், கோடாலிகொண்டே வெட்டவேண்டி நேரிடும்.

அதுபோல, தொடக்கத்தில் அதிக தீமையின்றி உடன் வளர்ந்து, காலாந்தரத்தில் அதிக வலிமையும் உறுதியும் பெற்று அதிக தீமை விளைக்கும் விஷயங்களை, ஆரம்பத்திலே நிவிர்த்தித்துக்கொள்ளல்வேண்டும்.

"இது என்ன அற்பகாரியந்தானே, மிஞ்சினால் பின்னர்ப் பார்த்துக்கொள்வோம்" என்று உதாசினமாயிருப்போர், ஈற்றில் அத்தீமைகளை நீக்க இயலாதவர்களாய் அலமர நேரிடும்.

## 148. முள்ளுமேல்சீலைபோட்டால் மெல்லமெல்லவாங்கவேண்டும்.

ஒருவன் தனது சீலையை முள்ளின்மேல் போட்டுவிட்டு, மனம்பதறி இழுத்தெடுப்பானாயின் சீலைக்கேபங்கமுண்டாகும். தான்போட்ட சீலையை மெல்லமெல்லவே எடுக்கவேண்டும்.

அதுபோல, பிறரிடத்தில் தமது பொருள் அல்லது சுதந்தரத்தைக் கொடுத்திருப்போர், மனம்பதறிப் புத்தியீனமான வழிகளிற் பிரவேசித்துக் காரியக்கெடுதி விளைக்காமல், ஆறித் தேறி ஆராய்ந்து யுத்தியான வழிகளை அநுசரித்தே காரியசித்தி பெறல்வேண்டும்.

## 149. மூக்கறுந்தமூளிகாதறுந்தமூளியைப்பழித்தாளாம்.

மூக்கில்லாதவள் தனது குறையையுணராமல், காதில்லாதவளைப் பழிப்பாளாயின், தன்னையே பழித்தல்போலாகும்.

அதுபோல, சிலர் தாம் ஒருவித குற்றமுடையராயிருந்துகொண்டு, பிறரைவேறொருவித குற்றத்திற்காகப்பழிப்பார்கள்.



## 150. மூக்குக்குமேல்போனவெள்ளம் மூவாளென்னநாலாளென்ன.

வெள்ளம் ஒருவனது மூச்சையடைக்கத்தக்கதாய் மூக்குக்கு மேலாக ஓடத்தொடங்கிவிடின், மூன்றாளுயரமோடினுஞ் சரிதான் நான்காளுயரமோடினுஞ்சரிதான். எவ்வாறோடினும், ஒரேபலன்தான் விளையும். அஃதாவது, மூச்சடைபட்டு இறத்தல்தான் நிச்சயம்.

அதுபோல, யாதொருவிஷயம் ஓர்வரம்பு கடந்துவிடின் தன் பலனளிப்பதில் ஒரேவிதஸ்வபாவமுடைத்தாயிருக்குமோ, அவ்விதவிஷயங்கள் இப்பழமொழிக் கிலக்கியமாகும்.

## 151. மேழிச்செல்வங்கோழைபடாது

உழுது பயிர்செய்து பெற்ற தாவரப்பொருட்செல்வம் ஓர் காலத்தும் தனக்குரிய மதிப்பில் குறைவு அடையாது. எனவே மற்றைய செல்வங்கள் ஓரோர்காலத்தில் மதிப்புக் குறைவுடையனவாகவுங்கூடுமென்பது அருத்தாபத்தியாற் பெறப்படுகின்றது.

செல்வங்களில் அதிக விலையேறப்பெற்றனவாய் மதிக்கப்படும் நவரத்தினங்களும், உற்றுநோக்குமிடத்துத் தாவரப்பொருள்களாகிய உணவுவகைகளினுந் தாழ்ந்தனவேயாம். உணவுகள் கிடையாத ஓர் அந்தரமான இடத்தில், ஒரு பொதி நவரத்தினங்களினும் ஓர்பிடி அன்னமே விலையேறப்பெற்றதாகும்.

நவரத்தினம்முதலிய பொருள்களில் மதிப்புவைத்தல் மனப்பிராந்தியே தவிர வேறன்று. அவைகளைச் சாதாரணகற்களில் ஓரினமென்று மதிக்கும் ஞானிக்கு, அந்நவரத்தினங்கள் மதிப்புள்ள பொருள்களாகா.

ஒருவன் எவ்வளவு தங்கம் வெள்ளி "கரன்சிநோட்டு" க்களாலாகிய செல்வத்தை வைத்திருப்பினும், ஈற்றில் அவனுக்குத் தேவையாவது ஒருபிடி அன்னமேயாம். அவன் நாணகரூபமா

கத் தனது செல்வங்களை மாற்றி வைத்திருப்பதின் நோக்கம், வயிற்றுக்கு உணவுவஸ்துக்களை வாங்குவதற்குப் பதிற்பொருளாகக் கொடுக்கவேண்டுமென்றேயாம். யாதேனுமோர் காரணம்பற்றி, அந்நாணகங்கள் தமக்குரிய மதிப்பில் குறைந்துபோமாயின், அவைகள் சரியான செல்வங்களாகமாட்டா. ஒருபோது, அந்நாணகங்களைக் கொடுத்து உணவுவஸ்துக்களை வாங்க முடியாத விதமாய் அந்நாணகங்கள் தம்மதிப்பிற் குறைவுபடுதலுங்கூடும்.

உதாரணமாக: பகை பஞ்சகாலங்களில் உணவு வஸ்துக்களுக்குத் தட்டுப்பாடுண்டாகுமாயின், நாணகங்களின் மதிப்புக் குறைந்துவிடும். யுத்தகாலங்களில், உணவுவஸ்துக்களுக்காகத் தம்மெதிரிகளின் தேசத்தையே நம்பியிருப்போர், மற்றெவ்வகைச் செல்வமுற்றவராயிருப்பினும், அவர்கள் உணவு வஸ்துக்களின்மையால் பஞ்சமுற்று அழியவே நேரிடும். ஆதலால், யுத்தம் தாவரப்பொருட்பஞ்சம் முதலியன தற்செயலாய்ச் சம்பவிக்குங் காலங்களில்தான், மேழிச்செல்வமே உண்மையானசெல்வமென்று யாவரும் உணரச் சந்தர்ப்பம் நேரிடும்.

உழுதுண்டு வாழுந் தொழிலுக்கும், அதனாலெய்துஞ் செல்வத்திற்கும், ஒருகாலமும் பழுதுண்டாகாது. மற்றைத்தொழில்களுக்குஞ் செல்வங்களுக்கும் ஒவ்வோர் பழுதுமுண்டாதல்கூடும்.

இதன் மகிமையை விளக்கும் ஓர் சரித்திரமும் உண்டு. அதன் சாராம்சம் வருமாறு:—

பலதொழிலாளரும் வித்துவான்களும் நிறைந்துள்ள ஓர் சபையில், "எத்தொழிலாளர் உலகினர்க்கு இன்றியமையாதவர்கள்" என்று ஒரு பிரசினம் உண்டாயிற்று.

அப்போது ஒரு பிராமணனெழுந்து "நானேயாவருக்குங் கல்வியறிவு கொடுக்கின்றேன்; யாகம் பூசையாதிய தேவகாரியங்கள் நடத்துகின்றேன்; என்னாலேயே, எண்ணும் எழுத்தும் உலகத்தில் வழங்கிச் சகல காரியங்களும் குழப்பமின்றி ஒழுங்காய் நடைபெறுகின்றன; என்னாலேயே உலகத்தில் சகலவித்தைகளும் அழிந்தொழியாதிருக்கின்றன; இவ்வாறான காரணங்களால் நானே முக்கியமானவன்" என்று கூறினான்.



பின்பு ஓர் க்ஷத்திரியனெழுந்து "பிராமணன் எவ்விதம் முக்கியமாகக்கூடும்; நானே உலகத்தில் தருமங்களுக்கெல்லாம் பாதுகாவலனாயிருக்கின்றேன்; நானில்லாவிடில் சனாதன தருமங்களெல்லாஞ் சீர்குலைந்துவிடும்; நல்லோருக்குத் தீயோர் இடுக்கண் விளைக்கவும், மெலியோரது சொத்துக்களை வலியோர் அபகரிக்கவுந் தொடங்கிவிடுவார்கள். இவ்வாறான துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்வதால் நானே முக்கியமானவன்" என்று கூறினான்.

பின்னர், ஓர் வைசியனெழுந்து "பிராமணனுஞ் க்ஷத்திரியனும் எவ்விதம் முக்கியமாதல்கூடும்; நானே ஒவ்வொருவரது வாழ்க்கைக்கும் இன்றியமையாதனவாய் உணவுப்பொருட்கள் முதலியவற்றை ஆங்காங்கு அவரவர் அடையுமாறு செய்கின்றேன். பசுவர்க்கங்களை விருத்திசெய்விக்கின்றேன்; தானதருமஞ்செய்கின்றேன். தேசத்திற் பொருள்கள் என்னாலேயே விருத்தியடைகின்றன. இவ்வாறான காரணங்களால் நானே முக்கியமானவன்" என்று கூறினான்.

ஈற்றில், இவைகளெல்லாவற்றையும் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்த ஒரு சூத்திரன் எழுந்து "இச்சபையின்முன் பேசியவர்களெல்லாம் தாந்தாமே பிரதானமுடையோரென்று வெகு வாக்குவல்லபத்துடன் பேசினார்கள். நானோ நாட்டுப்புறத்தவன். அவ்விதமான வாக்குவல்லபமும் நாகரிகமான பேச்சும் எனக்கு வரா. ஆனாலும், இச்சபையில் பேசியவர்களுக்கும் மற்றையோர் யாவர்க்கும் நானே உணவுப்பொருட்களை விளைவித்துக் கொடுக்கின்றேன். நானில்லாவிடில் உலகத்தில் ஒருவரும் சீவித்திருக்கமாட்டார்கள். இவ்வளவுதான் நான் சொல்லமுடியும்" என்று தாழ்மையுடன் கூறினான்.

அச்சபையிலிருந்தோர் யாவரும், சூத்திரன் கூறியதே உண்மையென்றுணர்ந்தனர். இதனாலும் மேழிச்செல்வமே முக்கியமானதென்பது விளங்குகின்றது.

## 152. மௌனம்கலகநாசம்

அறிவீனர் அயோக்கியர் துஷ்டர் முதலியோர் வாக்குவாதம் விளைக்கக்கூடிய அல்லது கோபமுண்டாக்கத்தக்க வார்த்தைகளை மொழிவாராயின், அவரது வார்த்தைகளுக்குச் செவிகொடாமலும் பொருட்படுத்தாமலும் மௌனமாயிருத்தல், கலகமுண்டாகாமற் செய்யும் வழியாம்; அதுவே அறிவாளிகளின் செயலுமாம்.

## 153. யதார்த்தவாதிவெகுசனவிரோதி.

தருமநெறியைக் கடைப்பிடித்து வாதித்து நிற்போன் பெரும்பாலரால் விரோதியென்றே கருதப்படுவான் என்பது இதன் தாற்பரியம்.

சிற்சில ஊர்களில் பாமரரும் அயோக்கியருமே பெரும்பாலராயிருப்பர். அவ்விதமானஊர்களில் யதார்த்தவாதிக்கும் நல்லவர்க்கும் அதிகாரமும் மதிப்பும் இரா. "மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்" என்றவாறு, அவர்கள் தம்மைப்போலொத்த மனப்பாங்கும் நடைகளுமுடையோரையே மேன்மையாக மதிப்பர்.

பாமரரின் மத்தியில் வசிக்கும் யதார்த்தவாதி, தான் பிறரிடத்தில் காணும் அநியாயச் செயல்களையுங் குற்றங்களையும், உற்றதருணங்களில் கண்டித்தொழுகுவான். அவன் தன் மனச்சாட்சிக்கு ஒவ்வாதவைகளைக் கண்டிக்கவே துணிவான். ஆகவே அயோக்கியருந் துட்டரும் அவனைத் தம் விரோதியாக மதிப்பார்கள். பாமரர் "இவன் யாவன் புதிதாயொன்று போதிக்க முற்படுகிறான்" என்று துவேஷங்கொள்வார்கள்.

இவ்வாறு, சில சந்தர்ப்பங்களில் யதார்த்தவாதி வெகுசனவிரோதியாய் முடியினும், உண்மையான அறிவாளிகளிடத்தில் எக்காலமும் மதிப்புப்பெறுதலுடன், பாரமார்த்திக க்ஷேமத்தையும் அடைதற்கு அருகனாவான்.

இவ்வுலகத்தில் அநேக அரிய உண்மைகளைக் கண்டு உலகினர்க்கு வெளியிட்ட மகான்களும் பெரியோரும், முற்காலங்களில் பாமரரால் இடுக்கணும் நிந்தையும் அடைந்தவரேயாம். அவர்கள் தம்மனக்காட்சியில் கண்ட உண்மைகள், மன்குலத்தார்க்குத் தற்காலத்தில் தேடற்கரிய தேட்டமாய் விளங்குகின்றன. ஆயினும், அக்காலத்தில் அவர்களுடையமகிமையையும் உண்மையையும் சனங்கள் சரியானபடி அறிந்திலர். மேற்சொல்லப்பட்ட தாற்பரியங்களை,

சத்தியமெக்காலுஞ்சனவிருத்தமாகுமே
எத்தியபொய்யார்க்குமிதமாகும்—நத்தியபால்
வீடுதொறுஞ்சென்றுவிலையாமதுவிருந்த
வீடுதனிலேவிலையாமே.

என்ற நீதிவெண்பாவும் வலியுறுத்துகின்றது.



## 154. யானைவிற்றால்யானைலாபம் பானைவிற்றால்பானைலாபம்.

ஒருவன் தன் வியாபாரத்தை எவ்வளவில் பெருக்கக்கொண்டு நடாத்துகின்றானோ, அவ்வளவுக்கு லாபமும் அதிகமாய் அடைவான்.

சொற்ப முதலுடன் அற்ப வியாபாரத்தை நடாத்துவோர்க்கு, அந்த முதலுக்குத்தக்க லாபமேயுண்டாகும். பெரும்முதல்விட்டுப் பாரித்த வியாபாரம் நடாத்துவோர்க்கு, அப்பெரும்முதலுக்குத் தக்கவாறே பெரும் லாபமும் உண்டாகும். "நூற்றுக்கு மிஞ்சினால் ஊற்று" என்ற பழமொழியும் இதற்குச் சார்பாகவேயெழுந்தது.

## 155. யானைகண்டகுருடர்போல.

இது ஓர் உபகதையைப்பற்றிய பழமொழி. அதன் சாராம்சம் வருமாறு:—

சில பிறவிக்குருடர், யானை எவ்விதமாயுள்ளதென்று அறியவிரும்பி, ஒரு யானைப்பாகனிடத்திற் சென்று, தமக்கு ஒரு யானையைக் காண்பிக்குமாறு வேண்டிநின்றார்கள். அப்பாகன்,

அவர்களது வேண்டுகோட்கிணங்கி, ஒரு யானையை அவர்கள் முன் கொணர்ந்து விடுத்தான். அப்போது, அக்குருடர், யானையின் ஒவ்வொரு அங்கத்தைத் தடவியறிந்து, அவ்வவ்வங்கமே யானையின் முழுருபமென்று கருதிக்கொண்டு, தம்மிடத்திற்குச்சென்றனர்.

பின்னர், "யானை எதனைப்போலுள்ளது" என்று அக்குருடருக்குள் ஒருவிவாதமுண்டாயிற்று. அப்போது யானையின் துதிக்கையைத் தடவியறிந்தவன் "யானை உலக்கைபோலுள்ளது" என்றான்; செவியைத் தடவியறிந்தவன் "யானை முறம்போலுள்ளது" என்றான்; கால்களைத் தடவியறிந்தவர்கள் "யானை உரல்போலுள்ளது" என்றார்கள்; வயிற்றைத் தடவியறிந்தவர்கள் "யானை சுவர்போலுள்ளது" என்றார்கள்; வாலைத்தடவியறிந்தவன் "யானை விளக்குமாறுபோலுள்ளது" என்றான்; இவ்வாறே, அப்பிறவிக்குருடர், தாந்தாம் அறிந்த அளவில் பலபடக் கூறி விவாதப்பட்டனர்.

அதுபோல, சிலர், ஒருவிஷயத்தைப்பற்றி விவாதம்புரியும்போது தாம்தாம் அறிந்த அளவாகக் கூறி, அதனையேஉண்மையென்று பிடிவாதஞ்செய்வர்.

இவ்வுலகத்தில் மதவிவாதம் புரிவோரில் பெரும்பாலார் இப்பழமொழிக்கே இலக்கியமாகின்றனர்.

## 156. வரம்புயரநீருயரும், நீருயரநெல்லுயரும் நெல்லுயரக்குடியுயரும் குடியுயரக்கோனுயரும்.

இது ஔவையாரின் சரித்திரத்தைப்பற்றி வழங்கும் பழமொழி. அதன் தாற்பரியம் வருமாறு:—

ஓர் இராசசபையில், மங்கலகாரியத்திற்காகச் சென்றுவீற்றிருந்த பெரியோர், இராசனுக்கு வாழ்த்துதல் கூறும்படிகேட்கப்பட்டார்கள். அப்போது, வித்துவான்களும் பெரியோரும் பலவித ஆசிமொழிகள்கூறி வாழ்த்தினார்கள் பின்னர், ஔவையார் "வரம்புயர" என்று கூறி, அரசனை வாழ்த்தினார். சபையோர் அவ்வார்த்தையை வாழ்த்துமொழியென்றுணராமல், அரசனை வாழ்த்தும்படி ஔவையாரைக் கேட்டனர். ஔவையார் மறுபடியும் "வரம்புயர" என்று கூறினர். அப்போது சபையோர் அதிசயமுற்று, அவ்வாழ்த்துமொழிக்கு அர்த்தமென்னவென்று வினவினர். ஔவையார் "மழை குறைவின்றிப் பெய்தால், குடிகள் வயல்களின்வரம்பை உயர்த்துவார்கள்; வரம்புயர வெள்ளமுயர்ந்து தானியவகைகளாதியன மிகுதியாய் விளையும்; அவை மிகுந்தால் பிரசைகள் க்ஷேமமாய் வாழ்வார்கள். பிரசைகள் க்ஷேமமுற்றால், அரசனுஞ் க்ஷேமமுறுவான்" என்ற தாற்பரியத்தைச் சபையோர்க்குக் கூறி விளக்கினார்.



## 157. வழியேபோய்வழியேவந்தால்அதிகாரி செங்கோலென்னசெய்யும்.

அரசனால் நிரூபித்து வெளியிடப்பட்ட, நியாயப் பிரமாணங்களுக்கு மாறின்றி, ஒருவன் ஒழுகுவானாயின், அவனை, அவ்வரசனது வேலைக்காரராகிய அதிகாரிகளின் அதிகாரம் யாதேனுஞ்செய்யவல்லதல்ல. நியாயத்துக்கு மாறின்றி ஒழுகுவோன் எவருக்கும் அஞ்சவேண்டியதில்லை என்பதை இப்பழமொழி உணர்த்துகின்றது.

## 158 வறியோர்க்கழகுவறுமையிற்செம்மை.

வறியவரானோர்க்குச் சிறப்புத்தருவது, வறுமையாயிருக்கும்போதும் செம்மையாயிருத்தலேயாம்.

தனவந்தர்கள், மாடமாளிகையாதி வீட்டினில் வசித்தும், அறுசுவையோடு வேண்டுவன புசித்தும், விரும்பியநகை உடைவிதம்விதம் தரித்தும், களிப்புறுவர். ஆனால், யோசிக்கும் வேளையில், பசிதீர உண்பதும் உடுப்பதுமே கைகண்ட பலனாகும்.

ஆதலால், மிதமிஞ்சிய உல்லாச போகங்களை இச்சித்தல் மனப்பிராந்தியேயென்று, வறியோருணர்ந்து மனமடங்கித் தமக்குற்றநிலையில் சீர்சிறப்பாயிருத்தலே, அறிவாகும்.

அஃதெவ்வாறெனில்: வறியோர், தமக்குடையது ஓர் சிறுக்குடிசையேயாயினும் அதனை அழகுறவுஞ் சுத்தமாயும் வைத்திருத்தலாலும், தாம் உடுப்பது பருத்திப்புடைவையேயாயினும் அதனைப் புனிதமாயும் நாகரிகமாயும் உடுத்தலாலும், தாம் அணிவது சொற்பவிலையுள்ள ஆபரணமேயாயினும், அதனை நாகரிகமாயும் அழகுறவும் அணிதலாலும் சீர்சிறப்பெய்தல்கூடும். இதுநிற்க,

ஒருவன் விலையேறிய பொருள்களையும் உல்லாசபோகங்களையும் நாடுதல், தன்மனத்தைத் திருப்திப்படுத்தற்கேயாம். அத்திருப்தியை "ஒன்றைவிட்டொன்றுபற்றி" யுழலும் மனமோ ஒருகாலத்தும் அடைவதில்லை. ஆகலின், ஒவ்வொருவரும் தாம் உற்ற நிலையில் திருப்தியுற்று வாழ்தலே அறிவாகும்.

இங்ஙனங் கூறின்மையால், யாவரும் தமது நிலைமையை உயர்த்த முயலாமல் தாமதகுணம் மேலிட்டவர்களாயிருத்தல் வேண்டுமென்பதன்று. ஒவ்வொருமனிதனும் தன்னாலியன்றவரையில் மனஊக்கமும் முயற்சியுமுடையனாய், தர்மமானநெறிபற்றிப் பொருள்தேடிப்போகங்களை அநுபவித்துத் தர்மங்களுக்கும் ஈதலே நன்றாகும். ஏனெனில் போகத்திற்கும் யோகத்திற்கும் ஞானத்திற்கும் காரணகாரிய சம்பந்தமிருக்கின்றது. போகங்களை அநுபவித்து மனந்தெவிட்டப்பெற்று உபசாந்தியை ஆவலுடன் ஆசிப்போர் இலகுவாய் யோக ஞானங்களையும் அடைவர். ஆதலால், ஒருவன், தருமநெறி வழுவாமல் மிதபோகங்களை அநுபவிக்க விரும்புதல் நன்றாம். இஃதிங்ஙனமிருக்க,

ஒருவன் மேன்மையடைவது கேவலம் வெளிவேஷத்தினாலன்று என்பதையும் யாவரும் உணர்தல் வேண்டும். உண்மையான மேன்மையாவது அறிஞரால் நல்லோனென மதிக்கப்படுதலையாதலால், வறியோர் தமது நற்குண நற்செயல்களினால் "நல்லவன்" என்று பேர் சம்பாதித்தலே மேன்மையாகும்.

பொய் கொலை களவு பொறாமை நம்பிக்கைத்துரோகம் அவதந்தரம் முதலியனவுடைய தனவந்தனைக்காட்டிலும், சீவகாருண்ணியமும் யோக்கியமுமுடைய வறியவன் மிக மேலானவனாவன். யோக்கியமாய் வாழ்வோன் கூலிவேலை செய்து பிழைத்தலும் இகழ்ச்சியாகாது. பொய் கூறி ஒருவனது பொருளை அபகரித்தலே இகழ்ச்சிக்குரியதாகும். அறிவீனரே வெளிவேஷத்தினால் மனிதரை மதிப்பர்; அறிவாளிகள் அறிவு ஒழுக்கம்யோக்கியம் முதலியவற்றினாலேயே ஒருவனை மதிப்பர்.



ஆதலால், ஒருவன், யோக்கியமான ஒழுக்கத்தினின்று வழுவாமல்தான் தற்காலமுற்றிருக்கும் நிலைமையில் சீர்மையும் நேர்மையும் பொருந்த வாழ்தலே அறிவாகும்.

## 159. வாப்பாவும்மாமரமும்ஓடையும்வந்தால் மாலுமிசாஸ்திரஞ்சொல்லுகிறேன்.

இதுஓர் உபகதையைப்பற்றி வழங்கும் பழமொழியாகும். அதன் சாராம்சம் வருமாறு:—

ஒரு மீகாமன் தன் மகனுக்கு ஒரு மாமரத்தின்கீழிருந்து நட்சத்திரங்களின் நிலைகளையுங் கதிகளையும் அம்மாமரத்தின் கொம்பர்களுக்கூடாகக் காட்டி, மாலுமிசாஸ்திரங் கற்பித்துவந்தான். மீகாமர்கள் நடுச்சமுத்திரத்தில் நடுநிசியில் திசையும் நேரமும் அறியவேண்டியது அவசியமாதலால், வானசாஸ்திர விஷயங்களிலுஞ் சில அறிவது மரபு.

மேற்சொல்லிய மீகாமனின் மகன், மாமரத்தடியிலிருந்து மாலுமிசாஸ்திரங்கற்றுப் பரீக்ஷையில் தேறினான். சிலநாட்கழிந்தபின், அவன் ஒரு கப்பலில் மாலுமித்தொழிலில் ஏற்பட்டு, முதன்முறையாய் ஓர் துறைமுகத்திற்கு அக்கப்பலைக்கொண்டு செலுத்தவேண்டியவனாயினான்.

ஓர்நாள் அக்கப்பல் நள்ளிரவில் நடுச்சமுத்திரத்தில் போகும்போது, புயலிலகப்பட்டுத் திக்குந் துறையுந் தெரியாமல் தன்போக்கிலே போகத் தொடங்கிற்று. கப்பலோட்டிகளோ திக்கும் நேரமுஞ் செல்லுமிடமும் அறியாமல் திகைத்தவர்க

ளாய் மாலுமியிடஞ்சென்று, செய்யத்தக்கது யாதென வினவினர். புதிய மாலுமி அப்போதுதான் நித்திரையினின்று விழித்தெழுந்தனர். அவர் இதற்குமுன் கப்பலைச் செலுத்திப் பயின்றவரல்லராதலாலும், அவர்கற்ற கல்விகளெல்லாம் மாமரத்தின்கீழேயேயாதலாலும், யாதொன்றுந் தெரியாமல் மயங்கி, மாமரமும் ஓடையுமெங்கேயென்று பார்த்தார். "ஓ! இல்லை" இப்போது தான் கப்பலிலிருப்பதாய் ஞாபகம் வந்தது.

ஓடையில்நின்று மாமரக்கொம்பர்களினூடாக, நட்சத்திரங்களைப் பார்த்தால்தான், அவருக்கு மாலுமிசாஸ்திரம் தெரியும். எனவே, அப்புதிய மாலுமி, கப்பல்வேலையாட்களைப் பார்த்து "வாப்பாவும் மாமரமும் ஓடையும் வந்தால் மாலுமிசாஸ்திரஞ் சொல்லுகிறேன்" என்று கூறினன்.

இப்பழமொழிக்கு இலக்கியமாகச் சில மாணவர்கள் கலாசாலைக் கல்விகளைக் கற்றுத்தேறியவுடன், தாம் பூரணமாய்க்கற்றுவிட்டதாயெண்ணி, தம் தகைமைக்கு மிக்க முயற்சிகளிலும் பதவிகளிலும் புகுந்து, வியவகாரசாதுரியமும் அநுபவமுமின்மையால், பிரதிகூலமெய்துகின்றனர்.

## 160. வேதத்திற்குஉலகம்பகை உலகத்திற்குஞானம்பகை.

வேதாந்த சாஸ்திரங்கள் உலகத்தைக் கயிற்றரவு கானநீர் இந்திரசாலம் கனவுலகு முதலியனபோலப் பொய்யானதென்றும், சீவர்கள் தேகேந்திரியாதிய பிரபஞ்சங்களைக் காணுதல் அவித்தையின் காரியமேயென்றுங் கோஷிக்கின்றன. ஆகலின், வேதத்திற்கு உலகம் பகையெனப்பட்டது.

இனி, உலகத்திற்கு ஞானம் பகையென்றது லௌகிகபோகங்களை உண்மையான இன்பமென்று கருதி அவற்றைப் பெறுதற்காகிய கர்மங்களைப் புரிவோருக்கும், முத்தியின்பமும் விடயானந்தம்போன்றதோரின்பமேயாமென்று கருதுவோருக்கும், உண்மைஞானம் பகையாகுமென்பது பற்றியென்க.



எவ்வாறெனில்: ஆன்மாவைத்தவிர, மற்றைய அனான்மத்துவங்களாகிய ஜகசீவர்களும் சுவர்க்காதியின்பங்களும் பொய்யென்றல் அன்னோரது மனோபாவத்திற்கு உவப்பாகாது.

உலகத்தவரிற் பெரும்பாலார் முத்தியென ஒன்றை விரும்புதல் அம்முத்தியிலும் இவ்வுலகில் அந்தக்கரணங்களினால் அநுபவிக்கப்படும் இன்பம்போன்ற ஓர்வித இன்பமுண்டென்றேயாம். மாயைக்குட்பட்ட அந்தக்கரணங்களின் இன்பத்தைக்கொண்டு, முத்தியின்பமும் அவ்விதத்தது என்று அநுமானித்தல் தவறாகும். உலகத்தவர் அவாவுடன் பற்றுகின்ற இவ்வுலக நடைகளே, ஞானிகளுக்கு நெஞ்சம் பகிரெனும் அச்சத்தைத் தருகின்றது. எனவே, சீவர்களின் மனோநிலைக்கேற்கவே விஷயங்கள் இன்பமெனவுந் துன்பமெனவுந் தோன்றுகின்றன என்று பெறப்படுகின்றது.

இதற்குத் திருஷ்டாந்தமாக: சிறுபிள்ளைகளின் சமுகத்தில், செயற்கையழகு செய்யப்பெறாதவளும் இயற்கையழகே வாய்ந்துள்ளவளுமாகிய ஒருபெண்ணையும், இயற்கையழகு அதிகமில்லாதவளும் செயற்கையழகில் கூத்துவேடம் பூணுவது போல மைப்பூச்சு நகைகளாதியவற்றினால் அலங்கரிக்கப்பெற்றவளுமாகிய ஒரு பெண்ணையும், நிறுத்தி, அவ்விருவரில் யார் அழகுள்ளவரென வினவின், அச்சிறுவர் கூத்துவேடம் பூண்ட பெண்ணையே அழகுடையவளென்பர். ஆனால், அழகின் தத்துவத்தை அறிந்தோர் இயற்கையழகு வாய்ந்தவளையே அழகியென்பர்.

அதுபோல, ஞானமெய்தாதவர்களும், அந்தக்கரணங்களினநுபவிக்கப்படுகின்ற விடயானந்தம்போன்றதொன்றே முத்தியின்பமும் என்று அநுமானிப்பர். ஆனால், மெய்ஞ்ஞானிகளோ "தோற்றுமுலகவையெல்லாந்தோற்றாதிருக்குஞ்சுக" மாகிய உபசாந்தநிலையே முத்தியெனக் கூறியிருக்கின்றனர். சாஸ்திரங்களும், தூலாருந்ததிநியாயம்பற்றிப் பலவித பக்குவிகளுக்கும் ஏற்றவாறு பலவிதங்கூறி, முடிவில் அந்நிலையே முத்தியென விளக்குகின்றன அந்நிலை, அவித்தையின் ஆவரணவிட்சேபசக்திக

ளினாற் பூரணமாய் மறைபட்ட சீவர்களின் மனோபாவத்திற்கு, பயங்கரமானதாயும் விருத்தமானதாயுமே தோன்றும். பக்குவமெய்திய சீவர்களுக்கே அந்நிலையில் பற்றுண்டாகும். ஞானிகளுக்குக்கூட, சிலபோது அந்நிலையில் பற்றுண்டாகாதபடி, இந்தமனமாயை தடைசெய்ய எத்தனித்தலுண்டென்பதை, இதன்கீழ்க்காணும் ஸ்ரீ தாயுமானசுவாமிகளின் திருப்பாடல் ஒன்றினால் அறியலாம். ஞானிகளையே மனமாயை இவ்வாறு தடுக்க எத்தனித்தலுண்டெனில், ஏழைமதியினரைத் தடுக்குமென்பதற்குக் கூறவும் வேண்டுமோ?

மேலே விரித்து விளக்கப்பட்டவற்றால், பிரபஞ்சமும், அதன்கணுள்ள இன்பங்களும் பொய்யெனவும், அந்தக்கரணங்களினால் அநுபவிக்கப்படும் இன்பங்கள் விபரீததுன்பங்களெனவும், பிரபஞ்சமாதியன தோற்றாத நிலையாகிய உபசாந்தநிலையே முத்தியின்பமெனவும் பெறப்பட்டன. இவ்வாறான கொள்கைகளைப் பக்குவரது மனம் இலகுவில் பற்றுதல் செய்யாது.

பிரமத்திற்கும், தனக்கும், மற்றைய ஜகசீவர்களுக்குமுள்ள சம்பந்தத்தை வேதாந்த சாஸ்திரப்படி உணராதவர்களுக்கு பிரபஞ்சமாதியன பொய்யென்ற கொள்கை நகைப்பிற்குரியதாகவே தோன்றும். இவ்வாறான காரணங்கள்பற்றியே உலகத்தவர்க்கு ஞானம் பகையெனப்பட்டது.

இதன்கீழ்க்காட்டப்பட்ட, மெய்ஞ்ஞானிகளின் திருப்பாடல்களிலுள்ள பிரமாணங்கள், மேற்சொல்லிய கொள்கைகளை வலியுறுத்துகின்றன. அவைகளில்,

## பிரபஞ்சம்பொய்யென்பதற்குப் பிரமாணங்கள்.

ஸ்ரீ தாயுமானசுவாமிகளின் திருப்பாடல்களிலுள்ளன வருமாறு:

"தேன்முகம்பிலிற்றும்பைந்தாட்செய்யபங்கயத்தின்மேவு
நான்முகத்தேவேநின்னால்நாட்டியவகிலமாயை
கான்முயற்கொம்பேயென்கோகானலம்புனலேயென்கோ
வான்மலர்முளரியென்கோமற்றென்கோவிளம்பல்வேண்டும்."



"கடத்தைமண்ணெனலுடைந்தபோதோவிந்தக்கருமச்
சடத்தைப்பொய்யெனலிறந்தபோதோசொலத்தருமம்"

"இந்திரசாலங்கனவுகானலினீரெனவுலகமெமக்குத்தோன்ற"
"இந்திரசாலமமையவொருகூத்துஞ்சமைந்தாடுமனமாயை"

"சகமனைத்தும்பொய்யெனவேதானுணர்ந்தாற்றுக்க
சுகமனைத்தும்பொய்யன்றோ"

"உண்டுபோலின்றாமுலகைத்திரமெனவுட்
கொண்டுநான்பெற்றபலன்கூறாய்பராபரமே"

"பொய்க்காலதேசமும்பொய்ப்பொருளில்வாஞ்சையும்
பொய்யுடலைமெய்யென்னலும்
பொய்யுறவுபற்றலும்பொய்யாகுநானென்னல்
பொய்யினும்பொய்யாகையான்
மைக்காலிருட்டனையவிருளில்லையிருவினைகள்
வந்தேறவழியுமில்லை
மனமில்லையம்மனத்தினமில்லைவேறுமொரு
வரவில்லைபோக்குமில்லை
அக்காலமிக்காலமென்பதில்லையெல்லா
மதீதமயமானதன்றோ"

"ஆதிக்கநல்கினவராரிந்தமாயைக்கென்
றறிவின்றியிடமில்லையோ
அந்தரப்புஷ்பமுங்கானலின்னீருமோ
ரவசரத்துபயோகமோ"

"எந்நாளுமுடலிலேயுயிராமுனைப்போ
லிருக்கவிலையோமனதெனு
மியானுமென்னட்பாம்பிராணனுமெமைச்சடம
தென்றனைச்சித்தென்றுமே
யந்நாளிலெவனோபிரித்தானதைக்கேட்ட
வன்றுமுதலின்றுவரையு
மநியாயமாயெமையடக்கிக்குறுக்கே
யடர்ந்தரசுபண்ணியெங்கண்

முன்னாகநீயென்னகோட்டைகொண்டாயென்று
    மூடமனமிகவுமேச
மூண்டெரியுமனலிட்டமெழுகாயுளங்கருகன்
    முறைமையோபதினாயிரஞ்
சொன்னாலுநின்னருளிரங்கவிலையேயினிச்
    சுகம்வருவதெப்படிசொலாய்
சுத்தநிர்க்குணமானபரதெய்வமேபரஞ்
    சோதியேசுகவாரியே"

"இறப்பும்பிறப்பும்பொருந்த—எனக்
    கெவ்வண்ணம்வந்ததென்றெண்ணியான்பார்க்கின்
மறப்புநினைப்புமாய்நின்ற—வஞ்ச
    மாயாமனத்தால்வளர்ந்ததுதோழி
சங்கரசங்கரசம்பு"

"காலமேகாலமொருமூன்றுங்காட்டுங்
    காரணமேகாரணகாரியங்களில்லாக்
கோலமே"

ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகளின் திருப்பாடல்களிலுள்ளன வருமாறு:—

"இந்திரஞாலங்காட்டியவியல்பும்"
"பொய்யாயினவெல்லாம்போயகலவந்தருளி"
"இந்திரஞாலம்போலவந்தருளி"

பட்டணத்துச்சுவாமிகளின் திருப்பாடல் வருமாறு:—

"மையாடுகண்ணியும்மைந்தரும்வாழ்வும்மனையுஞ்செந்தீ
ஐயாநின்மாயையுருவெளித்தோற்றமகிலத்துள்ளே
மெய்யாயிருந்ததுநாட்செலநாட்செலவெட்டவெறும்
பொய்யாய்ப்பழங்கதையாய்க்கனவாய்மெல்லப்போனதுவே"

திருவள்ளுவநாயனாரின் திருக்குறட்பாக்கள் வருமாறு:—

"சுவையொளியூறோசைநாற்றமென்றைந்தின்
வகைதெரிவான்கட்டேயுலகு"



"பொருளல்லவற்றைப்பொருளென்றுணரும்
மருளானாமாணாப்பிறப்பு"

"எப்பொருளெத்தன்மைத்தாயினுமப்பொருள்
மெய்ப்பொருள்காண்பதறிவு"

இனி, விடயானந்தம்போன்றில்லாத உபசாந்த நிலையே முத்தியின்பமென்பதற்கும், அதில் பெரும்பாலும் மனதிற்குப்பற்றின்மையும் பயங்கரமுமுளவாமென்பதற்கும், சத்துச்சித்தாயுள்ள ஆன்மா ஒன்றேயென்பதற்கும் பிரமாணங்கள்.

ஸ்ரீதாயுமானசுவாமிகளின் திருப்பாடல்களிலுள்ளன வருமாறு:

"கன்னிகையொருத்திசிற்றின்பம்வேம்பென்னினுங்
    கைக்கொள்வள்பக்குவத்திற்
கணவனருள்பெறின்முனேசொன்னவாறென்னெனக்
    கருதிநகையாவளதுபோல்"

"நீயற்றவந்நிலையேநிட்டையதினியிலையோ
வாயற்றவனேமயங்காதே—போயற்
றிருந்தாலுநீபோகாயென்றுமுள்ளாய்சும்மா
வருந்தாதேயின்பமுண்டுவா"

"சாலோகமாதிசவுக்கியமும்விட்டநம்பான்
மேலானஞானவின்பமேவுநாளெந்நாளோ"

"மாயைமுதலாம்வினைநீமன்னுயிர்நீமன்னுயிர்த்தேர்ந்
தாயுமறிவானதுநீயன்றோபராபரமே"

"நன்றெனவுந்தீதெனவுமெனக்கிங்குண்டோ
    நானாகிநீயிருந்தநியாயஞ்சற்றே"

"எடுத்ததேகம்பொருளாவிமூன்றுநீயெனக்கொன்றில்லை
    யென்மோனநன்னெறி"

"பந்தமறுமெய்ஞ்ஞானமானமோனப்
    பண்பொன்றையருளியந்தப்பண்புக்கேதான்

சிந்தையில்லைநானென்னும்பான்மையில்லை
    தேசமில்லைகாலமில்லைதிக்குமில்லை
தொந்தமில்லைநீக்கமில்லைபிரிவுமில்லை
    சொல்லுமில்லையிராப்பகலாந்தோற்றமில்லை
யந்தமில்லையாதியில்லைநடுவுமில்லை
    யகமுமில்லைபுறமுமில்லையணைத்துமில்லை"

தானான தன்மயமேயல்லாலொன்றைத்
    தலையெடுக்கவொட்டாதுதலைப்பட்டாங்கே
போனாலுங்கற்பூரதீபம்போலப்
    போயொளிப்பதல்லாதுபுலம்வேறின்றா
ஞானாகாரத்தினொடுஞேயமற்ற
    ஞாதுருவுநழுவாமனழுவிநிற்கு
மானாலுமிதன்பெருமையெவர்க்கார்சொல்வா
    ரதுவானாலதுவாவரதுவேசொல்லும்"

"பத்திநீபத்திக்கானபலனுநீபலவாச்சொல்லுஞ்
சித்திநீசித்தர்சித்தித்திறமுநீதிறமார்மோன
முத்திநீமுத்திக்கானமுதலுநீமுதன்மையான
புத்திநீயெனக்கொன்றுண்டோபூரணானந்தவாழ்வே"

"நானென்றுநீயென்றிரண்டில்லையென்னவே
    நடுவேமுளைத்தமனதைக்
கட்டவறியாமலேவாடினேன்"

"நன்றறியேன்தீதறியேன்நானென்றுநின்றவனார்
என்றறியேன்நானேழையென்னேபராபரமே"

"பாராதிநீயாப்பகர்ந்தாலகமெனவும்
ஆராயுஞ்சீவனுநீயாங்காண்பராபரமே"

"அறியாமையீதென்றறிவித்தவன்றேதான்
பிரியாவருணிலையும்பெற்றேன்பராபரமே"

"வானாதிதத்துவமாய்மன்னிநின்றகாரணநீ
நானாகிநிற்பதெந்தநாளோபராபரமே"



"மாயாசகமிலையேன்மற்றெனக்கோர்பற்றுமிலை
நீயேநானென்றுவந்துநிற்பேன்பராபரமே"

"நாதமேநாதாந்தவெளியேசுத்த
    ஞாதுருவேஞானமேஞேயமேநல்
வேதமேவேதமுடிவானமோன
    வித்தேயிங்கென்னையினிவிட்டிடாதே"

"இமைப்பொழுதேனுந்தமக்கெனவறிவிலா
ஏழையுயிர்த்திரள்வாழவமைத்தனை"

"வேதாவையிவ்வணம்விதித்ததேதென்னினுன்
    வினைப்பகுதியென்பனந்த
வினைபேசவறியாதுநிற்கவிவைமனதால்
    விளைந்ததான்மனதைநாடில்
போதமேநிற்குமப்போதத்தைநாடிலோ
    போதமுநினால்விளக்கம்
பொய்யன்றுதெய்வமறையாவுமேநீயென்று
    போக்குவரவறநிகழ்த்தும்
ஆகாரவாதேயமுழுதுநீயாதலால்
    அகிலமீதென்னையாட்டி
ஆடல்கண்டவனுநீஆடுகின்றவனுநீ
    யருளுநீமௌனஞான
தாதாவுநீபெற்றதாய்தந்தைதாமுநீ
    தமருநீயாவுநீகாண்
சர்வபரிபூரணவகண்டதத்துவமான
    சச்சிதானந்தசிவமே"

"வேதாகமத்துணிபிரண்டில்லையொன்றென்னவே"

"வேதமுடனாகமபுராணமிதிகாசமுதல்
    வேறுமுளகலைகளெல்லா
மிக்காகவத்துவிததுவிதமார்க்கத்தையே
    விரிவாவெடுத்துரைக்கும்

ஓதரியதுவிதமேயத்துவிதஞானத்தை
யுண்டுபண்ணுஞானமாகும்
ஊகமனுபவவசனமூன்றுக்குமொவ்வுமீ
துபயவாதிகள்சம்மதம்"

சிவவாக்கியர் திருப்பாடலிலுள்ளன வருமாறு:—

"மின்னெழுந்துமின்பரந்துமின்னொடுங்கும்வாறுபோல்
என்னுள்நின்றவென்னுளீசனென்னுளேயடங்குமே
கண்ணுணின்றகண்ணில்நேர்மைகண்ணறிவிலாமையால்
என்னுணின்றவென்னைநானியானறிந்ததில்லையே"

"ஒன்றுமொன்றுமொன்றுமேயுலகனைத்துமொன்றுமே
அன்றுமின்றுமொன்றுமேயனாதியானதொன்றுமே"

"ஆதியானதொன்றுமேயனேகரூபமாயமாய்ப்
பேதபேதமாயெழுந்துசர்வசீவனானபின்
ஆதியோடுகூடிமீண்டெழுந்துசன்மமானபின்
சோதியானஞானியாருஞ்சுத்தமாயிருப்பரே"

"என்னகத்துளென்னைநானெங்குநாடியோடினேன்
என்னகத்துளென்னைநானறிந்திலாததாகையால்
என்னகத்துளென்னைநானறிந்துமேதெரிந்தபின்
என்னகத்துளென்னையன்றியாதுமொன்றுமில்லையே"

"அவனுமுண்டுநானுமில்லையாருமில்லையானதே"
"உருக்கலந்துநின்றபோதுநீயுநானுமொன்றலோ"

"நானிலாததொன்றுமில்லைநானுமில்லைநண்ணிடில்
தானிலாததொன்றுமேதயங்கியாடுகின்றதே"

"தானுவாகநின்றசீவன்தான்சிவமதாகுமே"
"பண்ணியுன்னியாய்ந்தவர்பரப்பிரமமாவரே"

"உயிர்சிவத்தின்மாயையாகியொன்றையொன்றுகொன்றிடும்
உயிர்சத்திமாயையாகியொன்றையொன்றுதின்னுமே"



திருமூலநாயனார் திருமந்திரம் வருமாறு:—

"நானென்றுந்தானென்றுநாடிநான்சாரவே
தானென்றுநானென்றிரண்டிலாத்தற்பதந்
தானென்றுநானென்றதத்துவநல்கலாற்
றானென்றுநானென்றுஞ்சாற்றகில்லேனே"

தேவாரம் வருமாறு:—

"பாஞ்சபூதிகத்துண்ணின்றபண்பனை
ஆய்ந்து ஆய்ந்து அறிவாலறிந்தபின்
தேய்ந்துதேய்ந்துசிவமல்லதில்லையென்
றோய்ந்துபோனதென்னுள்ளமுள்ளமே"

ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகளின் திருப்பாடல்களிலுள்ளன வருமாறு:—

"இன்றெனக்கருளியிருள்கடிந்துள்ளத்
தெழுகின்றஞாயிறேபோன்று
நின்றநின்றன்மைநினைப்பறநினைந்தே
னீயலாற்பிறிதுமற்றின்மை
சென்றுசென்றணுவாய்த்தேய்ந்துதேய்ந்தொன்றாந்
திருப்பெருந்துறையுறைசிவனே
யொன்றுநீயல்லையன்றியொன்றில்லை
யாருன்னையறியகிற்பாரே"

"வான்கெட்டுமாருதமாய்ந்தழனீர்மண்கெடினும்
தான்கட்டலின்றிச்சலிப்பறியாத்தன்மையனுக்
கூன்கெட்டுயிர்கெட்டுணர்வுகெட்டென்னுள்ளமும்போய்
நான்கெட்டவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ"

"வானாகிமண்ணாகிவளியாகியொளியாகி
யூனாகியுயிராகியுண்மையுமாயின்மையுமாய்க்
கோனாகியானெனதென்றவரவரைக்கூத்தாட்டு
வானாகிநின்றாயையென்சொல்லிவாழ்த்துவனே"

"ஈசனேநீயல்லதில்லையிங்குமங்குமென்பதும்
பேசினேனோர்பேதமின்மை"

"யானேபொய்யென்னெஞ்சும்பொய்யென்னன்பும்பொய்"

"வேதமும்வேள்வியுமாயினார்க்கு
மெய்ம்மையும்பொய்ம்மையுமாயினார்க்குச்
சோதியுமாயிருளாயினார்க்குத்
துன்பமுமின்பமுமாயினார்க்குப்
பாதியுமாய்முற்றுமாயினார்க்குப்
பந்தமுமாய்வீடுமாயினாருக்
காதியுமந்தமுமாயினாருக்
காடப்பொற்சுண்ணமிடித்துநாமே"

"ஒன்றாய்முளைத்தெழுந்தெத்தனையோகவடுவிட்டு"

"பித்தவுலகிற்பிறப்போடிறப்பென்னுஞ்
சித்தவிகாரக்கலக்கந்தெளிவித்த"

"பேதைகுணம்பிறருருவம்யானெனதென்னுரைமாய்த்து"

ஸ்ரீ தத்துவராயசுவாமிகளின் திருப்பாடலிலுள்ளன வருமாறு:

"தன்னால்விளையுஞ்சகசீவபரந்
தன்னாலழியுந்தனதாம்விழியால்
என்னாலெனையென்னிலெனக்கருளு
மன்னேயடியேனபயமபயம்"

"கானலைநீரென்றுணர்ந்துகரையுந்திரையுநுரையுங்கண்டாற்
போல், தானல்லாவூனைத்தானாக்கிச்சாத்திரகோத்திரஞ்சாற்றுகி
ன்றாரே"

"பாத்திரபேதத்தினாலேபலகோடியிரவிகள்பேதமானாற்போல்
நேத்திரமானபிரமநிகரிற்ப்ரபஞ்சமுமாயுதித்தானே"

"பொன்னையொழியச்சவடிகாறையில்லையாற்போல்
புவனங்கள்பதினாலுமிருந்தபடிபார்க்கில்



என்னையொழியப்புவனமேதுமில்லையென்றிட்
டிரவுபகலனவரதமறையுமேடாபறையை"

"என்னிலேயாவையுங்கண்டிடலாவதும்
யாவையுளென்னையுங்கண்டிடலாவதும்
அன்னியங்கண்டிலோமென்றிடலாவதும்
அறிவேவடிவாயிருந்திடினல்லவோ"

"ஆதிப்பிரமமறியாமைதன்னாலே
பேதித்துத்தோன்றிற்றென்றிம்பிலடி
பிறப்பிறப்பில்லையென்றிம்பிலடி

வந்தபிறவியும்வானாதிபூதமும்
இந்திரசாலமென்றிம்பிலடி
யென்க்கழிவில்லையென்றிம்பிலடி.

ஏகமேயல்லாலிரண்டில்லையத்விதப்
போகமேயானோமென்றிம்பிலடி
. புலன்வழிகெட்டதென்றிம்பிலடி.

அண்டத்தையெல்லாமறிவேபடைத்தமை
பிண்டத்தைக்கெட்டோமென்றிம்பிலடி
பேதமற்றில்லையென்றிம்பிலடி."

"தானேநானென்றுபோனானவன்
றன்னையுங்கண்டிலேனென்னையுங்காணேன்"

"ஊனேமறிவதென்றூதேடாகாளம்
நானேயவனாமென்றூதேடாகாளம்
நானாவதில்லையென்றூதேடாகாளம்"

"செறிவாகியிருந்தவர்தாமேசீவன்சிவனென்னவிரண்டாய்ப்
பிரியாவகைநின்றமைபாரீர்பிறவிப்பகையற்றமைபாரீர்.

அறிவோடறியாமையிரண்டும் அணுகாதணுகிச்சகமாகிப்
பிரியாவகைநின்றமைபாரீர்பிறிவிற்றனிலாதமைபாரீர்

புரியாரரவானமைபோலேபோதத்துலகங்களுதித்துத்
தெரியாவகைநின்றமைபாரீர்தெரியிற்றெளிவானமைபாரீர்."

"பொய்க்கனவும்பேய்த்தேரும்போலுமுடல்போமளவுஞ்
சிக்கெனவேநாதன்றிருவடியை—நெக்குருகிப்
பூண்டுவிடாதேகிடந்துபோற்றியிடுநெஞ்சேநீ
மீண்டுபிறவாதேவிட."

மேலே எடுத்தாளப்பட்ட பாடல்களில் "நானுண்டு" என அர்த்தம் பயக்குமிடங்களில், "நான்" என்பதற்குப் பொருள் அதிட்டான நானாகிய கூடஸ்த சைதன்னியப் பிரத்தியகான்மா எனவும், "நான்பொய்" என அர்த்தம் பயக்குமிடங்களில் "நான்" என்பதற்குப் பொருள் ஆரோபநானாகிய சிதாபாசன் எனவும் பொருள்கொண்டு நோக்கினால், வேதாந்த அத்துவிதக் கருத்துத் தெளிவாய் விளங்கும்.

# பிழைதிருத்தமும் கூட்டவேண்டியனவும்.

| பக்கம். | வரி. | விஷயம். |
|---|---|---|
| | | முகவுரையில் "இராம அரணை" என்றதை "இராம ரணை என்று வாசிக்க. |
| 18 | 21 | கடனாகும் என்பதற்கு அருகிலுள்ள முடிப்பிசைக் குறியைத் தொடர்பிசைக்குறியாக்குக. |
| 28 | 18 | யாது என்பதற்கருகே முடிப்பிசைக்குறியிடுக. |
| 38 | 8 | தலைவனாக என்றதை தவனாக என்று வாசிக்க. |
| 40 | 7 | நானாதவாது என்றதை நானாதவா என்றுவாசிக்க. |
| 44 | 22 | யாத என்றதை யாத் என்று வாசிக்க. |
| 50 | 6 | பின்பற்றுகின்றார்கள் என்றதை பின்பற்றுகின்றான் என்று வாசிக்க. |
| 72 | 4 | ஒவ்வொருவரும் நான் நான் என்பது என்னஎன்று ஆராய்பவர் மிகச் சிலரேயாவர் என்ற வசனத்தை நீக்கிவிட்டு, அவ்விடத்தில் நாம் ஒவ்வொருவரும் நான் நான் என்று அடிக்கடி மொழிகின்றோம். ஆனால் நான் என்பதற்குப் பொருள் என்ன என்று ஆராய்பவர் மிகச் சிலரேயாவர் என்ற வசனத்தைக்கூட்டுக. |
| 72 | 19 | அவ்விரண்டுமல்லாச் என்றதற்கருகே "சீவர்களாயினர். இங்ஙனங் கூறினமையால்" என்ற பதங்களைக் கூட்டுக. |
| 75 | 11 | காரணங்களும் என்றதை உபகரணங்களும்என்று வாசிக்க. |
| 77 | 26 | அன்சி என்றதை அஞ்சி என்று வாசிக்க. |
| 78 | 29 | பிரியமானவர்களிடத்தில் என்பதற்கருகே "ஒரு விதமாகவும் அப்பிரியமானவர்களிடத்தில்" என்னும்பதங்களைக் கூட்டுக. |
| 87 | 27 | பிச்சைக்குப்போனவன் என்ற பதங்களுக்குமுன்னுள்ள எடுத்துக்காட்டுக்குறியை பிச்சை தரவேண்டாம் என்ற பதங்களுக்கு முன்னிடுக. |

| பக்கம். | வரி. | விஷயம். |
|---|---|---|
| 93 | 25 | மனோபாவத்திற்கும் என்றதை மனோபாவத்திற்கு என்று வாசிக்க. |
| 97 | 9 | ஸ்பாவ என்றதை ஸ்வபாவ என்று வாசிக்க. |
| 97 | 28 | நாண என்றதை நாணய என்று வாசிக்க. |
| 108 | 9 | தடுக்குமென்பதற்கு என்றதை தடுக்குமென்பது என்று வாசிக்க. |
| 108 | 15 | பக்குவரது என்றதை அபக்குவரது என்றுவாசிக்க. |
| 109 | 20 | றறிவின்றி என்றதை னறிவின்றி என்று வாசிக்க. |
| 114 | 10 | பொன்றுமே என்றதை மொன்றுமே என்றுவாசிக்க. |
| 115 | 22 | தான்கட்டலின்றி என்றதை தான்கெட்டலின்றி என்று வாசிக்க. |
| 117 | 17 | பிண்டத்தை என்றதை பிண்டத்தே என்றுவாசிக்க. 21 வது வரிக்குப்பின் "உணர்வே பிரமமென்றாதே டாகாளம்" என்ற பதங்களைக்கூட்டுக. |
| 118 | 9 | அதிட்டான் என்றதை அதிட்டான என்றுவாசிக்க. |